வாரப் பதிப்பு விலை சதம் 25

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம்19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 ஆடி திங்கள் 24-ம் நாள் (8—8—1965) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகி 10 | இதழ் 11

# சிங்களக் கெடுபிடி தளருகிறது

## அரசாங்க ஊழியர்களுக்கு அளித்துள்ள சலுகைகள்

தமிழ் அரசாங்க ஊழியர் மீது திணிக்கப்பட்டிருந்த சிங்களக் கெடுபிடி சிறிது சிறிதாக தளர்த்தப்பட்டு வருகிறது. பழைய சேவையாளர்களைச் சிங்களம் மட்டும் சட்டம் எந்த வகையிலும் பாதிக்கமாட்டாது. புதிய சேவையாளர்களைப் பொறுத்தவரையில் முன்னைய அரசாங்கம் விதித்திருந்த பல இடர்ப்பாடான கட்டுப்பாடுகளை இப்போதைய அரசாங்கம் நீக்கியுள்ளது. குறுப்பாக, புதியசேவையாளர்களை பதவியில் உறுதிபடுத்துவதற்கு சிங்களத்தில் கடமையாற்றுவதற்கான அறிவு பெற்றிருந்தாற் போதும் என்று தேசிய அரசு முடிவு செய்துள்ளது. சிங்களத் தகைமை பெறவில்லை யென்ற காரணத்திஞல் நிறுத்தி வைக்கப்பட்ட சம்பள உயர்வு, பதவி உறுதி செய்யப்பட்டதும் வேலையிற் சேர்ந்த நாளிலிருந்து கணிக்கப்பட்டு கொடுக்கப்படும் என்று தெரிகிறது.

1956 செப்டம்பர் 24-ம் திகதிக்குப் பின்னர் அரச சேவையிற் சேர்ந்த புதிய சேவையாளர்களுக்கு முந்திய அரசாங்கம் விதித்திருந்த பல கெடுபிடிகள் தற்பொழுது தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. முந்திய அரசாங்கம் புதிய சேவையாளரை சேவையில் உறுதிப்படுத்துவதற்கு பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தது.

கடமைக்கான அறிவு

இப்பொழுது சிங்கள மொழியில் கடமையாற்றுவதற்கான (Working Knowledge) அறிவு பெற்றிருந்தால் புதிய சேவையாளர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்படுவார்களாம். சிங்கள மொழியில் கடமையாற்றுவதற்கான அறிவைப் பெறுவதற்கு சிங்கள மொழியில் ஏழாம் வகுப்புப் பரீட்சையில் சித்தியெய்திருந்தால் போதும் என்று அமைச்சரவை வட்டாரங்கள் கருதுவதாக அறியப்படுகிறது.

அண்மையில் கூடிய அமைச்சரவையின் கூட்டத்தில் புதிய சேவையாளர் பற்றி எடுக்கப்பட்ட தீர்மானத்தை யொட்டி அமைச்சரவை வட்டாரத்தில் கூறப்படுவதாவது:

புதிய சேவையாளர்கள் மூன்றுவருடகாலத்துள் சிங்களமொழியில் கடமையாற்றுவதற்குத் தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த நிலையை அவர்கள் அடைந்ததும் அவர்களின் சேவை உறுதிப்படுத்தப் படும்.

சம்பள உயர்வு

பதவி உறுதிப்படுத்தப்பட்டதும் அவர்கள் சேவையிற் சேர்ந்த நாள்முதல் பெறத் தவறிய பழைய சம்பள உயர்வுப் பாக்கிகளும் வழங்கப்படும். முந்திய அரசாங்

(9-ம் பக்கம் பார்க்க)

## கலாச்சார முகமூடியில் ஒரு 'காங்கிரஸ்' உதயம்

### தமிழ் ஊழியர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த முயற்சி

மொழி வழி பிரிந்து ஒன்றுபட்டு நிற்கும் தமிழ் அரசாங்க ஊழியர் மத்தியில் பிளவை ஏற்படுத்தும் முயற்சியில் ஒரு சிலர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. இம் முயற்சிக்கு சட்ட வரைவுத் திணைக்களத்தைச் சேர்ந்த ஒருவரும் திறைச்சேரியைச் சேரந்த மற்ருெருவருமே காரணம் என்று நம்பப்படுகிறது.

தேசிய தொழிற் சங்கங்கள் தமிழ் ஊழியர்களின் நலனைப் புறக்கணித்து சிங்கள ஊழியர்களின் உயர்வுக்காக செயற்படத் தொடங்கியதும் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் மொழி வழி பிரிந்து தனியியக்கம் கண்டனர்.

முதலில் தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் பலதரப்பட்ட ஊழியர்களையும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாகச் சங்கம் அமைத்து, இன்று இருபதுக்கு மேற்பட்ட சங்கங்கள் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் தோன்றியுள்ளன. இவற்றின் இணைப்பு இயக்கமாக தமிழ் பேசும் ஊழியர் தொழிற் சங்க சம்மேளனமும் அமைக்கப்பட்டுள்ளது.

(9-ம் பக்கம் பார்க்க)

## "திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மந்திரியாவார்"

"அமைச்சர்களின் எண்ணிக்கை விரைவில் 18-ஆக உயர்த்தப்படவிருக்கிறது. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலமே இந்தப் புதிய அமைச்சர்.


ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்திற் பங்கு பற்றும் இலங்கைத் தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்கவிருக்கும் திரு. பொன்னம்பலம் நியூயோர்க்குக்குப் புறப்பட சில தினங்களுக்கு முன்பே அமைச்சராக விசுவாசப் பிரமாணம் செய்துகொள்வார்.

திரு. பொன்னம்பலம் ஆகஸ்ட்டு 28-ந் திகதி நியூயோர்க்குப் புறப்படவிருக்கிறார்.

திரு. பொன்னம்பலத்துக்கு அமைச்சர் பதவியொன்றினை வழங்குவதென கருதியதற்குக் காரணம் சாதாரண ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஐ. நா.வுக்குச் செல்லும் தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்க முடியாமலிருப்பது தான். அமெரிக்காவிலிருக்கும் இலங்கைத் தூதர் திரு. எம். எப். டி. எஸ். ஜயரத்ன சாதாரண ஒரு பாராளுமன்றப் பிரதி நிதியைவிட அதிகமான அதிகாரங்களை தனது பதவியின் மூலம் பெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும். திரு. பொன்னம்பலத்துக்கு அமைச்சர் பதவியை அளித்தால் அவர் தூது கோஷ்டிக்குத் தலைமை தாங்க முடியும்.

தற்போது தோன்றியுள்ள சிக்கலைத் தவிர்ப்பதற்காகத்

(8-ம் பக்கம் பார்க்க)



ஆடம்பரம் எதுவுமின்றி, அடியார்க்கு அடியனாய் ... தன் அமர்ந்திருந்து அருள் கரக்கிரம் வதிர் ... இடம்.

அருத
எண்ணெய்

பல்லாண்டு காலமாக பல்லாயிரக் கணக்கான பாவனையாளர்களுக்கு பயன் நல்கி வரும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்!

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட, ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்த எண்ணெய்— அறுபதாம் பச்சை எனும் தமிழ் மூலிகையையும் வேறு ஆயுர்வேத மூலிகைகள் நாற்பத்திநான்கினையும் சேர்மானமாகக் கொண்டது.

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத்தக்க பலன் அளிக்கவல்லது!

இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்......... கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும். தலைமயிர் உதிர்வதும், நரைப்பதும் நிற்கும். மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாகும். நீங்காத ஜலதோஷமும், பீனிசமும் நீங்கும்.

அதுமட்டுமா?

கண்—தலை—காது—மூக்கு
சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

—அருத எண்ணெய்—
இலங்கையடங்கிலுமுள்ள எல்லா வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—

தயாரிப்பாளர்:
பி. எம். திசாநாயக்க,
—நான்கு கோவில்களின் தர்மகர்த்தா—
அருத எண்ணெய் தொழிலகம்,
கண்டி றேட், கம்பளை.
போன் : 454.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 29 'செம்பட்டை' இளைஞனும் செங்கமலப் பூவும்!

"மார்பளவு தண்ணியில மன்னி மன்னிப் போற மச்சி-உந்தன்,
மார்புக்கு மேலேயுள்ள மாதளங்கா என்னவில?"
"மாதளங்காயுமல்ல மருக்காலம் பிஞ்சுமல்ல-எந்தன்,
பாலன் விளையாடும் பால்முலடா சண்டாளா!"
---மட்டக்களப்பு நாட்டுப் பாடல்கள்.

ஐரோப்பியனுகவும் இல்லாமல்; ஆசியாக்காரனுகவும் இல்லாமல் திரிசங்கு நிலையில் தோற்றமளித்த அந்தச் செம்பட்டை இளைஞனுக்கும், தாமரகுமாரிக்குமுள்ள பிணைப்பை-உறவை-மர்மத்தைப் புரிந்துகொள்ளவேண்டும் என்ற துடிப்பு நாளுக்கு நாள்கணேசனுள் கொழுந்துவிட்டு எரியலாயிற்று.

புத்தவிஹாரத்து முருகன் சன்னதியில் அவனும், இலட்சுமியும் கண்ட காட்சி எப்படிக் கணேசனுடைய உள்ளத்தில் அருக்களிப்பையூட்டியதோ; அதைவிட அருசையான முறையில் கங்கையில் குளித்துக் கொண்டிருக்கும் போது அங்கு நிகழ்ந்த சம்பவம் அருவருப்பைத் தந்தது அவனுக்கு!

தாமரகுமாரியின் குளிக்கும் அழகில் தங்களை மெய்மறந்திருந்த கணேசனும், குமரனும், தாமரகுமாரி, 'குளிக்கவில்லையா?' என ஞாபகமூட்டியதன் பேரில் 'தொபுகட' ரென்று கங்கையில் பாய்ந்த சிறிது நேரத்தில், 'விதிவிலக்கான' தோற்றமுடையஅந்தச்செம்பட்டை இளைஞனும் கங்கையில் பாய்ந்தானல்லவா? அப்படிப் பாய்ந்தவன், சற்றுத் தூரத்தில் குளித்துக்கொண்டிருந்த தாமரகுமாரியை இலக்கு வைத்துக்கொண்டு நீந்திச்சென்றவன், அவளை நெருங்கியதும் 'இடி இடி' யெனச் சிரித்தான். அந்தச் சிரிப்பைக் கேட்டவுடன், தாமரகுமாரியின் இனிய முகத்தில் ஏற்பட்ட கலவரக் குறி, அவள் முகத்துக்குஅழகு முலாம் பூசியது! மலங்க மலங்க மலர்விழிகளால் வந்தவனைப் பார்த்தபடியே அவள் அப்படியே நின்றுவிட்டாள். சிரித்துவிட்டு ஒய்ந்த அந்தச் செம்பட்டை இளைஞன், முருகன் சன்னதியில் வைத்து உரையாடிய பாணியில் ஏதோ அவளிடம் 'குசுகுசு' மந்திரம் ஓதினுன். மந்திரத்துள் கட்டுண்ட 'தெய்வக்காரி'போல்தாமரகுமாரியும் தலையை அசைத்து அவன் கோரிக்கைக்கு ஒப்புதல் தெரிவித்துக்கொண்டு, நீருள் தலைபுதைத்துக் குளிக்கத் தொடங்கிவிட்டாள். அப்படிக் குளித்தவள், அடுத்தகணமே அப் பிரதேசம் முழுவதும் தன் அங்கங்களின் தூய்மையான அசைவின் துணையால் கிறங்கித்தவிக்க வைத்துக்கொண்டு கரையேறத் தொடங்கிவிட்டாள். என்ன கொடுமை? அவள் அப்படிக் கரையேறினுளோ இல்லையோ; அப்பொழுது தான் குளிக்க ஆரம்பித்திருந்த அந்தச் செம்பட்டை இளைஞனும்,ஏதோ ஒரு சிங்களப்பாட்டை கர்ணகடூரமாய் உரக்கப் பாடிக்கொண்டு கரையேறத் தொடங்கிவிட்டான்!

இக்காட்சிகளைக் கண்ணுற்ற கணேசனின் உள்ளத்தில், சற்றுமுன் நிரம்பியிருந்த இனிய எண்ணங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயின. கங்கை நீரின் ஜில்லென்ற தன்மையையும் விஞ்சிக்கொண்டு அவன் உடலிருந்து சூடு பிறந்தது.

வாயுள் புகுந்த நீரைக் 'கொப்புளித்து'க் கொண்டு குமரன் கேட்டான்: 'என்னடா கணேசா! சிவபூஜைக்குள் கரடி புகுந்தமாதிரி இங்கு ஒரு 'செங்கரடி' புகுந்து ஏதோ அமர்க்களம் பண்ணிக்கொண்டு போகின்றது?'

'குமரா! இது ஒரு மர்மக் கரடி அனிச்சம் பூவைவிட மென்மையான தாமரகுமாரியை இந்தக் கரடி ஏதோ தொல்லை கொடுத்துக் கொண்டே வருகின்றது. நானும்தான் சிலநாட்களாக இதன் நடமாட்டத்தைக் கவனித்துக்கொண்டே வருகின்றேன். ஒரு துப்பும் கிடைக்கமாட்டேன் என்கின்றது. தாமரகுமாரியிடம் கேட்டாலோ, அவளிடமிருந்து தெளிவான பதில் கிடைக்கமாட்டேன்என்கின்றது. அவள் கூறுகின்ற பதிலில் தெளிவு இருந்தாலும், அதை முற்றுகப் புரிந்துகொள்வதற்கு என்னிடத்தில் சிங்களத் தெளிவு வேறு இல்லை! அன்று வெஸாக் தினத்தில்கூட ஒரு சம்பவம் நிகழ்ந்தது. இதே மர்ம இளைஞன் தாமரகுமாரியைச் சந்தித்து நிர்ப்பந்த பாவனையில் ஏதோ பேசித் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தான். அவன் என்ன பேசினுன்? ஏது கூறினுன்? என்பதைத் தெரிந்து கொள்வதற்கு. அன்று என் கூடவே நின்ற இலட்சுமி டீச்சரும் சுற்றி வளைத்துத் தாமரகுமாரியிடம்பேச்சுக்கொடுத்துப் பார்த்தாள். ஆனுல், தாமரகுமாரியோ பிடியேதும் கொடுக்காமல் மிகச் சாமர்த்தியமகச் சமாளித்து மழுப்பி விட்டாள். சரி, சரி! தாமரகுமாரி எங்கே போகிருள்; அந்தச் செம்பட்டை மனிதன் எங்கே போகிறுன் என்பதைப் பார்த்து விடுகின்றேன்'

கணேசனின் நீண்ட பிரசங்கத்தைச்செவிமடுத்த குமரன் சிரித்துச் கொண்டு சொன்னுன்: 'கணேசா!யார் எப்படிப் போனுல் நமக்கென்ன; இந்த விஷப் பரீட்சைகளிலெல்லாம் நீதலையை மாட்டாமல் உன் பாட்டில் பேசாமல் இரு.'

குமரனின் உபதேசத்தைக் கேட்ட கணேசன் தலையை மேலும் கீழுமாக ஆட்டிக்கொண்டு உதட்டால் மட்டும் சிரித்துக் கொண்டான். அந்தச் சிரிப்பு, குமரனின் உபதேசத்தையும், தாமரகுமாரி மீது கணேசனுக்கேற்பட்ட தெய்வீகத்தொடர்பை மிக நுணுகிப் பாராமல் இருக்கும் குமரனுடைய பரிதாப நிலையையும் எள்ளி நகையாடியது!

கணேசனின் உள்ளத்தை ஒரு சமயம் மலர் போல வருடி; பிறிதொரு சமயம் முள்போல உலுத்தி அவனைச் சாகவும், வாழவும் வைத்துக் கொண்டிருந்த தாமரகுமாரி என்கின்ற மகாசக்தியைமூடியிருந்த மர்மம் எதிர்பாராத வகையில் ஒரு நாள் மறைந்த சம்பவம் மிகுந்த சுவை மிக்கது.

தன்னுடையவிருந்தினனுக வருகை தந்திருந்த குமரனை, இன்று மிகுந்தஆர்வத்துடன் தன்னுடைய பாடசாலைக்கு அழைத்துச் சென்றிருந்தான் கணேசன். தலைமையாசிரியருக்கும், அங்கிருந்த உதவியாசிரியருக்கும் அவனை அறிமுகம் செய்ததோடு நில்லாமல், அவனுக்காகத் ஆது சென்ற அந்த இரண்டாம் வகுப்பு கிருஷ்ணனையும் கூட அறிமுகம் செய்து வைத்தான் கணேசன்!

குமரனுக்கு என்னவோ இந்த அறிமுகங்கள் எல்லாம் பத்தியமாக இருக்கவில்லை. கணேசனைத் தன் இனிய மூச்சுக் காற்ருல் அடிக்கடி சுட்டுக்கொண்டேயிருந்த இலட்சுமி டீச்சரைப் பார்க்கும் வரை அவனுக்கு எந்தநிகழ்ச்சிகளும்மனதில்தாங்கவில்லை. இதைமுற்ருக உணர்ந்திருந்த கணேசன் பொருட்பொதிவுடன் தனக்குள் சிரித்துக் கொண்டு, 'என்ன கவிதாரத்தினத்துக்கு 'மூடே' வர மாட்டேன் என்கின்றதே! என்ன சமாச்சாரம் என்பதை இந்த ஏழை ஆசிரியன் தெரிந்து கொள்ளலாமோ?' என்று கேட்டு அவனுடைய எரியும் உள்ளத்தில் எண்ணெய் ஊற்றினுன்.

'இத்தனை உற்சாகமாக உணவு பரிமாறிய நீ, உப்புத் தராமல்விட்டுவிட்டாயேடா சண்டாளா'என்ருன்குமரன்.

'உப்பா? கொஞ்சம் இரு; நீ தேடும் 'உப்பு' தினமும் பாடசாலைக்குச் சற்றுத் தாமதித்தே வருவது வழக்கம். இன்னும் பத்து நிமிடத்துள் அந்த 'உப்பு' வந்து விடும், என்று சமாதானம் கூறினுன் கணேசன்.

கணேசன் கூறியது போல் இலட்சுமி வருவதற்குப்பத்து நிமிடம் எடுக்கவில்லை. அவன் அப்படிக்கூறிப் பத்து விநாடிகளுக்குள்ளேயே வேர்க்க விறு விறுக்க அவள் வந்து விட்டாள்.

கீழ்த்தளஉள்ளுக்குவளைத்து 'பூ' என்று ஊதிவேர்வையின் 'பிசு பிசு'ப்பை மரிக்கப் பண்ணிக் கொண்டு வந்த இலட்சுமியை மிகுந்த கலகலப்புடன் வரவேற்ற கணேசன், குமரனுக்கு அவளைஅறிமுகம் செய்து வைத்தான். புதிய மனிதனின் முன் அவள் இளநகையுடன் தலை குனிந்து நின்ற அந்தச் சிறுபொழுதினில், கணேசன் குமரனைப் பார்த்துத் தன் கண்களாலேயே 'எப்படி?' என்று கேட்டு வைத்தான்.

சுற்று முற்றும் பார்வையைச் செலுத்திக் கொண்டு, இரகசியமாகக் குமரன் சொன்னுன்; 'டேய் முட்டாள்! நீ உண்மையில் கொடுத்து வைத்தவன்தானடா' என்று.

அன்று பாடசாலை ஒரேகலகலப்பாக இந்தது.குமரனும் தன் பங்கில் ஒரு வகுப்பை எடுத்துக்கொண்டு, 'கௌரவ ஊழியனுக'ப் பாடம் சொல்லிக்கொடுத்தான்.

பாடசாலை விட்டதும், ஏற்கனவே போட்டிருந்த திட்டத்தின் படி கணேசனும் குமரனும் மலைச்சிகரத்தில் மனோரம்மியமாகவீற்றிருந்த வெள்ளைக்காரத்துரையின் பங்களாவில்காலடியெடுத்து வைத்தனர்.

தாமரகுமாரியைப் பற்றியும், அந்தச் செம்பட்டை இளைஞனை பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டியிருந்த மர்மம், துரையின் அந்தப் பங்களாவில் வைத்துக் கணேசனுக்குச் சற்றும் எதிர்பாராத வகையில் துலாம்பரமாகியது.

## வருவாய் முருகா!

—துரையூர் நாதி—

மஞ்ஞை மகிழ்ந் தாடுதிருக் கதிரை
மலைமே லமர்ந்ததிரு முருகா!
அஞ்ஞான இருள்கடிய வருவாய்!
அகிலமெலா மருள்வடிவே தருவாய்!

மின்னலொளி வடிவேல வருவாய்!
வேண்டுகிறேம் வினையகல வருவாய்!
இன்னல்வினை அசுரர்களை அழித்தே
இன்பமெனு மமுதினையே தருவாய்!

முன்னுலே ஔவையிடம் நாடி
முழுமதியைத் தந்தவனே கூடி
உன்னுலே இவ்வீழ நாடு
உயர்ந்திடுமே பலவளமும் பீடு

மூலமெனும் பிரணவத்தை ஓதி
மூதறிவாய் விளங்குதிறை சோதி
ஊழியெனும் பெருவினையால் நொந்தோம்
உய்விக்க வருகுவையே சுந்தா!

மெல்லியலாள் குறமாது வேண்ட
விரைந்தாயே கானகத்தை அண்டி
எல்லோரு முனைப்பணிய மங்கை
இருத்தினளே கதிர்காம முன்னை.

மேன்மைமிகு சரவணையில் தவழ்ந்த
மென்மலரே அழகுருவே வருவாய்!
ஏதொன்று கேட்டிடவே வருவாய்
எண்ணரிய பெரும்பொருளே தருவாய்!

மைவிழிய ரிருவர்புடை சூழ
மயிலேறி வரவேணும் நலமே
ஐயனென உன்னும நினைந்தால்
அணுகாதே புன்மைதரு வினைகள்.

அ...கனருள் அரும்பொருளே வருவாய்!
அழகுபதி கதிர்காமம் வருவாய்!
இக்கணமே அருள்தரவே வருவாய்!
என்றென்றும வேண்டுகிறேம் வருவாய்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## திரு நபி பிறந்த விழா

சென்ற 12-7-65 திங்கள் பிற்பகல் எட்டியாந்தோட்டை முஸ்லிம் வித்தியாலயத்தில் திரு நபி பிறந்த விழா, அல்ஹாஜ் எம். எஸ். ஏ. கபூர் ஜே. பி. அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. மௌலவி எம். ஐ. ஏ. வாஹிட் அவர்களின் கிருத்துடன் கூட்ட நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இவ்விழாவின் முக்கியத்துவத்தைப் பற்றி வித்தியாலய மாணவர்கள் முத்தமிழிலும் எடுத்துவிளக்கினுர்கள். முக்கிய பேச்சாளர்களாக மௌலவி எம். ஐ. ஏ. வாஹீட், மௌலவி என். எல். எம். பாருக், திரு. ஏ. பி. வி. கோமஸ் பி. ஏ. ஆகியோர் கலந்து கொண்டனர்.

தலைவர் தமது முடிவுரையில் விழாவில் பங்கு பற்றிய மாணவர்கட்கு இஸ்லாமிய புத்தகங்கள் பலவற்றை அன்பளிப்புச் செய்தார்.




அபூபக்கர், மன்னார்

கே: நல்ல பண்பும் அழகும் திரம்பப்பெற்ற படித்த ஓர் இள நங்கையை நான் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறேன். ஆனால் அவள் விரும்பவில்லை காரணமென்ன?

ப: நீங்கள் வாலிப பருவத்தைக் கடந்து நடு வயதின் எல்லைக்கும் வந்துவிட்டீர்களே, இந்த வயது வித்தியாசம்தான் காரணமாயிருக்கலாம் (உங்களின் மற்றொரு கேள்வியில் உங்கள் வயது 40 என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்) இல்லையேல், அவளிடம் காணப்படும் மூன்று இலட்சணங்களும் உங்களிடம் இல்லாதிருக்கலாம்!

கே: என்னுடைய வியாபார நிலயத்தை என் சொந்தக்காரர்கள் அபகரித்துக்கொண்டார்கள்! நான் என்ன செய்ய வேண்டும்?

ப: அதனை திரும்பப் பெற சட்டபூர்வமான வழிகளிருந்தால் அத்துறையில் முயற்சி செய்யுங்கள்! இல்லையேல், "அபகரித்தவர்கள் அபகரிக்கப்படுவார்கள்" என்று, ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு, வேறு வழியில் இறங்கிப் பொருள் திரட்டுங்கள்!

கே: ஒரு படித்த இளம் பெண் ஒரு படிக்காத ஆணைக் கல்யாணம் செய்வாளா?

ப: செய்வாள் பைத்திய நிலை அடையும் கட்டத்துக்கு காதல் வளர்ச்சி பெற்றுவிட்டால்.

ஃ

இரா. குமாரகுலசிங்கம், கட்டுடை

கே: செவ்வாய்க்கிரகத்திலுள்ள உயிரினங்கள் தமிழ் மொழியைப் பேசினால்?

ப: இருவாரங்களுக்கு முன்னர் அமெரிக்கா செவ்வாய்க் கிரகத்துக்கு ஒரு வான வெளி ஒருக்கட்டை அனுப்பியது. அது எடுத்து அனுப்பிய புகைப்படங்களை ஆராய்ந்த விஞ்ஞானிகள் செவ்வாயில் உயிரினங்களே கிடையா என கருத்து வெளியிட்டுள்ளனர்.

கே: அடுத்த முறை மலையகத்திலும் தமிழரசு தேர்தலில் போட்டியிடுமா?

ப: மலையகத்தில் சில தொகுதிகளை இரட்டை—உறுப்பினர் தொகுதிகளாக மாற்றினால், தமிழரசுக் கட்சி போட்டியிடுவது சாத்தியமே!

ஃ

வே. பேரம்பலம், வேம்பிராய்

கே: 1975-ம் ஆண்டில் வட மாகாணம் எப்படி இருக்குமென்று எதிர்பார்க்கிறீர்கள்?

ப, மிகச் செழிப்பாகவே இருக்கும் தமிழர் விழிப்புடனிருந்தால்!—"பாலைவன மாகிவிடும்" என்பது போன்ற கப்சாக்களை நம்பாதீர்.

ஃ

ரவிச்சந்திரன், வல்வெட்டித்துறை

கே: எனது நண்பன் ஒருவன் குடும்பப் பிரச்சினையின் காரணமாக காதலிக்கும் பெண்ணைக் கைவிடப் போகிறாராம், இது சரியா?

ப: சரியோ, தப்போ, கைவிடும் அளவுக்கு மேல் அவரது காதல் வளரவில்லை. எனவே பிறகு கைவிடுவதை இப்பொழுதே கைவிடுவது சிறப்பு.

ஃ

எஸ். ஆர். பொன்முடியன், திருகோணமலை

கே: பிறரைப் பார்த்து ஆலயத்திற்குச் சென்று கடவுளைத் தொழ வேண்டும் என்று புத்தி புகட்டும் சில முதலாளிமார், தங்கள் ஸ்தாபனத்தில் வேலை செய்யும் தொழிலாளியை ஆலயத்திற்கு செல்லக் கூடாது என்று தடை விதிப்பதின் நோக்கம் என்ன?

ப: அந்தத் தொழிலாளி ஆலயத்துக்குச் செல்லுவதற்குப் பதிலாக அந்த நேரத்திலும் வேலை செய்வானாகில் அதிலிருந்தும் முதலாளிக்கு இலாபம் கிடைக்குமல்லவா?

ஃ

தவம், சண்டிலிப்பாய்

கே: எனது நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அவளும் இவரைக் காதலிக்கிறாள். ஆனால் பெண் சாதகத்தின்படி, தகப்பனின் இனத்தவர்களிலேயே திருமணம் நடைபெறும் என்று ஒரு சாத்திரியார் கூறுகிறார். நண்பனோ தகப்பனின் இனத்தவரல்லர்!

ப: உண்மைக் காதல் சாதகத்தை விழுங்கி, சிரணிக்க கூடிய சக்திபெற்றது. சாதகத்தைப் பார்த்து காதலித்தால் காதல் உருப்படாது. சாதகந்தான் உருப்படும்.

> திருவாளர்
> குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்
> த. பெ. இல. 1183
> கொழும்பு-12.
>
> இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

மணியம், யாழ்ப்பாணம்

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் அவளும் என்னை மனமார நேசிக்கின்றாள்! ஆனால் வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளவில்லை. அவள் தன்னுடைய சகோதரங்களுக்குப் பயப்படுகின்றாள். நாங்கள் இருவரும் படித்துக்கொண்டிருக்கின்றோம், இதற்கு என்ன செய்வது?

ப: உங்களின் காதல் நீண்ட ஆயுளைக் கொண்டது. விரைவில் நிறைவேறுமென்று எதிர்பார்க்க முடியாது. உங்களிருவரின் படிப்பு முடியும் வரை அது தலைமறைவு காதலாகவே இருக்கட்டும். அதன் பின் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக்கொண்டு காதலை நிறைவேற்ற நடவடிக்கை எடுங்கள்!

ஃ

வி. கோபால், கிரேக்மோர்

கே: என் நண்பர் தேர்வுப் பரீட்சையில் வெற்றி பெறுவதற்காக தன் பாடங்களில் கவனமின்றி தினமும் கடவுளையே பிரார்த்தனை செய்து வெற்றி பெறுவேன் என்கின்றார், முடியுமா?

ப: கடவுளை நம்பினோர் கைவிடப்படார். அத்துடன் சொந்த முயற்சியும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

ஃ

கே. வை. மூர்த்தி, யாழ்ப்பாணம்

கே: ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன அளித்த பதிலின் படி, சிறிமா-சாத்திரி ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதை தமிழரசுக் கட்சி எதிர்க்குமா?

ப: ஒப்பந்தத்தில் கண்டுள்ள எண்ணிக்கை இந்தியர்கள் சொந்த விருப்பத்தின் மீதே இந்நாட்டை விட்டு வெளியேறுவார்களென்றுதான் ஜே. ஆர். கூறினார். ஆகவே அதனை எதிர்க்க வேண்டிய அவசியமில்லையே.

ஃ

சு. பாலகிருஸ்ணன், வெள்ளவத்தை

கே: பிரபல தமிழ்த் தினசரிகள் தமிழர் கையில் இல்லகதிருப்பது எதைப் போன்றது?

ப: வாளை இழந்துவிட்ட வாட்போர் வீரனின் நிலைமைப் போன்றது.

ஃ

எஸ். கே. சண்முகநாதன், வண்ணார்பண்ணை

கே: ஐ. நா. சபைக்குச் செல்லும் திரு. பொன்னம்பலம் அங்கு மொழிப் பிரச்சினை பற்றி என்ன கூறுவார்? ஒற்றையாட்சியென்ற பல்லவியைப் பாடுவாரா...?

ப: இவ்விரண்டையும் செய்யமாட்டார். அங்கே உலக நாடுகள் ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்திருப்பதைக் கண்டதும் அவருக்கு "வட்ட மேசை" நினைவுக்கு வந்துவிடும். உடனே வட்ட மேசையைப் பற்றி நாட்கணக்கில் வெளுத்து வாங்கி விடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

ஃ

குமார், யாழ்ப்பாணம்

நான் ஒரு பெண்ணைக் காதலித்து அவள் பின்னால் எப்பொழுதும் திரிகிறேன், அவளோ என்னை வெறுக்கின்றாள். இதற்கு என்ன பரிகாரம்?

ப: உங்களின் ஒரு தலைப் பட்சமான காதலைக் குழி தோண்டிப் புதைப்பதுதான் ஒரே வழி. உங்களின் காதல் வெறும் மோகமேயன்றி உண்மைக் காதலன்று. விரைவில் அவளிடம் தருந்த படிப்பினையைக் கற்றுக்கொள்வீர்.

ஃ

செ. ஜே. செல்வரத்தினம், கொழும்பு-15

கே: தாழ்ந்தவன் உயர்ந்தால் என்ன நிகழும்?

ப: 'தாழ்ந்தவன்' என்பவன் இல்லா தொழிந்து போவான்.

கே: தமிழ், சிங்கள, கலப்பு மணம் பற்றி உமது அபிப்பிராயம் என்ன? இதனால் ஒற்றுமைக்கு வழி கிடைக்குமா?

ப: திருமணம் இரு தேசிய இனங்களை ஒற்றுமை படுத்தும் அடிப்படையைக் கொண்டதல்ல காதலைத் தவிர்த்து ஏனைய முறைகளில் இரு இன கலப்பு மணம் சரியன்று.

ஃ

அ. உமாசங்கர், ஏழாலை மேற்கு.

கே: என்னுடைய தம்பி என்னுடன் நெடுநேரம் வீண் சண்டைகள் புரிந்துகொண்டிருக்கிறாரே! இதைத் தடுக்க ஒரு வழிகூறும்குயுக்தியாரே!

ப: சண்டையை விவாதமாக மாற்றுங்கள், ஒரு பயனுள்ள பிரச்சினையைக்கிளறி விட்டு அவருக்குச் சலிப்பேற்படும்வரை மணிக்கணக்கில் அவருடன் விவாதியுங்கள். நாளடைவில் உங்களைக் கண்டாலே ஓடி மறைந்துக் கொள்வார்.

ஃ

வி. ரி. வை. ராசா, கல்முனை—2.

கே: ஓய்!...குயுக்தி விதியைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

ப: விதியை ஒரு சதி என்று கூற நான் தயாரில்லை. ஆனால் மதியால் ஓரளவு அதனை வெல்ல முடியும் என்பதே என் கருத்து.

கே: பொருட்களின் விலையைத் தேசிய அரசாங்கமும் கட்டுப்படுத்தவில்லையே?

ப: கட்டுப்படுத்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன. வரவு—செலவு திட்டம் விலைவாசிகளை இறக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஃ

'இதயசூரியன்' இறக்வான.

கே: சீனர்கள் இலங்கை மூலம் தங்கம் கடத்திவருகிறார்களாமே?

ப: சாத்தியமே! அபின் கடத்தும் ஆசாமிகளுக்குத் தங்கம் கடத்துவது பெரிய காரியமா?

ஃ

ராசா, யாழ்ப்பாணம்.

கே: எனக்குப் படிப்பில் அக்கறையில்லை. ஆனால் பூட்டுத் திறப்பதில் வல்லவன். எனக்கு ஏதாவது வேலை கிடைக்குமா?

ப: இப்போதெல்லாம் திருட்டுக் கூட்டங்கள் இங்கு கிடையா—எனவே வேலை கிடைப்பது கடினம், பழைய பூட்டுக்கடையொன்றுவைத்துப்பாருங்கள்!

---

### தலையைக் காக்க....

அரசியல் கட்சிப் பிரசாரங்களுக்கு இலங்கை வானொலியை உபயோகிப்பதுபற்றி விசாரணை செய்ய ஒரு குழு நியமிக்கப்படுகிறது.

—செய்தி

விசாரணை சாதகமானால் பொதுக்கூட்டங்கள்போடுவது குறைந்துவிடுமாம். ஆகவே தங்கள் தலைகளுக்கு சில அரசியல்வாதிகள் கல்கொண்டு குறிபார்க்கும் தொல்லைகள் குறையுமாதலால் பொலீசார் சாதகமான முடிவுக்காகப்பிரார்த்தனைசெய்ய ஆரம்பித்துள்ளனராம்.

### உருக்கும் ஆயுதம்


உருக்குத் தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் ஒன்று ஏற்பட்டுள்ளது.

—செய்தி

பொதுவாக, உருகாத உருக்குப்போன்ற முதலாளிகளின் நெஞ்சத்தை உருக்கப் பயன்படும் ஆயுதத்தை கூட்டரவுத்தலைகளை உருக்கப் பிரயோகிக்கிறார்களாக்கும்.

### கூட்டரவில் பெண்கள்

சீமிந்துக் கூட்டரவில் பெண் தொழிலாளர்



களை மென்மேலும் தேர்ந்தெடுத்தால் சீமிந்துப்பெண்கள் கூட்டரவாகிவிடும், இந்த நிறுவனம்' என்று அரசாங்கக் கூட்டரவுத் தொழிலாளர் சங்கம் கூறுகிறது.

—செய்தி

சிமிந்துக் கூட்டரவில் பெண்கள் கூடுவது பெரும் அபாயத்துக்கு அறிகுறியாகி விடுமோ என்று அஞ்சுகிறார்கள் போலும்.

### ஆட்சேபம்....!

நேர்தல் தினமான மார்ச் 22ல் பணியாற்றிய இ. போ. ச. ஊழியர்களுக்கு 'போனஸ்' வழங்கப்படும்.

—செய்தி

அதே தினத்தில் அரிய பணி புரிந்த வாக்காளர்களுக்கு ஏன் 'போனஸ்' வழங்கப்படக் கூடாது என்று விடாக்கண்[illegible] வாக்காளர் ஆட்சேப மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

### விலை ஏற வழி

உணவுப் பொருட்களை அதிகமான விலைக்கு விற்று கொள்ளைலாபமடிப்பவர்களைக் கண்டுபிடிக்க மேலதிகமான, விலைகட்டுப்பாட்டு அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

—செய்தி

பொருட்களின் விலை மேலும் இரட்டிப்பாகஅதிகரிக்கும் என்று விடாக்கண்டர் கூறுகிறார். ஏனெனில் கட்டுப்பாட்டு அதிகாரிகளை பின் கதவால் உபசரிக்க வியாபாரிகளுக்கு மேலதிக வருமானம் தேவைப்படுமாம்.

### உண்மை உணர்வு

கிரிகல்பொத்தை என்னுமிடத்திற்குச் சமீபமாக ஒரே நாளில் இரு இ. போ. ச. பஸ்வண்டிகள்பாதையைவிட்டு விலகி காடுகளுக்குள் புகுந்துகொண்டன.

—செய்தி

இ. போ. ச. இருக்க வேண்டிய இடம் எது என்பதையும், இவ்வண்டிகளில் பிரயாணம்செய்ய அருகதையுடையவைகள் யாவை என்பதையும் இவ்வண்டிகளே உணர்ந்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டன என்பது வெளிப்படையாகிவிட்டது.

---

## 'மாய ஜோதி' ஊது பத்திகள்

"பாட்டாளி தொடக்கம் பணக்காரர் வரை"
விரும்புவது "மாய ஜோதி" ஊது பத்திகளே!
ஏன்?

- ★ அதன் சுகந்த நறுமணம்
- ★ அதன் நிலைத்து எரியும் தன்மை
- ★ நவீன தயாரிப்பு
- ★ அதன் நியாய விலை.

நீங்கள் மட்டும் ஏன் தயக்கம்?
வாங்குங்கள் ஒரு முறை, நிலைத்து விடும் 'மாய ஜோதி'
ந. செல்லத்துரை, மாயஜோதி இண்டஸ்றீஸ்.
128/3, வாட்பிளேஸ், கொழும்பு-7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியட்நாம் நெருக்கடி உச்சக் கட்டத்துக்கு மட்டுமின்றி, இறுதிக் கட்டத்துக்கும்........!

**வியட்நாம் மண்ணிலிருந்து மற்றுமோர் உலக யுத்தம் ஏற்படுமா? சமாதானத்துக்காகத் தற்போது நடைபெறும் முயற்சிகள் வெற்றிபெறவில்லையேல்; உலக யுத்தமொன்று - குறைந்தபட்சம் கொரிய யுத்தமொன்றுவது—ஏற்படலாம். தென் வியட்நாமுக்கு மேலும் 50,000 அமெரிக்கத் துருப்புகள் அனுப்பப்படுவதாக அமெரிக்க ஜனதிபதி அறிவித்துள்ளார். வியட்நாமில் அமெரிக்கா நடத்தும் போர் வெற்றிபெறுமென்பதற்கான அறிகுறிகள் காணப்படவில்லை. வியட்நாமில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு எந்த அரசாங்கத்துடனும் நிபந்தனையின்றி பேச்சு வார்த்தை நடத்தத் தயாரென்ற அமெரிக்க ஜனதிபதியின் அறிவிப்பு மிகவிரைவில் வியட்நாம் போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்ற அமெரிக்காவின் ஆவலையே பிரதிபலிக்கிறது.**

வியட்நாம் போர் உச்சக் கட்டத்துக்கு மட்டுமின்றி இறுதிக் கட்டத்துக்கும்வந்து கொண்டிருக்கிறது.

பல்வேறு சமாதான முயற்சிகள் செய்யப்பட்டதெனினும் இதுவரை எதுவித பலனும் கிடைக்கவில்லை.

### இரவில் ஆட்சி அவர்கள் கையில்

காமன்வெல்த் பிரதமர்கள் சமாதானத் தூது கோஷ்டி அனுப்ப முடிவு செய்தனர். அது உருப்பெறவில்லை. பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சனின் பிரதிநிதியாகத் திரு. டேவிஸ் வடவியட்நாமுக்கு சென்று வந்தார். அவரது தூது பயனளிக்கவில்லை என்றே கூற வேண்டும். ஆனல் வியட்நாமிலுள்ள உண்மை நிலையை அறிந்துவந்து பிரிட்டிஷ் பிரதமருக்கு அவர் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் மக்கள்போரில் வெற்றி பெற்று வருவதாகவும், அவர்கள் இரவில் தென் வியட்நாம் முழுவதையும் ஆட்சி புரிவதாகவும் திரு. டேவிஸ் பிரிட்டிஷ் பிரதமருக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையிற் குறிப்பிட்டிருக்கிறாராம்.

### ஹாரிமன் தூதும் அரோகரா!

ஜனதிபதி ஜொன்சன் திரு. ஹாரிமனை வியட்நாம் விடயமாக ரஷியாவுக்குத் தூது அனுப்பி வைத்தார். அவர் ரஷ்யப் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சு வார்த்தை முடிவடைந்ததும்'வியட்நாமுக்கு ரஷியா மென்மேலும் உதவி செய்யும்' என்று ரஷியப் பிரதமர் தெரிவித்தார். இதிலிருந்து அந்தத் தூதும் உருப்படவில்லை என்றேதெரிகிறது.

### பாரதப் பிரதமர் கருத்து

பாரதப் பிரதமர் சாத்திரி அண்மையில் யூகோஸ்லாவியாவுக்கு சென்றபோது ஜனதிபதி டிட்டோவுடன் சேர்ந்து ஒரு கூட்டறிக்கை விடுத்தார். அதில் வியட்நாமில் அமெரிக்கக் குண்டுவீச்சு நிறுத்தப்பட்டாலன்றி சமாதானத்துக்கு வழி பிறக்காது என்று குறிப்பிட்டுள்ளனர்.

# வியட்நாமில் உருவாகும் உலக நெருக்கடி

## உலகவலம்

வியட்நாம் பிரச்சினையை சமாதான முறையில் தீர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்யும் பொருட்டு மண்டல சார்பற்ற நாடுகள் ஒரு மாநாடு கூட்டுவது சாத்தியமே. அல்ஜீரியாவில் நடைபெறுவதாயிருந்து ஒத்தி வைக்கப்பட்ட ஆசிய —ஆபிரிக்க மாநாடு அன்று நடைபெற்றிருந்தால் வியட்நாம் சிக்கலுக்கு ஒரு தீர்வு ஏற்பட அன்றே வழி பிறந்திருக்கும்.

அடுத்துவரும் ஐ. நா. பொதுச் சபைக் கூட்டமும் வியட்நாம் தகராறு பற்றி விவாதிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஐ. நா. மூலம் முடிவுகாணவும் அமெரிக்கா தற்போது முயற்சி செய்கிறது.

### நிலைமை சாதகமாயில்லை

வியட்நாம் போரில் அமெரிக்கா கோடிக்கணக்கான டாலர்களைப் புதைத்துள்ளது. 1,25000 அமெரிக்கத் துருப்புகள் அங்கு சண்டைசெய்கின்றனர். அவர்களுக்கு உதவியாக ஆஸ்திரேலியப் படைகளும், தென் கொரியாப் படைகளும் வந்து போரில் குதித்துள்ளனர். ஆயினும் அமெரிக்காவுக்கு அங்கு நிலைமை சாதகமாயில்லை.

வடவியட்நாம்மீது பலத்த குண்டு வீச்சு நடத்தப்பட்டதெனினும், அமெரிக்கா எதிர்பார்த்தபடி வடவியட்நாம் சமரசம் பேச முன்வரவில்லை. சீனவும் சமரசப் பேச்சுக்களை விரும்பவில்லை. ரஷியாவின் நிலையும் அதுதான் என்று தெரிகிறது.

ரஷியாவும் சீனவும் வியட்நாமியருக்கு எல்லா உதவிகளும் அளிக்கின்றன. ஆனல் அவை நேரடியாகப் போரில் இறங்கவில்லை. காரண தென்வியட்நாமிலுள்ள 'வியட்கொங்' கொரில்லாப் படைகளே நிலைமையைச் சமாளித்து விடும் என்றும், எனவே தாங்கள் போரில் நேரிடையாக இறங்க வேண்டிய அவசியமில்லையென்றும் ரஷியாவும், சீனவும் கருதுகின்றன போலும்!

### வியட்கொங் கொரில்லாக்கள்

தென்வியட்நாமில் அமெரிக்கப்படைகளுடனும், தென்கொரிய அரசாங்கப் படைகளுடனும் யுத்தம் செய்யும் வியட்கொங் கொரில்லாக்கள் காடுகளில் மறைந்திருந்து தாக்கும் வெறும் கொரில்லாக்களல்ல. அவர்கள் நன்கு பயிற்சிபெற்ற இராணுவப் படைகள். அவர்கள் நவீன ஆயுதங்களையும் பயன்படுத்துகின்றனராம். இலட்சக்கணக்கான கொரில்லா வீரர்கள் அந்தப் படைகளில் இருக்கின்றனராம்.

இந்த வியட்கொங் படைகளுக்குத் தலைமை தாங்கும் தளபதி சாதாரண ஆசாமியல்ல. அன்று பெரும் போர் நடத்தி பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளை வியட்நாம் மண்ணிலிருந்தே விரட்டியடித்த அதே ஜெனரல் நுஜேன்கியாப் தான் வியட்கொங் கொரில்லா இராணுவத்தை இன்று வழி நடத்துகிறார்.

சீனவில் ஜெனரல் சியாங்-கெய்செக்கை தோற்கடிக்க மாசேதுங் கையாண்ட அதே இராணுவத் தந்திரங்களைத் தான் ஜெனரல் நுஜேனும் கையாளுகிறாராம். கொரில்லாப் போர் முறையில் அவருக்குள்ள திறமையையும் இராணுவத் தந்திரங்களையும் கண்டு அமெரிக்காவே வியப்படைகிறது. இதில் அவர் தனியாக நிற்கவில்லை.

### கொரில்லா நிபுணர்கள்

உலகில் சில நாடுகளில் பெரிய, பெரிய கொரில்லாப் போர்களை நடத்தி அனுபவம் பெற்ற தளபதிகள் வட வியட்நாமுக்கு வந்திருந்து ஜெனரல் நுஜேனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனராம்.

கொரில்லா போர்முறைகளில் உலகப் புகழ்பெற்றவரும் கியூபாப் புரட்சித் தலைவர்களிலொருவருமான குவாரா வியட்கொங் படைக்கு வழிகாட்டுவதற்காக வட வியட்நாமுக்கு வந்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இச் செய்தி அமெரிக்க இராணுவ வட்டாரங்களில் அதிர்ச்சியைக்கொடுத்துள்ளதாம். குவாராவின் போர்த் தந்திரங்களைக் கையாண்டுதான் அல்ஜீரிய மக்கள் தங்களின் விடுதலைப் போராட்டத்தில் வெற்றி கண்டனர்.

### பேராசிரியரின் கண்டனம்

வியட்நாமில் அமெரிக்கா கையாளும் கொள்கையைப் பிரபல பிரிட்டிஷ் வரலாற்று வல்லுனரான பேராசிரியர் அர்னேல்ட் டொயின்பி கண்டித்துள்ளார். அமெரிக்கா தோல்வியை ஒப்புக்கொண்டு வியட்நாமிலிருந்து வெளியேற வேண்டுமென்று அவர் புத்திமதி கூறியுள்ளார்.

உலகம் இனிமேலும்வியட்நாம் நிலைமையைப் பார்த்துக்கொண்டிருக்கமுடியாது. அடுத்துவரும் ஐ. நா. சபைக் கூட்டத்தில் இதற்கு ஒரு முடிவுகாண முடியவில்லையேல், நடுநிலைமை நாடுகள் தான் இவ்விடயத்தில் தலையிடவேண்டிய நிலைமை ஏற்படும். விரைவில்சமாதானம் காணப்படவில்லையேல்தென்கிழக்காசியாவில் பெரும் நெருக்கடி தோன்றுமென்பதில் ஐயமில்லை.

# எம்பிரானையே தோழராகக் கொண்டு தம்பிரான் தோழரான சுந்தரமூர்த்தி நாயனர்

## தொண்டர் தொகை பாடி, தமிழை வளர்த்தார்

செல்வி பொ. கணபதிப்பிள்ளை

மனித வாழ்க்கையின் ஈடேற்றத்திற்கு, நல்வழி காட்டும் சைவ சமயம், தென்னட்டில் சிறப்புடன் வளர்ந்தது. திருவளர் தில்லைச் சிற்றம்பலத்துட் பொருவிலா நிருத்தம்புரியும் இறைவனின் பெருங்கருணைக்களாகியவர்கள் அறுபத்து மூன்று நாயன்மாரும் அவரோடு ஒத்துவைத் தெண்ணக்கூடிய மற்றையோரும்ஆவர். இவர்களால் தமிழ் நாடெங்கும் சைவசமயம் தழைத்தோங்கியது. இவர்களுள் சமயாசாரியார்களாகிய நால்வரும், தீஞ்சுவைப் பாசுரங்கள்பாடி அம்மையப்பனை வழுத்தியவர்கள்.

அறுபத்து மூவர் வரலாறும் சேக்கிழார் நாயனரால் பெரிய புராணமாகப் பாடப்பட்டது. அறுபத்து மூவர் சரிதம் பாடப்பெறுவதற்கு மூலகாரணமாக இருந்தவர் அடியார்க் கடியனும் ஆலால சுந்தரர்.

தென்னவனுய்ச் சிவனே வந்து அரசாண்ட தமிழ்நாட்டில் அரசர் பலரே வேற்று மதத்தைச்சேர்ந்திருந்தனர். அவர்களுள், ஒருவன், ஞானசம்பந்தரால், சைவசமய உண்மை தெருட்டப்பெற்றவன். மற்றெருவன் சேக்கிழாரைத் தன் முதன் மந்திரியாகப் பெற்ற அநபாய சோழன். இவன் சந்தனச் சேற்றில் இருப்பவன் சாக்கடைச் சேற்றை விரும்புவது போல் சமண நூல்களை மெய்யெனக் கற்று, அதன்படி ஒழுகி வந்தான்.

இந்நிலை கண்டு சேக்கிழார் மனம் வெதும்பி [illegible] ணுக்கு ஆகும் நெறியை [illegible] விக்கப் புகுந்தார். அவர் எடுத்துக்காட்டிய செய்தி— திருவாரூர் வன்றொண்டராம் சுந்தரர், தாம்அடியார்க்கு அடியராகும் நன்னாள் எந்நாளோ என ஏங்கினர். இதையறிந்த எம்பெருமான் தாமே எளிவந்து, தம்முடைய திருத்தொண்டர் பெருமையை எல்லோரும் அறியவும் அவர் திறத்தை சுந்தரர் பாடவும் வேண்டுமெனத் திருவுளங்கொண்டு சுந்தரர்க்கு அருள்புரிந்து 'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கு மடியேன்' என அடியெடுத்துக் கொடுத்தார். அதை முதலாகக் கொண்டு சுந்தர் பதினெரு [illegible] தொகை' என்னும் ஒரு பதிகம் பாடினார். சேக்கிழார் கூறிய இவ்வரலாற்றால் அரசன் சிவநெறி கூடல்பெற்றான்.

### அடியார் பெருமை

ஒரு சந்தர்ப்பத்தில் எரிதவழ் வேலோன் தமிழ் மூதாட்டியிடம்'உலகில்பெரியது எது' எனக் கேட்டார். அதற்கு,

> '...இறைவனே தொண்ட
> ருள்ளத் தொடுக்கம்
> தொண்டர்தம் பெருமை
> சொல்லவும் அரிதே'

எனத் தொண்டரின் பெருமையை விளக்கினர் ஔவையார். இத்தொண்டர்களுக்கு—இறைவன் அடியவர்களுக்கு-அடியனுகி ஒப்புயர்வற்ற பெரியோனுனவர் எம் சுந்தரர்.

சுந்தரர் சிதம்பரநடராசப் பெருமானைத் தரிசிக்க விரும்பி யாத்திரை செய்தார். அவர் திருவதிகை என்னும் தலத்தை யண்மிய போது மாலைப் பொழுதாகி விட்டது. அப்போது அவர், 'திருநாவுக்கரசு நாயனர் உழவாரத்தினலே நமது சிவபெருமானுக்குக் கைத்தொண்டு செய்த இந்தத் தலத்திலே கால்மிதிக்க அஞ்சுகிறேன்' என்று கூறி கோவிலுக்கு உள்ளே செல்லாமல் வெளியே ஒரு மடத்தில் தங்கினர்.

அவர் அடியார் மேற்கொண்ட மதிப்பும் பக்தியுமே அவரைத்திருத்தொண்டத் தொகை பாடவைத்த அப்பதிகத்தில் அறுபத்திரண்டு நாயன்மாரையும் தனித்தனியே விழித்து, அவர்கள் அடியார்க்கு மடியேன் எனப் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசரைப் பாட வந்த இடத்தில் 'திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன் தன் அடியார்க்கு மடியேன்' என்று பாடுகிறர். பொய்யடிமையில்லாப் புலவர்கள் புகழைத் தொகுத்துப் பாடுகையில்,

> பத்தராய்ப் பணிவார்க
> ளெல்லார்க்கு மடியேன்
> பரமனையே பாடுவா
> ரடியார்க்கு மடியேன்
> சித்தத்தைச் சிவன்பாலே
> வைத்தார்க்கு மடியேன்
> திருவாரூர்ப் பிறந்தார்க
> ளெல்லார்க்கு மடியேன்
> முப்போதுந் திருமேனி
> தீண்டுவார்க் கடியேன்
> முழுநீறு பூசிய
> முனிவர்க்கு மடியேன்

(5-ம் பக்கம் பார்க்க(

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியகுளம் காணிகள் சிங்களவருக்கு சொந்தமாம்!

## அரசாங்கத்தின் மீது சிங்களப் பத்திரிகை சீற்றம்

"இலங்கையில் பௌத்த சமயத்தை நிலை நாட்டிய தேவநம்பிய திசன் காலத்திலிருந்து சிங்கள பௌத்தர்கள் உரிமை கொண்டாடிய திருகோணமலை வில்கம ரஜமகா விஹாரையைச் சுற்றியுள்ள காணிகள் சிங்கள பௌத்தர்களுக்குச் சொந்தமாகக் கூடிய வழிகள் ஏழு கட்சி-கூட்டரசாங்கத்தின் கட்டளையின் மீது மூடப்பட்டுள்ளன" என்று சுதந்திரக் கட்சியின் "சிங்களே" பத்திரிகை எழுதியுள்ளது.

திருமலை பெரியகுளம் வில்கம ரஜமகா விஹாரையை யொட்டியுள்ள காணிகளை விநியோகிப்பதற்கான காணிக் கச்சேரி ஜுலை 26-ந் திகதி நடாத்தப்படவிருந்தது. இக் காணிக்கச்சேரி காணி அமைச்சின் கட்டளையின் மீது நிறுத்தப்பட்டுவிட்டது.

இந்தக் காணிகள் பெரும்பாலும் சிங்கள பௌத்தர்களுக்கே கிடைக்கக் கூடியதாயிருந்தன. தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம்' திருமலை எம். பி. திரு. மாணிக்கராசா ஆகியோரின் வேண்டுகோளின் மீதே காணி மந்திரி காணி கச்சேரியை நிறுத்தியுள்ளார்.

வில்கம விஹாரையைச் சுற்றியுள்ள சுமார் 500 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணிகளில் சிங்கள பௌத்தர்களைக் குடியேற்ற வேண்டுமென பல ஆண்டுகளாக கோரப்பட்டுவந்தது. வில்கம விஹாரைவரை ஒரு சாலையை அண்மையில் அந்தப் பிரதேசத்தில் வசிக்கும் பௌத்தர்கள் கொழும்பு நாலந்தா கல்லூரி மாணவர்கள், இராணுவத்தினர் ஆகியோரின் உதவியுடன் சிரமதானத்தின், மூலம் அமைத்தனர்.

ஆனல் இக் காணிகள் பௌத்தர்களுக்குச் சொந்தமாவதைத் தமிழரசுவா`களின் கோரிக்கையின் மீது ஏழு கட்சி—கூட்டரசாங்கம் தடுத்துவிட்டது. அந்தப் பிரதேசத்துச் சிங்களவர்களுக்கு இழைத்த இந்த அநீதியைப்பற்றி அப்பிரதேசத்திலுள்ள நியாய புத்தி படைத்த தமிழ் மக்கள் கூட கவலை அடைந்துள்ளனர்" என்று "சிங்களே" மேலும் எழுதியுள்ளது.

## 'பாடசாலைகளை பிடிக்கச் சதி'

'நாம் தமிழர் இயக்கம்' மீண்டும் மலை நாட்டைப் பயமுறுத்தத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. மலைநாட்டு வர்த்தகத்தைக் கைப்பற்றிக் கொண்டுவரும் இவர்களின் புதிய இயக்கம் மலைநாட்டு நகரங்களிலுள்ள உயர்தர பாடசாலைகளையும் கைப்பற்றுவதுதான் என்று அறியப்படுகிறது.

ஏற்கனவே ஏற்பாடு செய்து கொண்ட ஒவ்வொரு இடங்களிலும் கூடிப் பேசும் 'நாம் தமிழர்' அண்மையில் நாவலப்பிட்டியில் ஓர் அச்சகத்தில் கூடி நாவலப்பிட்டியிலுள்ள வித்தியாலயங்களைக் கைப்பற்ற சதி செய்துள்ளனர். நாவலப்பிட்டி மகளிர் வித்தியாலயத்திலும், சென்ற் மேரி வித்தியாலயத்திலும், கதிரேசன் வித்தியாலயத்திலும் அப் பகுதியிலுள்ள தோட்டங்களிலுள்ள தமிழ்ப் பிள்ளைகளைக் கூடியளவு சேர்க்கும் ஒரு திட்டம் பற்றி அன்று அவர்கள் விவாதித்தனர் என்று தெரிகிறது. இதன்படி அடுத்த ஆண்டுக்குள் நாவலப்பிட்டியில் எல்லாப் பாடசாலைகளும் தமிழ்ப் பிள்ளைகளால் நிரப்பப்பட்டு விடும்; அதனைத் தடை செய்ய இயலாது போய்விடும்.'

—சவல (2-8-65)

## வரவு-செலவு ஆருடம்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு மதிப்பீடுகளிலிருந்து கீழ்க் காணும் விஷயங்கள் தெளிவாகியிருப்பதாக எழுதுகிறது. சிங்களே, பத்திரிகை (1-8-65) அவைகளாவன:—

"பெரிய கைகளின் வருமானவரி குறையும்.

வெளி நாடுகளிலிருந்து கடனுக்கு வாங்கப்படும் பொருட்களுக்கு வட்டி விகிதம் நியமிக்கப்படும்.

செலுத்தப் படாதிருக்கும் பெருந்தொகையுள்ள வருமானவரிகள் கைவிடப்படும்.

விவசாயத்துக்கும் உணவுப் பொருள் இறக்குமதிக்கான தொகை கூட்டப்பட்டிருக்கிறது.

பாடசாலை கட்டிட வேலைகள் ஸ்தம்பிக்கும். புதிதாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள்.

காணி அபிவிருத்தி அநேகமாகக் குறைந்துவிடும்.

டெலிபோன் சேவை அபிவிருத்தி நின்றுவிடும்.

(9-ம் பக்கம் பார்க்க)

## சிங்கள இதழ்களில்...

## சிங்களம் படி-அல்லது விலகிச்செல்

'தவஸ' பத்திரிகை (3-8-65) அரசகரும மொழி பற்றி கீழ்க்காணும் தலையங்கத்தை எழுதியுள்ளது:

'அரசகருமமொழிச் சட்டத்தின் கட்டுப்பாடுகளிலிருந்து தற்காலிகமாக விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ள பழைய அரசாங்க சேவையாளர்களுக்கு மொழிவிடயத்தில் உதவி செய்யும் பொருட்டு இவ்வாண்டு இறுதிக்குள் சிங்களத்தில்தேர்ச்சி பெற்ற 4000 வாலிபர்களையும் யுவதிகளையும் சேவையிற் சேர்த்துக்கொள்ள அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

சிங்களத்தை நாட்டின் ஒரே உத்தியோகமொழியாக்குமுன்பு, அப்படி ஒரு மொழிச்சட்டம் எதிர்காலத்தில் இயற்றப்படுமா என்பது தெரியாமல் அரசாங்க சேவையிற் சேர்ந்தவர்களுக்கு 'சும்மா வீட்டுக்குப் போங்கள்' என்று கூறுவது நியாயமாகாது.

ஆயினும் சிங்கள அறிவு பெறுததை ஒரு கருவியாகக் கொண்டு, மொழிச் சட்டத்தின் விதிகளிலிருந்து தங்களைப்பாதுகாத்துக்கொண்டு என்றென்றும் ஆங்கிலத்திலேயே கருமயாற்றி பிரகாசிக்கலாம் என்று நினைத்தால் அது தவறாகும்.

சிங்களம் படிக்க வாய்ப்பு இருந்து, அதற்காக அரசாங்கம் நியாயமான முறையிற் போதுமான அவகாசம் கொடுத்து அந்தச் சந்தர்ப்பம் எதையும் பயன்படுத்தாது, சம்பளத்தை உயர்த்திக்கொள்ள யாரேனும் நினைத்திருந்தால், அது தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதாகும்.

சிங்களந்தைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காகச் சிங்கள வகுப்புகளை நடத்தி, சிங்களத் தேர்ச்சிக்காகப்

[9ம் பக்கம் பார்க்க]



இலங்கை வாழ் மக்களனைவரையும்—அவர்கள் எச்சமயத்தவராயினும் சரி—தன்பால் ஈர்த்து அருள் வழங்கும் வள்ளலான கதிர்காம முருகனுக்கு இவ்வாரம் உற்சவம் நடைபெறுகிறது. கந்தக் கடவுள் குடிபுகுந்துள்ள கதிர்காம ஆலயத்தின் முன்புற வாயில் இது.

## எம்பிரானையே தோழராகக்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பாலு மடிச்சார்ந்த
வடியார்க்கு மடியேன்
ஆரூர னாரூரி
லம்மானுக் காளே

எனத் தம் சிவ நெறிச் சீலத்தை எடுத்துக்காட்டு கிறார்.

### தம்பிரான் தோழரானது

சுந்தரர் இன்பமனுபவிக்க இவ்வுலகில் பிறந்தார். எம்பெருமானே தூதுவனாய்ச் சென்றுபரவையாரை மணம் பேசிச் செய்துவைத்தார். அவர்களிடையே பிணக்கேற்பட்டபோது தோழமைகவுஞ் சென்று பிணக்கு நீக்கி அருள் புரிந்தார். எம்பெருமானைத் தோழனுகப் பெற்றமையால் சுந்தரர் தம்பிரான் தோழரானுர்.

சுந்தரரைச் சிவபிரான் மணநாளில் தாமே வந்து தலையளித் தாட்கொண்டது மல்லாமல், அவர் அறியாமலே, நித்திரையில் அவருக்கு திருவடி தீக்கையும் செய்வித்தார்.

சுந்தரர் ஒருமையுடன் சிவன் திருவடி நினைத்தொழுகிய உத்தமர். 'உன்னேன் பிறதெய்வம் உன்னையலா தெங்கள் உத்தமனே' என மணிவாசகர் வாழ்ந்தது போல் அவரும் 'கண்ணீர் அரும்பா நிற்கு மனத்தடியாரொடும் அன்பு செய்வேன், விரும்பேனுன்னை யல்லாவொரு தெய்வமென் மனத்தால்' எனப்பாடி அதன்படி வாழ்ந்தார். சிவன் கழலே சிந்திக்கும் [illegible] யாளாகி அவனடி சேர்ந்தவர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடனக் கலையும் தேகப்பயிற்சியும்



பெண்களுக்கு நடனக் கலை சிறந்த தேகப் பயிற்சியாகும். அழகைக் கொடுப்பதுடன் இளமையையும் பாதுகாக்க இக் கலை உதவி புரிகிறது என்பதை கடந்தவாரம் அறிந்தோம்.

பொதுவாக பெண்கள் அன்றாட வீட்டு வேலைகளைக் கிரமமாகச் செய்து வந்தாலே அவர்களுடைய உடலுக்கு வேண்டிய அப்பியாசத்தைப் பெற முடியும். இருப்பினும் மேலும் ஆரோக்கிய விருத்திக்கு பெண்களுக்கான சில தேகப் பயிற்சிகளைப் பயின்று, அதன்படி ஒழுகுவது சிறந்ததாகும்.

அநாகரீகமா?

வீட்டு வேலைகளைச் செய்வதைச் சில பெண் மணிகள் அநாகரீகமாகக் கருதுகின்றனர். ஆயாமார்களையோ, வேலைக்காரர்களையோ வீட்டு வேலைகளுக்காக ஏவிவிட்டுவிட்டு, தங்களை அலங்கரிப்பதிலும் வெட்டிப் பொழுது போக்குவதிலும் நேரத்தைச் செலவு செய்கின்றனர். இத்தகைய மாதரின் உடலமைப்பு கெட்டுக் குட்டிச் சுவரானதுடன், இவர்களின் கருவிலே விளையும் குழந்தைகளின் ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது.

குனிந்து வளைந்து வேலைகளைச் செய்யும் பொழுது பெண் மணியின் உடல் அங்கங்கள் அசைவு கொடுத்து, தசை நார்கள் சுறு சுறுப்படைந்து உடலுக்கு அளவான வளர்ச்சியை அளிக்

**'கமலமலர்'**

கிறது. சும்மா கிடக்கும் உடலில் சோம்பல் வளர்வதுடன் கெட்ட நோய்கள் குடிகொள்ளவும் ஏதுவாகிறது.

பொதுவாக வீட்டில் வேலைவெட்டிகளைக்கவனிக்க முடியாத பெண்கள், விளையாட்டுகளை விரும்பாத மாதர்கள், நடனக் கலையில் நாட்டம் கொள்ளலாம். இக் கலையில் விருப்பமில்லையேல் சில தேகப் பயிற்சி முறைகளைக் கையாளலாம்.

காலையில் பயிர்ச்சி

காலையில் எழுந்ததும் மலசலம் கழித்துவிட்டு தேகப் பயிற்சி செய்வதே நல்லது. ஓர் அறையிலே யன்னலைத் திறந்து வைத்துக்கொண்டு தேகப் பயிற்சி செய்தல் நலம். சுத்தமான காற்றோட்டம் இவ்வேளை அவசியம்.

ஓடும்போது கால்களை மாறி மாறி உந்துவது போன்று நின்ற நிலையிலேயே குதிப்பது-இடை, கால் முதலிய பாகங்களுக்கு நல்ல பயிற்சியை அளிக்கிறது. கால்களை ஒருங்கே வைத்துக் கொண்டு இடது, வலது, முன், பின் என்று வளைவதும் வயிறு, இடை போன்ற பாகங்களுக்கு நன்மை தரும். இவ்வேளைகளில் இடையில் இரு கைகளையும் ஊன்றிப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

இடையில் கை வைத்தபடியே வலது காலையும் இடது காலையும் மாறி மாறி முன் புறம் உயர்த்த வேண்டும். ஒவ்வோர் முறை ஒவ்வொரு கையையும் முன் புறம் நேராக நீட்டி உள்ளங்கையில் கால் பெருவிரல் படும்படி செய்ய வேண்டும். கைகளை மேலே உயர்த்திக் கொண்டு இடுப்பால் முன் புறமாக வளைந்து இரு கால் பெருவிரல்களையும் தொடல் வேண்டும். பின் புறமாகவும் வளைந்து பார்க்கலாம்.

கழுத்துக்கும் அப்பியாசம் கொடுக்க துரித கெதியில் கழுத்தை பல கோணங்களுக்கும் திருப்பி அசைக்கலாம்.

(மீதி அடுத்த வாரம்)

# குழந்தையின் பயம்......!

குழந்தைகளுக்கு எதைக் கண்டாலும் பயம்ஏற்படுவதேயில்லை. ஓடுகின்ற பாம்பையே எட்டிப் பிடிப்பார்கள். கொழுந்துவிட்டு எரியும் நெருப்பையேதொடுவார்கள். ஆனால் இப்பயமின்மை எக்காலமும் நீடிப்பதே கிடையாது.

வெகுவிரைவில் இக் குழந்தைகள் எதைக் கண்டாலும் பயப்படத் தொடங்கிவிடுகின்றன. இதற்குக் காரணம் என்ன?

பெற்றோர் குழந்தைகளின் தொந்தரவுகளைச் சகிக்காமல் அவர்களைப் பயமுறுத்த ஆரம்பிப்பதால்தான் குழந்தையுள்ளத்தில் பயம் ஏற்படுகிறது. குழந்தைகளுக்கு அதிர்ச்சிகள் எதுவும் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்வதும் மிக அவசியம். உணவூட்டும்போதும், புரளிபண்ணும்போதும் பேய் பிசாசு பூதம் என்றெல்லாம் குழந்தைகளுக்குப் பயமூட்டாதிருப்பதனால் குழந்தைகள் வீரர்களாக வளருகின்றனர்.

**விபரம் அடுத்த வாரம்!**

**5**

**கேள்விகள்**

**?**

# சதி!

என் வீட்டிலேயே எனக்குச் 'சதி'! என் அப்பா தான் என்னை எப்படியாவது தொலைத்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டி... இப்படிச் சதி செய்தார். பாவம்! அம்மா என்ன செய்வாள்? அப்பாவின் கட்டளைக்கு அடிபணிந்து என்னை, பரிதாப நிலைக்குள்ளாக்க இசைந்து விட்டாள்.

என் அண்ணனும் இந்த விஷயத்தில் மிகவும் வேகமாக நின்றான். அவன் என்ன செய்வான்? அப்பாவின் சொல்லைத் தட்டி நடக்க மாட்டானே அவன்! லேட்டஸ்'சான முறையில் அவனும், இந்த 'சதி' நிறைவேற பல 'ஐடியாக்களை அப்பாவுக்குச் சொன்னான்.

அவரும் அவனைப் பாராட்டி அவன யோசனையை அனுசரித்தார். 'சதி' மிகவும் சீக்கரத்தில் நிறைவேற அவாவுற்று, ஆவன செய்வதில் ஈடுபட்டார். நாளும் குறித்தாயிற்று. 'சதி' நிறைவேறும் நாள் வெகு விரைவில்!

எனக்கு உடல் எல்லாம் உதறத் தொடங்கியது. இவர்கள் எல்லோரும் சேர்ந்து எனக்குச் 'சதி' செய்ய முனைவதை நினைக்க எனக்கு வேதனை அதிகரித்தது. எனக்காகப் பரிந்து பேச, இந்த இடத்தில் ஒருவராவது இல்லையே, என்று என் மனம் ஏங்கியது.

**நிமிடக் கதை**

ஆத்திரம் மனதிற் பொங்கியெழ, அப்பாவிடம் பேசாய்; 'அப்பா! நீங்கள் செய்யப் போவது பெரும் சதியப்பா சதி! நான் இந்த வீட்டில் இருப்பது உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால்...இப்போதே மாமா வீட்டுக்காவது போகிறேன்' என்று துணிவாகவே கேட்டுவைத்தேன்.

'நீபேசக் கூடாது! உன் பேச்சுக்கு இனி இடமில்லை. போ உள்ள! நான் இட்டது தான் சட்டம்! சதியாமில்லை...சதி!' என்று, அப்பா கொஞ்சமும் நெஞ்சில் இரக்கமின்றிக் கூறிவிட்டார். என்ன செய்வேன்?

அப்பா, அம்மா, அண்ணன் முதலானோரை விட்டு விட்டு நான் விடுதியில் போயிருந்து தானா படிக்க வேண்டும்? அழுவதைத் தவிர வேறு வழியில்லை. வீட்டிலுள்ளோர் எல்லோருடைய சதிதான் பலித்தது. குறித்த நாளில் என்னை என் அப்பா ஒரு வண்டியிலே அழைத்துக் கொண்டு போய் மட்டக்களப்பு சிவானந்த வித்தியாலயத்திலுள்ள மாணவர் விடுதியில் சேர்த்துவிட்டார். பிறந்தநாள் முதல் வீட்டைப் பிரியாத என்னைப் பிரித்துக் கொண்டு போய் முன்பின் தெரியாத இடத்திலே ஒப்படைத்தார் என் தந்தை.

'மணிவாசகா! படித்து நல்லவனாக நீ வளரவேண்டும். இனிமேல் உன் அப்பா, அம்மா, அண்ணன் சகல உறவும் இதோ இருக்கும் பெரியவர்தான். அவரை வணங்கு பார்ப்போம்' என்றார் அப்பா.

'அழ-நோணிஷ்'

**கருத்துமேடை**

# கல்வியில் போட்டியா? காதலில் போட்டியா?

**கூட்டுக் கல்வி நாட்டுக்கு நல்லதா? [5]**

மிருகங்கள்தான் எதையும் தம் எண்ணத்தில் கொள்ளாமல் ஒன்றை ஒன்று பின்பற்றி நடக்கின்றன. அதுபோல் ஆறறிவு படைத்த நாமும்நடந்துவிட முடியுமா? நாகரீகத்தில்முன்னேறி விட்ட மேலை நாடுகளில் நடப்பது போல்தான் நடக்கவேண்டும் என்று நாம் எண்ணுவது தவறு. நாம் சில துறைகளில் மேற்குநாடுகளைப் பின்பற்றியிருக்கிறோம் என்பதற்காக முற்றாக அவர்களுடைய நாகரீகத்தையே கடைப்பிடிக்க எண்ணுவது பெருந் தவறாகும்.

அவர்களிடம் காணப்படும் சிறந்த முன்னேற்றத்தை எவ்வாறு நம் கலாச்சாரத்தோடு இணையவைக்கவேண்டும் என்பதையும் அதனால் விளையும் நன்மை தீமையையும் அறிந்துதான் அதைப் பின்பற்ற வேண்டும்.

தமிழ் படங்களில் முத்தமிடும் காட்சிகள் ஏன் தவிர்க்கப்படுகின்றன? நமது கலாச்சாரம்—பண்பாடு முதலியவற்றுக்கு அவை பொருந்தாது என்பதனாலேயே நமது படங்களில் முத்தக்காட்சிகளைத் தவிர்த்துள்ளனர். அதேபோல், நமக்கும்—நம் நாட்டுக்கும் ஏற்றுவராத எதையும் நாம்—அவர்களைப் போல் நாகரீகத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காகப் பின்பற்றவே கூடாது.

நமது மாணவ மாணவிகள் இன்னும் முற்றாக மனவளர்ச்சி அடையாதவர்களே! அவர்களைச் சேர்த்துக் கல்விபுகட்டுவதன் மூலம் அவர்களை மேலும் கெட்டுப் போவதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்கிறோமே தவிர முன்னேற்றுவதாக எண்ணுவது பெரும் பிழை.

**'முதற்கன்னி'**

காதலில் போட்டி

கூட்டுக்கல்வியில் போட்டி போட்டுக்கொண்டு மாணவ மாணவிகள் படிக்கிறார்கள் என்ற ஒரு கருத்து நிலவிவருகின்றது. ஆனால் இது முற்றிலும் தவறானதாகும். ஏன் அந்தப் போட்டி மனப்பான்மை தனித்தனியே மாணவ மாணவிகளிடம் ஏற்பட முடியாது? கூட்டுக்கல்வி நிலையங்களில் பயிலுவோர் படிப்பில் போட்டிபோடுவதை மறந்து தங்களுக்குள்ளே ஒருவரை ஒருவர் மறந்த நிலையில் காதலில் போட்டிபோடுகின்றனர்.

பால் உணர்ச்சியால் உந்தப்படும் பருவம், மனப்பக்குவம் அடையாத நிலை, இந்த நிலையில் எதை—ஏன். எதற்காக—செய்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருப்பதில்லை. அதை அறியக்கூடிய வயது வந்தாலல்லவோ அறிவார்கள்!

இந்த நிலையில் படிப்பிலோ வாழ்விலோ எந்த ஒரு வெற்றியும் அடைய முடியாமல் நடுத்தெருவில் நிற்கவேண்டியவராகிறார்கள்—காரணம் இந்தக் கூட்டுக்கல்வி.

தகாத உறவு

கூட்டுக்கல்வியினால் அச்சம் நாணம் முதலிய பெண்ணின் அணிகலங்கள் மாறிவிட்டால், ஆண்களைப் பெண்களும் பெண்களை ஆண்களும் மதிக்காதவர்களாக மாறிவிடுகிறார்கள். இதுமட்டுமா? எங்கும், எவரும, கண்டும், கேட்டும், அலுத்துப்போன-ஆசிரிய-ஆசிரியை; ஆசிரியர்-மாணவி; மாணவ-

(14-ம் பக்கம் பார்க்க)

# மங்கையர் சங்கம்



வடவியட்நாம் கொம்யூனிஸ்டுகளுக்கெதிராக ஒருபுறம் போர் நடைபெறுகின்றது. மறுபுறம்தென் வியட்நாமில் கொடிய நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு வேறோர் யுத்தம் நடைபெறுகின்றது. அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் மாகாணத்தைச் சேர்ந்த காப்டன் கார்ல்ஸ்குவீர் [illegible]ர். தாய் அக் குழந்தை[illegible] மற்றொரு தனயன் பார்த்துக்கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அழகு

## பா. சா. பார்த்தசாரதி

உலகெலாம் அழகு நிறைந்திருக்கின்றது. உள்ளம் இன்புறும் வண்ணம் ஒளிவீசும் தன்மை அழகிற்கு உண்டு. காண்பவர்களின் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கக் கூடிய ஒரு ஆற்றலே அழகாகும். பொலிவின் மிகுதியை—எழுச்சியை அழகு என்கிறோம். இயற்கை எழிலில் தோய்ந்த அழகு என்ற எழிலான சொல், பார்க்குமிடமெல்லாம் நிறைந்திருக்கும் வண்ணப் பொருள்களில் சூழ்ந்து, இன்பத்தை முகிழ்கிறது.

கிரேக்க அறிஞர் பிளேட்டோ அழகு என்பது ஒத்த தன்மை என்பதால் ஏற்படுவது என்பார். அழகு என்பது இணக்கத்தால் ஏற்படுவது என்று பிளாட்டினசும், வேற்றுமையிடை ஒற்றுமையால் ஏற்படுவது என்று மற்றுஞ் சிலரும் கூறுவர். சிலர் ஒழுங்கே அழகு என்று கூறுவர். இயற்கை அழகையோ செயற்கை அழகையோ தூய்க்கும்பொழுது உள்ளத்தில் பொதுவாக எழும் உணர்ச்சிகளே அழகின் அடிப்படையாகும். அழகைத் தூய்க்கும் பொழுது மனத்தில் முதலாவது தோன்றுவது கற்பனை—அதுவே அழகின் தன்மை என்று குரோச்சே என்னும் இத்தாலிய அறிஞர் கூறுவர். இந்தக் கற்பனையைக் கலைஞன் அழகான பொருள்களில் அமைக்கிறான்.

நீலவானம், நெடிய கடல், கோல ஞாயிறு, குளிர் வெண் திங்கள், ஆடிவிழும் அருவி, பாடிச் செல்லும் குருவி, நீந்திச் செல்லும் ஓடம், நிமிர்ந்து நிற்கும் மாடம், வண்ண வண்ண மலர்கள், வான்முட்டும் மலைகள், கண்ணைக் கவரும் சிலைகள், கலையில் தோய்ந்த ஓவியங்கள், கற்பனை நுள்ளும் வானவில் எல்லாம் அழகு! மயிலுக்குத் தோகையில் அழகு—குயிலுக்குக் குரலில் அழகு! அன்னத்திற்கு நடையிலே அழகு—மின்னலுக்கு ஒளியிலே அழகு; எருதின் நடையிலே பிடியின் பெருமிதத்திலே, களிறு செம்மாந்து நடப்பதிலே, காளையின் கட்டுடலிலே, மானின் விழியிலே, மலரின் இதழிலே, செடியின் அசைவிலே, கொடியின் நெளிவிலே அழகைக் காணலாம்!

வேய்ங்குழலின் தீஞ்சுவையில், வீணையிசை மாந்துவதில், தாய்க் கொஞ்சும் தனிமகனின் மழலைதன்னில், தமிழ் கொழிக்கும் அமிழ்தூறும் தலைப்பாட்டில், எழில் தவழும் நடனத்தில் அழகுணர்ச்சி துள்ளி விளையாடலைக் காணலாம். அழகு என்ற மங்கை 'காரிகை' அழகுறுவது அந்திப் போழ்தாகும். மாலைப் போழ்தில் மனத்தை ஈர்க்கும் கோலையிடத்து நறுமணம் கமழும். பூக்கள் புதுமணம் பரப்பும்—அதிலே ஈக்கள் கூடி இன்னிசை பாடும் கொஞ்சும் புறுக்கள் கூடி அமர்ந்து நெஞ்சம் மகிழ நேர்த்தியாயிருக்கும்! சின்னஞ் சிறிய வண்ணச் சிட்டுகள் விண்ணில் சிறகடித்து விளையாடும். தாமரைக் குளத்தில் வாத்துக்கள் நீந்தும்—தங்க மீன்கள் அதில் துள்ளித் திரியும். மாங்குயில் பாட்டும், செம்போத்தின் பாட்டும் ஓங்கியெழும். ஏங்கும் குஞ்சுகள் இரை தேடச் சென்ற தாயைத் தேடும். வேலைகள் முடிந்து காளைகளுடன் வீடு திரும்புவான் உழவன். கணவனுகிய மதியைக் கண்டதும் மனைவியின் முகமாகிய அல்லி மலரும்! மாலைப் பொழுதிலேயே இயற்கை அழகின் உச்சியை நாம் நன்குணரலாம்.

### அழகின் வேறுபாடு

'அழகே உண்மை—உண்மையே அழகு' என்று சான்றோர் கூறுவர். 'கல்வி அழகே அழகு. அறிவுடைமையே அழகு; ஒழுக்கமுடைமையே உயர்ந்த அழகு' என்றெல்லாம் பெரியோர்கள் பேசுவார்கள். 'காணுமிடமெல்லாம் அழகு; அழகுடைய பொருளால் என்றும் அடைவது இன்பமே. அழகிற்கு நான் அடிமை' என்று பாவலர்கள் பற்பலவாறு கற்பனை செய்து எழில் நலம் பயக்கும் இயற்கை அழகைச் சிறப்பிப்பார்கள். சிற்பி—சிலையைச் செதுக்குவதில் கலையழகைக் காணுவான். ஓவியன் தன் உள்ளத்தை அங்கே வரைவான். உணர்ச்சி வயப்படும் கற்பனையில் தோய்ந்த அந்த ஓவியன் அழகை ஓவியத்தில் அமைப்பான். மகிழ்வான்.

'அழகு ஆராய்ச்சிக்குகந்தது. எது அழகு? எல்லாம் அழகு! அமைதியே அழகு...' என்று மெய்ப்பொருள் (Philosophy) அறிஞர்கள் ஆராய முற்படுவார்கள், காதலாகி, கசிந்து, கண்ணீர் மல்கி, நெக்குருகும் நெஞ்சோடுநின்று, உயிரெல்லாம், உணர்வெல்லாம் இறைவன் மேற்செல்ல, அடியார்கள் ஈசனை அழகுப் பொருளாகக் கருதிப் போற்றிப் புகழ்ந்து அழகின்பங் காண்பார்கள். 'பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து நீ பாவியேனுடைய, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய, தேனினைச் சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே! சிவ பெருமானே! நானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன், எங்கெழுந்தருளுவதினியே!' என்று 'ஊனினையும் என்பினையும் உருககாநின்ற ஒண்மையினைப்' பாடுவார்கள். 'மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும், விங்கிளவேனிலும் மூசுவண்டறைப் பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நிழலே!' (பெரிய புராணம்) என்பார் திருநாவுக்கரசர். அதிலே நாம் ஒரு அழகுணர்ச்சியைக் காணலாம். உண்மையான அழகு கல்வி கற்ற சான்றோரிடத்தில், அறிவு நலம் வாய்ந்த மேலோரிடத்தில் செங்கோலோச்சக் காணலாம்.

வெளியழகு இளமை மறைந்ததும் அழியும். உண்மையான உள்ளொளி துள்ளும் ஒழுக்க நெறி—அன்புள்ளம் என்றும் வற்றாது. அறஞ் செய்தலே சிறந்த அழகாகக் கருதப்படுகிறது.

'நிலத்திற் கணியென்ப
நெல்லுங் கரும்பும்
குளத்திற் கணியென்ப
தாமரை பெண்மை
நலத்திற் கணியென்ப
நாணம் தனக்கணிதான்

தான்செல் லுலகத் தறம்'

என்று நான் மணிக்கடிகைப் பாட்டில் ஒவ்வொரு இடத்திற்குமுரிய அழகைக் கூறி அறவழகைப் பற்றி புகழ்ந்து கூறப்படுகின்றது.

'ஒளிறுவாள் அருஞ்சமம் முறுக்கிக் களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே' என்று கருதும் வீர மறவன், விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள், வைக்கும் தன் நாளை எடுத்து' என்ற குறள் நெறிக்கேற்ப, முகத்தினும் மார்பினும் பட்ட புண்ணையே அழகாகக் கருதி இன்புறுவான் (65) புண்பட்ட விசயாலயன் வரலாற்றில் புலவர்களால் புகழப்படுகிறான். வீர மன்னர்கள் தம் வெற்றிக்கு அடையாளமாக இந்தப் புண்ணையே கருதுவார்கள். 'இந்தப் போரில் இந்தப் புண் கிடைத்தது' என்று மற்றவர்களிடம் மகிழ்வுடன் உரையாடுவார்கள். பழுவேட்டரையர் என்ற சோழுட்டுத் தளபதி முகம், மார்பு எங்கும் புண்பட்டவர் என்பதை வரலாற்றுன் அறியலாம். முகத்தினும் மார்பினும் பட்ட புண்ணை அழகாகக் கருதும் மன்னர்கள் முதுகில் அப்புண்பட்டால் அதை இழிவாகக் கருதுவர். சேரமான், பெருஞ் சேரலாதன், சோழன் கரிகாலனோடு போரிட்டான். அப்போரிலே புறப் புண்பட நாணங்கொண்டு, உயிர்விட முனைந்து வடக்கிருந்தான் என்பதைப் புறநானூற்றிலிருந்து (65) அறியலாம்.

### இயற்கை அழகு

இயற்கையன்னை எங்கு பார்த்தாலும் எழிலின் வண்ணத்தைப் பொழிந்திருக்கிறாள். கவிஞன், கலைஞன், ஓவியன் முதலானோர் இயற்கையழகையே பெரிதும் விரும்புவார்கள். எவராலும் எவ்வித முயற்சியுமின்றி இயற்கையாகவே எழில் பெற்று இலங்கும் காட்சிப் பொருள்களை இயற்கையழகு என்கிறோம். கவிஞர்கள் கருமையிலும் உயர்ந்த அழகு இருப்பதாகக் கூறுவார்கள். மேகத்திற்கு எழிலி என்ற ஒரு ஒயிலான பெயர் இருக்கிறது. அழகைத் தெய்வமாகக் கருதிய தமிழ் மக்கள் கண்ணன் நீலவண்ணன் என்று போற்றிப் புகழ்கின்றார்கள். கிரேக்கர்கள் 'வீனஸ்' என்ற கடவுளைப் பெண் அழகுத் தெய்வமாகப் போற்றுகிறார்கள். தமிழ் வடமொழி இலக்கியங்களும் மன்மதன் ரதியை அழகுத் தெய்வமாக வணங்குகின்றார்கள். முருகு என்ற சொல்லிற்கே அழகுஎன்ற பொருள் உண்டு. அழகுப் பொருள்களை மனிதன் கண்டதும் தானும் அழகுடன் இருக்க வேண்டுமென்று விரும்பி, தன்னையும் சீர்திருத்திக் கொள்கிறான். அழகாய் இருக்க விரும்பும் அவன், அழகான காட்சிகளைப் பார்க்கிறான்; மகிழ்கிறான்; அழகைப் போற்றுகிறான். தமிழர்கள் அழகில் மிகுந்தமைக்குக் காரணம் அவர்களுடைய இயற்கை அழகே ஆகும். இயற்கைப் பொருள்களில் இன்பங்கொண்ட மக்கள் மலர், தழை முதலியவைகளை அணிந்து பொலிவுற்றார்கள். எல்லா நிலத்து மக்களும், அவர்களால் வழிபடும் தெய்வங்களும் அவர்களுக்குரிய கருப் பொருள்களும் அழகை அணிகலனுகப் பெற்று இலங்குகின்றன. 'கொல்லிப் பாவையை' பேரழகு வாய்ந்த பாவையென்று ஆராய்ச்சியாளர் கூறுவர். உலக அழகி கிளியோபாட்ரா இயற்கை அழகில் தலைசிறந்து விளங்கினள். அவள் தமிழ் நாட்டுப் பாண்டிமுத்தை மதுவினுள் போட்டுக் குடித்தாளாம்! ரோமர்கள் இயற்கை அழகு மிக்க தமிழ்நாட்டு முத்தை உயர்ந்த அழகுப்பொருளாக மதித்தார்களாம்! கோசல [illegible] தற்கு கம்பர் கூறும் பாட்டுகள் மகிழ்ந்து போற்றுதற்குரியதாகும்.

'தண்டலை மயில்கள் ஆடத்
தாமரை விளக்கம்
தாங்கக்
கொண்டல்கள் முழவின்
ஏங்கக் குவளைக் கண்
விழித்துநோக்கத்
தெண்டிரை எழினி
காட்டத் தேம்பிழி
மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும்
மாதோ'

என்கிறார் கம்பர். அழகான இப் பாட்டில் நயங் காணலாம்.

இயற்கை அழகிற்கு இதயத்தைப் பறிகொடுக்காதவர்கள் இவ்வுலகில் இல்லை எனலாம். இயற்கை அழகே உண்மை அழகு. அது தெய்வமாகப் போற்றப்படுகிறது. இயற்கை அழகுமழலைபேசும் குழந்தைகளிடமே போற்றும் முறையில் இருக்கிறதெனத் துணியலாம். முருகியல் அழகிற்கு நெஞ்சைப் பறிகொடுக்காதவர்கள் இல்லை.

### செயற்கை அழகு

இயற்கை அழகு உள்ளவர்களும், அழகு இல்லாதவர்களும், இன்னும் அழகில் மேம்பட செயற்கை முறையில் ஒப்பனை செய்துகொள்வார்கள். கவிஞர்கள் தலைவியின் அழகை கற்பனையால் உயர்த்தி, அவர்களுக்கு ஒப்பனை புரியும் பொருள்கள் இன்னும் அழகைக் கொடுப்பதோடு தானும் அழகுறுகின்றன என்று தமக்குரிய தனி நடையில் எழுதுவார்கள்.

சூர்ப்பநகை வருதலை கம்பர் உயர்ந்த ஓசைஅழகுடன் கூறி இருக்கிறார். ஓசை கவிதைக்கு உயர்ந்த அழகு தரும்.

"பஞ்சியொளிர் விஞ்சுகுளிர்
பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சநிமிர்
சீறடியளாகி
அஞ்சொலிள மஞ்ஞையென
அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென
வஞ்சமகள் வந்தாள்.''
(சூர்ப்பநகைப் படலம்)

இதில் சூர்ப்பநகை அழகையும், கம்பரின் கவிதை அழகையும், துள்ளி வரும் ஓசை அழகையும் ஒருங்கே காணலாம்.

"இழைகளும் குழைகளும்
மின்ன முன்னமே
மழைபொரு கண்ணினை
மடந்தை மாரொடும்
பழகியது எனினும்இப்
பாவை தோன்றலால்
அழகெனும் அழகும்ஓர்
அழகு பெற்றதே.''

(மிதிலைக் காட்சிப்படலம்) என்கிறார் கம்பர். 'அழகு' என்ற ஒன்று சீதையினுல்ஒரு தனி அழகைப் பெற்றதாம்!

செயற்கைக் காட்சிகளில் கழிஞனுடைய மனம் அவ்வளவாக விரும்பிச் செல்லாது. காகிதப் பூக்கள் கண்ணைக்கவரலாம். ஆனால்சிறிய வெண்மையான, மல்லிகை மலர்களிடம் உள்ள மணத்தை, கவினை, கலையழகை காகிதப் பூக்களிடம் காண முடியாது. அழகாய் இருக்க விரும்பாதவர் உலகில் எவருமே இல்லையெனலாம். சிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற இலக்கியங்களைப் படிக்கும்பொழுது, அதில்

(14-ம் பக்கம் பார்க்க)

## யாழ். இளம் எழுத்தாளர் சங்கம்

மேள தாளங்களோடு, 1964-ம் ஆண்டு நடைபெற்ற யாழ். இளம் எழுத்தாளர் சங்கத்தின் ஆண்டு விழாவின் போது, மேற்படி சங்கம் அகில இலங்கை ரீதியிற் செயல்படவேண்டுமென்று தீர்மானித்து, கொழும்பு கண்டி போன்ற விடங்களுக்கும் பிரதிநிதிகளைத் தெரிவு செய்தனர். நா. சண்முகநாதன் (யாழ்வாணன்) தலைவராகவும், கே. மகாலிங்கம் செயலாளராகவும். இ. செ. கந்தசாமி அமைப்புச் செயலாளராகவும், தா. சண்முகநாதன் (கிணறுகாவி) பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர், அமைப்புச்செயலாளர் என்றொரு பதவியேன் தெரிவு செய்யப்பட்டதென்றால், இலங்கை பூராவிலும் கிளைகளமைக்க முயலவே.

—இவர்கள் போன விடம் தெரியவில்லை.

ஒரு கூட்டமாயினுமிதுவரை நடைபெறவில்லை. ஒரு தடவை கூட்டத்திற்கு முன்னறிவித்தல் செய்தும் எவரும் வராமையினுல் தலைவரும், செயலாளரும் வாட்டமாகத் திரும்பினர். செயற்குழுவைக் கூட்டிச் சங்கத்தின் பெயரை முதலில் மாற்றி அமைத்து, அகில இலங்கை ரீதியில் செயலாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் தலைவர், செயலாளர் ஆகியோர் செய்த பிரயத்தனங்கள் அமைப்புச் செயலாளரின் ஒத்துழைப்புக் கிடைக்காமையினுல் ஈடேறவில்லையாம். காரணம் செயற்குழு உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய விபரங்கள் அவரிடமேயுள்ளனவாம். நேரிலும் தபால் மூலமும் கேட்டும்அமைப்புச்செயலாளர் தட்டிக்கழித்து வருகிறார் என்று தெரிகிறது.

## இலக்கிய உலகு

"வேதாளம்"

காரணம் வெகு சுவையானது.

அமைப்புச் செயலாளர் சார்ந்துள்ள குழு இச்சங்கத்தில் சிறுபான்மையினராக மாறி விட்டதாகும் என்று பேசிக்கொள்ளப் படுகின்றது. இச் சங்கம் எந்த குழுவையும் சேராது நடுவழிநின்று செயலாற்ற விழைவது பாராட்டத்தக்கது ஆனால் தாமும் செய்யாது, பிறரையும் செய்ய விடாத சில 'அருங்குணவான்கள்' இருக்கிறார்கள்.

யாழ். இளம் எழுத்தாளர் சங்கம், யாழ். முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கலைக்கப்பட்டது போல், கலைக்கப்படலாம் என்று பேசிக்கொள்ளப் படுகின்றது.

இருந்தும் இயங்காமலிருப்பதும், இல்லாதிருப்பதும் ஒன்றுதான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 ஆகஸ்ட் மாதம் 8-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலைபேசி எண் - 3411 த. பெ. 1183

# முட்டுக்கட்டைகளை அகற்றுக!

'சாமி வரம் கொடுத்தால் போதாது—பூசாரியும் வரம் கொடுக்க வேண்டும்' என்பது ஒரு நாடோடிப் பழமொழி. 'சிறுபான்மை மக்களின் உரிமைகள் பற்றி அமைச்சரவை நல்ல முடிவுகளைச் செய்தால் மட்டும் பொதாது. அவற்றை அதிகாரிகள் அப்படியே அமுல் நடத்தவும் வேண்டும்' என்று வற்புறுத்த வேண்டிய நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் முடிவுகளை சரிவர அமுல் நடத்துவதுதான் அதிகாரிகளின் கடமை. அதில் தத்தம் விருப்பு வெறுப்புகளையும், சொந்த அரசியற் கருத்துகளையும் திணிப்பதற்கு அதிகாரிகளுக்கு இடம் கிடையாது. அமைச்சரவை ஒரு முடிவைச் செய்ய, அந்த முடிவைத் தமது சொந்தக் கண்ணோட்டத்தில் விபரீதமான முறையில் வியாக்கியானம் செய்து, அந்த வியாக்கியானத்திற் கேற்ப அமுல் நடத்துவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரமோ உரிமையோ கிடையாது.

ஆனால் இன்று தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக அமைச்சரவையின் முடிவுகளை மேற் கண்ட முறையில் அமுல் நடத்த முயற்சிகள் செய்யப்படுவதாக ஒரு செய்தி கூறுகிறது.

அரசாங்கத் திணைக் களங்களில் சிங்கள உயர்தர அதிகாரிகளில் அநேகர் வகுப்புவாத எண்ணங் கொண்டவர்களாகவோ, தேசிய அரசாங்கத்தின் கொள்கைக்கு மாறுன வர்களாகவோ இருப்பது கண்கூடு. சிறுபான்மை மக்களுக்குச் சலுகைகளோ உரிமைகளோ வழங்கக் கூடிய அரசாங்கத்தின் முடிவுகளை அவர்களால் சகித்துக்கொள்ள முடியாது. எனவே அந்த முடிவுகளைத் திரித்தோ, புதிய வியாக்கியானங்களைக் கொடுத்தோ, அவற்றைக் குற்றுயிராக்குவதுடன், அமுல் நடத்தும்போது எதிர்மாறுன விளைவுகள் தோன்றும்படி செய்துவிடுகின்றனர். இது கலப்பற்ற நாசவேலை என்பதில் ஐயமில்லை!

தமிழ் அரசாங்க ஊழியர்கள் பற்றிய அரசாங்க முடிவுகளை அமுல் நடத்தும் விடயத்திலும் இம்மாதிரியான "நாசவேலை" நடத்த முயற்சிகள் நடைபெறுவதாகவும் தெரிகிறது.

**ஆகவே குறிப்பாக, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகள் பற்றி அரசாங்கம் சாதகமான ஒரு முடிவைச் செய்தால், அதனைச் சரிவர அமுல் நடத்தவும் தயாராயிருத்தல் வேண்டும். அதற்கு எத்தகைய வியாக்கியானமும் அளிக்க, அமுல் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்ள அதிகாரிகளை அனுமதிக்கக் கூடாது. இல்லையேல், அந்த முடிவால் நன்மைக்குப்பதில் விபரீத பயன் தான் இறுதியில் ஏற்படும்.**

ஒரு சிறந்த முடிவைச் செய்வதைவிட அதனைச் சரிவர அமுல் நடத்துவதே முக்கியமாகும். நிர்வாக இயந்திரம் சிக்கலின்றி இயங்கினலன்றி இந்தப் பணியை வெற்றிகரமாகச் செய்ய முடியாது. "களை எடுத்தல்" தேவைப்படும் போது, தயக்கமின்றி அதனையும் செய்து, திணைக்களங்களைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதே சமயத்தில், சிறுபான்மையோர் பற்றிய அரசாங்கத்தின் நல்ல முடிவுகள் சரிவர அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதைக் கண்ணும் கருத்துமாக கவனித்து வரவேண்டியது தமிழரசுப் பாராளுமன்றப் பிரதிநிதிகளினதும் தவிர்க்க முடியாத கடமையாகும்.

# வியட்நாம் நெருக்கடி

வியட்நாம் நெருக்கடி ஓர் அபாயகரமானகட்டத்தை அடைந்துள்ளது. வியட்நாமில் அமெரிக்கா தன் படைபலத்தையும் ஆயுதபலத்தையும் பெருக்கிவருகிறது. வியட்நாம் போரில் மேற்கொண்டும் ரூ. 850 கோடி செலவிடவும் 340,000 துருப்புகளை அங்கு அனுப்பவும் அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாம். வட வியட்நாமைத் தாக்குவதால் பயனில்லை என்று தெரிந்தும் அங்கு அமெரிக்கா தொடர்ந்து சரமாரியாகக் குண்டுகளை வீசிவருகிறது.

இதன் விளைவாக சீன தலையிடவும் மற்றொரு கொரியயுத்தம் ஏற்படவும் வழிபிறக்கும். சிறிய நாடொன்றின் உள்நாட்டு விவகாரங்களிற் பெரிய வல்லரசொன்று தலையிட்டால் இம்மாதிரியான விளைவுகள் ஏற்படுவது தவிர்க்கமுடியாது. வியட்நாம்போரின் விளைவு அந்தநாட்டின் தேசிய எல்லைகளுக்குள் மட்டும் அடங்கிவிடாது. அது முழு தென்கிழக்காசிய நாடுகளையே பாதிக்கும். மற்ருேர் உலகயுத்தத்திற்கான 'தீப்பொறி' வியட்நாம் மண்ணிலிருந்து தோன்றுவதும் சாத்தியமே.

அமெரிக்காவின் துருப்புகளையும், நவீன ஆயுதங்களையும் டாலர்களையும் கொண்டு வியட்நாம் சிக்கலைத் தீர்க்கமுடியாதென்பது இன்று தெளிவாகியுள்ளது. போரைத்தொடர்ந்து நடத்திஞல் விபரீத விளைவுகள்தான் ஏற்படமுடியும். குண்டுவீச்சை நிறுத்துமாறு ஜனுதிபதி டிட்டோவும் பாரதப் பிரதமர் சாத்திரியும் கூட்டறிக்கை விடுத்துள்ளது கவனிக்கத்தக்கது.

வியட்நாமில் சமரசம் ஏற்படுத்த சாம்ராஜ்ய நாடுகள் செய்த முயற்சி புகைந்துபோயிற்று. எனவே இந்தப் பொறுப்பு முற்றிலும் மண்டலசார்பற்ற ஆசிய—ஆபிரிக்க நாடுகள்மீது இன்று சுமத்தப்பட்டிருப்பதாகவே தோன்றுகிறது.

ஐ. நா. மூலம் வியட்நாம் நெருக்கடிக்கு முடிவுகாணலாமென்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது. ஐ. நா. முடிவுகளை சீனவும், வடவியட்நாமும் வியட்கொங்கொரில்லாப் படையினரும் ஏற்றுக்கொள்ளவேண்டுமே!

**சாம்ராஜ்யப் பிரதமர்கள் மாநாட்டைப்போல ஐ. நா. சபையும் உறுதியற்ற ஊசலாடும் முடிவுகளைச் செய்யுமாஞல், வியட்நாம் நெருக்கடி நிச்சயம் தீராது.**

அடுத்துவரும் ஐ. நா. பொதுச்சபைக் கூட்டத்தில்வியட்நாம் நெருக்கடி எதிரொலிக்கும் என்பது திண்ணம். அப்பொழுது நெருக்கடிதீர வழிகாட்டவேண்டிய பொறுப்பு இலங்கைத் தூதுகோஷ்டிமீதும் சுமத்தப்படுமென்பதில் ஐயமில்லை. ஐ. நா. வில் வல்லரசுகளின் பேச்சுக்கே தலையாட்டிக் கொண்டிருக்காமல், ஆசிய, ஆபிரிக்க நாடுகளுடன் கைகோத்துக்கொண்டு வியட்நாம் பிரச்சினையைத் தீர்க்கதுணிச்சலுடன் வழிகாட்டவேண்டிய பெரும் பொறுப்பை இலங்கைத் தூதுகோஷ்டியினர் மேற்கொள்ளவேண்டும்.

# தமிழ் ஊழியர்களின் கூட்டை தகர்த்துவிடச் சதி

## ● வடக்கே வரும் பிரமுகர்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்துக்கு ஒரு போட்டி முளைக்கிறது! வேடிக்கைமட்டுமல்ல வேதனையையும் சேர்த்து வழங்கும் செய்தி இது.

மொழியுரிமைப் போரில் முன்னணிசெல்லவலுவிழந்து வாடிக்கிடந்த சமுதாயத்துக்கு வலிவு கொடுக்கப் புறப்பட்ட உதய ஞாயிறு போன்று பணிபுரியும் தன்னலமற்ற இளைஞர்களைக் கொண்ட இச் சங்கத்துக்கு ஊறுதேட முனைபவர்கள யார்?

நிச்சயமாக உண்மை நோக்கம் கொண்ட எவரும் இத்தீய செயலில் இறங்க மாட்டார்கள். வஞ்சகமும் கபட எண்ணமும் கொண்ட கூட்டத்தினர்தான் இம் முயற்சியில் இறங்குவார்கள்.

தமிழ் ஊழியர்களின் சங்கத்தின் சேவையை நாடு நன்கு அறியும். இச்சங்கத்தின் சங்கநாதமே கடந்த ஆட்சியை கதிகலங்க வைத்தது. கொள்கைக் குன்றுகளையும் இலட்சியப்பற்றுடைய இளவல்களையும் கொண்ட இச்சங்கத்தைச் சாய்க்கபின்புறத்தில்ஒளிந்து கொண்டு பேடி விளையாட்டுக்காட்டும் பித்தர்களின் வேடம் விரைவில் கலைந்து போகும் என்பது சர்வ நிச்சயமானதே! எனினும் இத்திய சக்திகளிடம் எழுதுவினைஞர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டியது அவசியம் என்பதையும் அறிவுறுத்த விரும்புகிறோம்.

கடந்த சில ஆண்டுகளாக அரசியல்அஞ்ஞாதவாசம் புரிந்துவிட்டு பொதுத்தேர்தல் மழை பெய்யத் தொடங்கியவுடன் புத்துயிர் பெற்றவர்கள்போல் கிளம்பி பிரசாரப் பீரங்கிகளை முடுக்கிவிட்டு முழக்கமிட்ட சில சந்தர்ப்பவாதிகளிடம் தமிழ் அரசாங்க ஊழியர்களைப் பணயம்வைத்து விளையாட சில விஷமிகள் இன்று முன்வந்துள்ளனர்.

இதுகாலவரை தமிழ் ஊழியர்களில் பெரும்பாலாரை வாட்டிய பிணிகள் சில பறக்கடிக்கப்பட்டுவிட்டன. மேற்கொண்டுமுள்ள பல கஷ்டநஷ்டங்களைப் போக்கடிக்கவும் முயற்சிகள் நடைபெற்றுக்கொண்டு வரும் இவ்வேளையில் பித்தலாட்டக்காரர்களின் பகடை விளையாட்டுகளுக்கு தமிழ் ஊழியர்கள் தங்களை உட்படுத்திக்கொள்ளுதல் அழகல்ல என்று கூறிவைக்க விரும்புகிறோம்.

### வடக்கே வருகிறார்

அறிவாளி—அரசியல் ஞானி—அப்பழுக்கற்ற அறநெறியாளன்—பாகுபாடுகள் காட்டாத பெரியார்-பாரபட்சம் காட்டாத பண்பாளர்—தன்னலமற்ற சேவையாளர்—சமுதாய, அரசியற் புரட்சிக்காரர்—சமத்துவம், சகோதரத்துவம் முதலியவற்றைப் போதிக்கும் இலட்சிய புருடர் என்றெல்லாம் போற்றப்பட்டார் ஒருவர். இத்தனை சிறப்பியல்புகளுக்கும் தம்மை ஆட்படுத்திக் கொண்ட ஒருவர் இன்று திடீரென மேற்கூறப்பட்ட வர்ணனைகள் முழுவதற்கும் முற்றிலும் எதிரானவராகக் காட்சி தருகிருர்.

வேறுயாருமல்ல. டாக்டர் என். என். பெரேரா அவர்களைத்தான் குறிப்பிடுகிறேம்.

சிங்களத் தலைவரான டாக்டர் பெரேராவைதமிழ் பேசும் மக்கள் சமுதாயம் உயர்ந்த நிலையில் வைத்து ஏற்றிப் போற்றியது. வகுப்பு வெறியர்களான சில சிங்கள அரசியல்வாதிகளின் வஞ்சக வலைக்குள் தமிழ்பேசும் மக்கள் சமுதாயம் வீழ்ந்து மடிந்துபோகாது காக்கக் கூடிய தகுதியுடைய ஒருதலைவர் என டாக்டர் பெரேராவை பலர் நம்பியிருந்தனர்.

சுதந்திரன் அரசியல் நிருபர்

பல வருடங்களாக நீடித்து வந்த இந்த நம்பிக்கை படிப்படியாகச் சிதற ஆரம்பித்தது. சிறிமாவோ அம்மையாரின் ஆட்சியில் இணைந்து அமைச்சர் பதவியை ஏற்ற போதும்கூட, தாங்கள் இழந்துவிட்ட உரிமைகள் சிலவேனும் மீட்டுப் பெறக்கூடிய வாய்ப்புக் கிடைக்கலாம் என்று தமிழ்பேசும்சமுதாயம் நம்பிக்கையுடன் எதிர்பார்த்தது. ஆனல், டாக்டர் பதவியில் ஏறியவுடனேயே மக்கள் கொண்டிருந்த நம்பிக்கைக் கோட்டை சிதறுண்டு சின்னபின்னமாகியது.

தமிழரசுக்கட்சித் தலைவர்களிடம் சில சமசமாஜ, கொம்யூனிச பக்தர்கள்அடிக்கடி தங்கள் சகோதரத்துவம்—சமத்துவம்—சர்வதேசியம்—பாரபட்சமின்மை—போன்ற கொள்கைகளைக் காட்டி வாதிப்பதுண்டு. அப்போதெல்லாம் தமிழரசுக்கட்சித் தலைவர்கள் தீர்க்கதரிசனத்துடன் கூறும் வார்த்தைகள்—

'அழுதழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்.'
'தன் கையே தனக்குதவி.'

இக்கூற்றுகள்இன்றுமெய்ப்பிக்கப்பட்டாய் விட்டது. டாக்டர் பெரேரா, பீட்டர் கெனமன் போன்ருேர் தங்கள் சுய உருவத்தைக்காட்டி தமிழ்பேசும் மக்கள் சமுதாயத்தை ஏமாற்றிவிட்டார்கள். இவர்களையேதஞ்சமெனக் கட்டித் தழுவிக் கொண்டிருந்த சில தமிழ் மக்களும் இன்று 'மண்குதிரையை நம்பிக்கடலில் இறங்கியவர்'களாகி, இரண்டுங்கெட்டான் நிலையிலிருக்கின்றனர்.

பதவி ஆசைக்காகத் தான் கொண்ட கொள்கையை—கடைப்பிடித்த இலட்சியத்தைக் கைவிட்டு தமிழ்பேசும் சமுதாயத்தை ஏமாற்றிவிட்ட டாக்டர் என். எம். பெரேரா வடமாகாணத்துக்குப் புறப்படுகிருர். தம்மையே நம்பியிருந்த தோழர்கள் இன்று தம்மாலேயே தடுமாற்றமடைந்து கிடக்கும் பாங்கினைப் பரிசீலிக்கவே போகிருர் என்றுதான் டாக்டரின் வடக்கு விஜயத்தை நாம் வர்ணிக்க விரும்புகிறேம்.



கதிரை மலைமேலே காட்சி கொடுத்து குமரன் குடிவாழும் கோயில்.

# திரு ஜீ. ஜீ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. பொன்னம்பலத்துக்கு எந்த அமைச்சைக் கொடுக்கலாமென்பது ஒரு பிரச்சினையாகியுள்ளது.

அவருக்கு இலாக பொறுப்பற்ற அமைச்சர் பதவியைக் கொடுப்பதா, திட்டத் தயாரிப்பு-பொருளாதார விவகார அமைச்சைக் கொடுப்பதா என்பது இன்னும் திர்மானிக்கப்படவில்லை.

இலாகா பொறுப்பற்ற அமைச்சர் பதவியை அவருக்கு வழங்குவதென்ற முடிவு மாறுவதற்கான அறிகுறிகள் தோன்றியுள்ளன. அவருக்குத் திட்டத் தயாரிப்பு—பொருளாதார விவகார அமைச்சு அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்து வலுவடைந்துள்ளது''

—ஜனதின (5-8-65)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க முடிவுக்கு அதிகாரி விளக்கம்

## திறைசேரிச் செயலாளர் மீது தமிழ் ஊழியர் அதிருப்தி

**தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு சாதகமாக எடுக்கப்படும் முடிவுகளை எவ்வளவுதூரம் பாதகமான முறையில் அமுல் நடத்த முடியும்என்று திறைசேரிச் செயலாளர் தினமும் ஆராய்ச்சி நடாத்திவருகிறார் என்று கூறப்படுகிறது.**

**கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற நிரந்தரச் செயலாளர்களின் மாநாட்டில் இடம்பெற்ற ஒரு நிகழ்ச்சி இந்த உண்மையைத் துலாம்பரமாக எடுத்துக்காட்டுகிறது.**

சிங்கள தீவிரவாதியெனக் கூறப்படும் திறைசேரிச்செயலாளர் தமிழ் ஊழியர்களுக்குச் சாதகமான முறையில் இருக்கும் அமைச்சரவை முடிவுகளையும் எவ்வளவு தூரம் மாற்றி அவற்றைப் பாதகமான முறையில்அமுல் நடாத்தலாம் என்று ஆராய்கிறாராம்.

தேசிய அரசாங்கம் சிறுபான்மை மக்களின்குறைந்த பட்ச உரிமைகளை வழங்குவதற்குத் தானும் முட்டுக்கட்டைபோட வேண்டும் என்று இந்த அதிகாரி ஒற்றைக்காலில் நிற்கிறாராம். கடந்தவாரம் நடைபெற்ற சகல நிரந்தரச் செயலாளர்களின் மாநாட்டில் இவர் அமைச்சரவையின் முடிவை விளக்கிக் கூறுகையில் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று இதை மேலும் உண்மைப்படுத்துகிறது.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் 55 வயதுக்குமேல்சேவையில் தொடர்ந்திருக்க விரும்பினுல் சிங்களமொழி அறிவு பெற்றிருப்பது விரும்பத்தக்கது என்று கடந்தவாரம் அமைச்சரவை முடிவு செய்திருந்தது. இந்த முடிவை ஏனைய நிரந்தரச் செயலாளர்களுக்கு எடுத்துக்கூறுகையில் '55 வயதுக்குமேல் ஒரு தமிழ் ஊழியர் சேவையில் தொடர்ந்திருக்க விரும்பினுல் அவர் கட்டாயம் சிங்களமொழித் தகைமை பெற்றிருக்கவேண்டும்' என்று விளக்கினுராம்.

அமைச்சரவைமுடிவில்கட்டாயம் என்ற பேச்சிற்கே இடமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதேபோன்று ஏனைய முடிவுகளையும் இவர் மாற்றி பாதகமான முறையில் அமுல் நடாத்த முற்படலாம் என்றபயம் தமிழ் அரசாங்க ஊழியர் மத்தியில் நிலவுகிறது.

### வரவு-செலவு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தபால் தந்திக் கட்டணம் கூடும்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகப்பணம் ஒதுக்கப்படும்.

தர்மப்பணத்துக்கு வெட்டுவிழும்—க்ஷய நோய் நிவாரணம் தடைப்படும்.

கலால் வரி கூடும்.

வெளிநாடு சவாரி செல்லும் தொகை கூடும்.

நகராப் பகுதி பொழுதுபோக்குச் செலவு அதிகரிக்கும்.

சுங்க வரி கூடும்.

இராணுவம் பலப்படும்''

### சிங்களம்படி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

போனசுகளும் வழங்கி அரசாங்க ஊழியர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டுவந்த சலுகைகளுடன் மற்றெரு சலுகையும்வழங்குவதற்காக 4000 புதிய ஊழியர்களை எடுக்கப் போவதாகத் தெரிகிறது.

இப்பொழுது இதனைச்சிங்களம் தெரியாதவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடைசி அவகாசமாகக் கருதுவதில் தவறில்லை.

'சிங்களத்தைப் படிக்க வேண்டும். இல்லையேல் விலகிச் செல்லவேண்டும். ஒன்றில் இரண்டில்லை என்று கூறியதைப்போல அப்பத்தை சாப்பிடுவதையும் அப்பத்தை வைத்துக்கொள்வதையும்—இரண்டையும்—ஒரே சமயத்தில் செய்ய முடியாது. சிங்களம் தனி அரசாங்கமொழியாவதைக் குற்றுயிராக்க எவ்வகையிலும் இடமளிக்க முடியாது.'

### எதிர்க் கட்சிகளின்...

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

யார் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும், யார் ஆதரித்தாலும் ஆதரிக்காவிட்டாலும் காங்கிரஸ் கட்சியைத் தட்டிக்கேட்கும் ஒரே ஒரு கட்சி தி. மு. கழகம் தான்! அமெரிக்காவிலும், ரஷ்யாவிலும் நம்மைப்பற்றிக் கேட்கிறார்களா இல்லையா என்பதை அமைச்சர்களைத் தனியாகச் சந்தித்து கேட்டுப்பாருங்கள்!

தி. மு. கழகம் அழிந்தால், ஒழிந்தால் காங்கிரஸ் கட்சிக்குதான் லாபமாகும்!

1938ல் ஜஸ்டிஸ் கட்சியின் மறைவுக்குப்பின்பு 1958 வரை காங்கிரஸ் கட்சிக்கு எதிர்ப்பே இல்லை!

### சிங்களக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஒவ்வொரு சிங்களப் பரீட்சையிலும் சித்தியெய்திய நாளிலிருந்தே சம்பள உயர்வு வழங்குவதென்று முடிவு செய்திருந்தது.

#### பரீட்சைகள்

புதிய சேவையாளர்கள் தங்கள் பதவி உயர்வுக்கான பரீட்சைகள் அனைத்துக்கும்-எந்தமொழி மூலம் சேவையிற் சேர்ந்தார்களோ அந்த மொழிமூலம் தோற்ற அனுமதிக்கப்படுவார்கள். இதிலும் முந்திய அரசாங்கம் சகல சேவையாளரும் சிங்களமொழிமூலமே பதவி உயர்வுப் பரீட்சைகளுக்குத் தோற்றமுடியும் என்று கட்டுப்பாடு போட்டிருந்தது வாசகர்கள் அறிந்ததே.

#### சிங்களம் வேண்டாம்

புதிதாக அரசசேவையில் சேரவிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கும் அவர்களின் கடமைக்கு சிங்களமொழி அறிவு தேவையென்ற நிலையேற்பட்டாலே சிங்களத் தகைமைப்- பரீட்சைக்குத் தோற்றவேண்டிய கட்டுப்பாடு விதிக்கப்படுமாம். முந்திய அரசாங்கம் சகலரும் சிங்கள மொழி அறிவு பெற வேண்டுமென்ற கட்டுப்பாடு விதித்திருந்தது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

1956 செப்டம்பர் 24ம் திகதிக்கு முன்னர் சேவையிற் சேர்ந்த பழைய சேவையாளர்களை சிங்களம்மட்டும் சட்டம் எந்தவகையிலும்கட்டுப்படுத்தமாட்டாது. இவர்கள் சிங்களமொழித் தகைமை பெறத் தவறிவிட்டார்கள்என்ற காரணத்தினுல் தடுத்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த சகல சம்பள உயர்வுகளும், பதவி உயர்வுகளும் மிக அண்மையில்வழங்கப்படும் என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### கலாச்சார...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பொழுது இச் சங்கங்களுக்குள் பிளவை ஏற்படுத்த தனிநபர் அரசியற் கட்சி ஒன்று தீவிரமாக முயன்று வருகிறது. புதிய அரச சேவையாளர் பற்றி அமைச்சரவை முடிவினுல் சற்று அதிருப்தி அடைந்திருந்த ஊழியர்களைப் பயன்படுத்தி இச் சங்கம் அமைக்க முயற்சிக்கப்படுகிறதாம்.

ஒரு சில புதிய சேவையாளர்கள் இந்த தனி நபர் கட்சித் தலைவருடன் அண்மையில் கதைத்த பொழுது 'எனது கட்சிக்கு ஆதரவாக ஒரு சங்கம் அமையுங்கள் நான் உங்களுக்காகப் பாடுபடுகிறேன்' என்ருராம்.

இத் தனி நபர் கட்சித் தலைவரின் ஆசையைப் பூர்த்தி செய்யும் பணியில் திறைசேரியைச்சேர்ந்த முதியவர் ஒருவரும், சட்ட வரைவுத் திணைக் களத்தைச் சேர்ந்த ஒரு வழக்கறிஞரும் முயன்று வருகிறார்களாம். தங்கள் தனி நபர் கட்சியின் பெயருடன் இணைத்தே புதிய தொழிற் சங்கத்திற்கு பெயரிடவும் முற்பட்டிருக்கிறார்கள். 'தமிழ் ஊழியர் காங்கிரஸ்' என்று பெயரிடப்பட்டுள்ளதாம். இந்த காங்கிரஸ் ஒரு கலாச்சாரஸ்தாபனம் என்று சிலரிடம் கூறுகிறார்களாம்.



புதிதாக நியமனம் பெற்ற எட்டு கியூ. சி. களும் கடந்த 2, 3-ம் திகதிகளில் நீதியரசர்கள் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்துகொண்டனர். 3-ம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட திரு சி. அரங்கநாதன் கியூ. சி., திரு பி. [illegible] கியூ. சி. ஆகிய இருவரையும் படத்தில் காண்க.


# ஆசை அலைகள்

ஆயிரம் மோதும் உங்களது இதயங்களில்

**உதாரணமாக:**

பரீட்சையில் தேறவேண்டும்—பட்டம் பெற வேண்டும்—பதவி உயர வேண்டும்—பணம் சேரவேண்டும்—படும் துன்பங்கள், துயரங்கள் பனிபோல் மறைய வேண்டும்—பண்பிலா எதிரியை முறியடிக்க வேண்டும்-பழிவாங்கும் கண், வாய் திருஷ்டிக்குப் பரிகாரம் காண வேண்டும்—பாசமிக்க வாழ்க்கைத்துணை அமைய வேண்டும்—பலநாள் குடும்பத் தகராறு சுமுகமாகத் தீரவேண்டும்—

**அத்துடன்**

பல்நூறு பயனும் பலனும் பல்கிப் பெருக வேண்டுமென்ற

# ஆசை

உங்களது இதயக் கமலங்களில்

# அலைகள்

போல் மோதுண்டு நிற்கும்!

இவையனைத்தையும் தேவ அருளினுலும்-மந்திர பலத்தினுலும், ஞான சக்தியினுலும் நிறைவேற்றித்தர-

என்னை நேரில் சந்தியுங்கள்?

செவ்வாய் முதல் சனிவரை இருக்கும் விலாசம்:

## பி. எம். திசாநாயக்க

—மாந்திரிக கலாநிதி—

103, ஸ்ரீசங்கராஜ மாவத்த,
மருதானை — கொழும்பு.

ஞாயிறும், திங்களும் இருக்கும் விலாசம்:

**அருத எண்ணெய் தொழிலகம்,**
கண்டி ரோட், கம்பளை. போன்: 454.

குறிப்பு: கடிதங்கள் கம்பளை விலாசத்திற்கே எழுதப்பட வேண்டும்.

உங்களது அந்தரங்க விஷயங்கள் எக்காரணங் கொண்டும் வெளியிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சுழி

இரவு சுமார் எட்டு மணியிருக்கும், அந்த வீட்டின் இரும்பு 'கேற்'றைத் திறந்து, கை ஒழுங்கையால் போய்க் கொண்டிருந்தேன் ஒழுங்கை பூராவும் 'கன்னங்கரேல்' எனக்கப்பிய இருள். 'நான் சொன்னது சரியா? தப்பா?' என மன இருளை விலக்கி விலக்கி அலசிக் கொண்டேன். அந்த ஒழுங்கை வெகு தூரம் நெடியதல்ல. நூறு யார் தூரம் சென்றதும் மெயின் ரோட்டைத் தொடுகிறது. என் கால்கள் ஒழுங்கையைக் கடந்து மெயின் ரோட்டில் அடி எடுத்து வைக்கின்றன. 'பளிச்' என்று ஒரே வெளிச்சம். மின்சார விளக்குகள் ரோட்டை வெளிச்சமாக்கிக்கொண்டிருந்தன. என் மனதிலும் ஒரு தெளிவு. ஆமாம்-நான் இம்முறை தவறவில்லை. செய்தது சரிதான். சொன்னது பிழையில்லை. மனச்சாட்சியை நான் கொல்லவில்லை. சரியானபடி நான் நடந்துகொண்டேன். புதிய மகிழ்வுடன் என் அறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன்.

மனிதன் ஒருமுறை ஒன்றில் வெற்றிபெற்ருலும், அந்த வெற்றியின் மகிழ்ச்சியை எண்ணிப் பூரிக்கும் அதே வேளை, அவன் மனம் பழைய தோல்விகளையும் நினைத்துப் பார்க்காமல் விடுவதல்லை. நினைத்துப் பார்க்காமலிருக்கவும் முடியாது. முன்பு 'மறந்துவிட்டோம்' என அறமுடிவு கட்டின நினைவுகளும்' நீர் ஊற்றுக்களைப் போல் 'பீச்'சிக் கொண்டு வெளிவரத்தான் செய்யும்.

சிறுவயதில் தன் பெற்றோரை இழந்து ஒருவன் அல்லது ஒருத்தி, கால ஓட்டத்தில் அவர்களை மறந்துகொண்டே போகிருர்கள். ஒரு கால கட்டத்தில் அவர்கள் நினைவே இல்லாமல் போய்விடுகின்றது. பல வருடங்களின் பின், கல்யாணம் நடக்கும் நாள் அன்று, தடைப்பட்ட மின்சாரம் மீண்டும் பிரகாசிப்பதுபோல், அவர்கள் நினைவு நெஞ்சை அழுத்தியே தீரும். அதே போல் மறந்து போயிருந்த என் மனதில் மூன்ருவது முறையில் நான் கொண்ட வெற்றி பழைய இரண்டு தோல்விகளையும் தழுவிப் படர்ந்தது. பழைய தோல்விகளின் நிழல் என் உள்ளத்தில் படிகிறது.

எஸ். எஸ். சி. படித்து முடித்தவுடன் வேலை தேடிக் கொழும்பு சென்று சுற்றிச் சுழன்றடித்து, அங்கும் வேலை கிடையாமல் திரும்பவும் வீடு தேடி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த காலம் அது. இனிமேல் வேலையில்லாமல் இருக்க முடியாது; இருக்கக் கூடாது.

'எப்படியும் ஏதாவது தொழில் செய்து பிழைத்தால் போதும்' என்ற மன உந்தல்.

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வியாபார ஸ்தாபனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தேன். விடியற்காலை எட்டுமணி முதல் இரவு எட்டு, ஒன்பது மணிவரை வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்.

'சாய்ப்புச் சட்டம்' என்றொரு சட்டம் தொழிலாளர்களின் நன்மை கருதி ஆக்கப்பட்டதாகக் கேள்வி. யாழ்ப்பாணச் சிப்பந்திகளைப் பொறுத்த வரை, அது ஏட்டிலும், எழுத்திலும் அச்சிடப்பட்ட ஒரு அறிக்கையாகத்தான் இருந்து வருகிறது. அதைச் சாய்ப்புச் சட்ட இன்ஸ்பெக்டர்மாரின் தொந்தி வளர்க்கும் ஒரு கருவூலமாகவும், முதலாளிமாரின் பணப் பெருக்கத்திற்கு சாய்ப்புச் சட்ட இன்ஸ்பெக்டர்மார் அளிக்கும் ஒரு தூண்டு கோலாகவும் தான் யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரை அமுலில் உள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தொழிலகங்களுக்கு சாய்ப்புச் சட்ட இன்ஸ்பெக்டர்கள் வருகிருர்கள்; போகிருர்கள். அதில் அநியாயம் சொல்ல முடியாது. அவர்கள் வருகை கண்டு கதவுகளை அடைக்கிருர்கள்; மூடுகிருர்கள். ஏதேதோ எல்லாம் தொழிலாளர்களுக்காகப் 'பரிந்து' எழுதுகிருர்கள். அடுத்த நாள் முதலாளி ஒரு 'என்வலப்புடன்' இன்ஸ்பெக்டரைக் கண்டு வருகிருர். பின் எல்லாம் சரியாகிவிடுகிறது. அவ்வளவுதான் தொழிலாளர் வாயில் மண்.

இப்படியான நிலை பொதுவாக இருக்கும் போது எனக்கு மட்டும் விசேட சலுகையா? வந்த புதிதில் ஒன்பது, பத்து மணிவரை கூட வேலை செய்திருக்கிறேன். இது ஸ்தாபன வேலை. மற்றும் முதலாளி வீட்டுக்குக் காய்கறி வாங்குவது முதல் அவர் பிள்ளைகளுக்கு மருந்து எடுப்பது வரை வேலை செய்ய வேண்டும். அதற்குக் கிடைத்த சம்பளம் ரூபாய் நாற்பது. சம்பளம் என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். வேறெப்படிச் சொல்லுவது. பத்து வருட சேவை செய்து கொண்டிருக்கும் நான் இப்போது பெறும் சம்பளம் ரூபாய் தொண்ணூற்றைந்து.

முதலாளியைப் பற்றி ஒரே வார்த்தையிற் சொல்வதாஞல், பத்து சதம் தேனீருக்காகக் கொடுத்ததை, பத்தாயிரம் ரூபாய் போனஸ் கொடுத்தமாதிரிஎடுத்துப் பேசிக்கொள்வார். பெருமை அடித்துக்கொள்வார். 'போகவிட்டுப் புறங்கூறல்' என்பதற்கு அர்த்தம் கேட்க பண்டிதரிடம் போய் அலைய வேண்டியதில்லை. நடை முறையில் காண வேண்டுமாயின் நம் முதலாளி பேரம்பலத்தின் கீழ் சில மாதங்கள் வேலை செய்தால் போதும். நன்ருகஅறிந்துகொள்ளலாம். தனக்கு ஏதாவது நன்மை கிடைக்குமென்ருல், தன் காரியம் முடியும் வரை 'தம்பி, தம்பி' எனக் குழைந்து, குழைந்து பாகாய் உருகுவார். தன் காரியம் முடிந்ததும், "ஆறு கடக்கும் வரை அண்ணன்-தம்பி, அது முடிந்தவுடன் நீயாரோ? நான் யாரோ?" என்ற கதையாகத்தான் முடியும். முதலாளியின் குணமே அப்படித்தான். தன் கூட நின்றுழைத்தவன், ஏன் தன் இலாபத்திற்காக உழைத்ததில் ஒரு துரும்பைத் தின்றவன் மனம் குளிர ஏதாவது செய்வதென்ருல், அவருக்குப் பிடியாது. ஒரே வயிற்றுக் குமட்டல். வருமான வரி, குதவாடகை, அப்படி இப்படி என்று ஒரு கடதாசியில் எழுதிக் கேட்டால் மட்டும், அவருடைய 'தாராள மனதைத் திறந்து, அள்ளிக் கொடுக்கும் 'வள்ளற்றன்மை' கொண்டவர்.

வியாபாரத்தில் போட்டியிருந்தால் தான் முன்னேற்றம் காண முடியும். ஆனல் பொருமை இருக்கக் கூடாது. மற்றவர்கள் நன்ருய், வாழ்கிருர்கள் என்ருல் அதையிட்டுக் கண்ணுறங்கார். அப்படியான 'மனப் புழுக்கம்' கொண்டவர் பேரம்பலம். அத்துடன் ஓர் பேராசைக் காரனும் கூட. தனக்குத் தான் எல்லாம் சேர வேண்டும்' என்ற மனப்பாங்குடையவர்.

பேரம்பலத்தினுடைய ஸ்தாபனத்திற்கு எதிராக ஒரு தொழிற்சாலை. அவர்கள் தொழிற்சாலை நடத்துவது இவருக்கு பிடிக்கவில்லை. ஏனென்ருல் இவர் மனதில் 'பிளான்'போட்டு, பொரிமாத் தோண்டி போல் கணக்குப் போட்டு முடிக்க முன் அவர்கள்

## இவ்வாரச் சிறுகதை

தொழிற்சாலையையே ஆரம்பித்துவிட்டார்கள். அதனுல் எழுந்த 'காய்ச்சல்' எப்படி எப்படி எல்லாமோ வேலை செய்தது. குறுக்குவழி. 'ருக்கெட்' வேகத்தில் மனத்திரையைக் கிழித்து சென்றது. கோழைத் தனமான காரியங்களில் இறங்கினுர்.

'மொட்டைக் கடிதம்'. யார் யாருடையவோ பெயர்களைப் போட்டுக் கடிதம் எழுதுவது. அவருக்குக் கையெழுத்துப் போடுவதற்கு ஆட்கள் இருக்கிருர்கள். ஒன்று அவருக்குப் பந்தம் பிடிப்ப

**மணியம்**

வர்கள். இரண்டு படிப்பறிவில்லாத தொழிலாளர்கள். கடிதத்தை ஆங்கிலத்தில் 'டைப்' செய்துவிட்டு, ஏதோ, பவுண், வெள்ளி 'பேமிட்டுக்கு' அனுப்ப வேண்டும் எனச் சொல்லி வாங்கிவிடுவார். பாவம்! அப்பாவித் தொழிலாளர்கள் என்ன செய்ய முடியும்.

பேரம்பலத்தின் ஸ்தாபனத்திற்கு முன்பாக இருக்கும் அந்தத் தொழிற்சாலையின் அதிபர் ஓர் ஆலைச் சொந்தக்காரர். நெல்லை வாங்கி, இயந்திரத்தினுல் அரிசியாக்கி அரசாங்கத்திற்கே கொடுப்பார்.

அதற்கு ஒரு 'தடை' போட முயற்சித்தார் பாபு. அவருடைய தொழிலாளர்களால் செல்லமாகவும், கிண்டலாகவும் 'பாபு' என்று அழைக்கப்படுபவர் தான் பேரம்பலம். அந்த ஆலை அதிபர் 'அரிசியுடன் மணல் கலந்து விற்கிருர்.' இது தான் பாபுவின் குற்றச் சாட்டு. அரசாங்க அதிபருக்கும், உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிக்குமாக எழுதினுர். இல்லை; எழுதுவித்தார். அதில் எனக்கும் ஒரு பங்குண்டு; மறுக்கவல்லை. இவருக்கு ஒரு பெரிய கணக்குப்பிள்ளை இருந்திருக்கிருர். அவர் இவருக்கு ஏற்றவர் தான். சாடிக்கேற்ற மூடி. வீடு கொழுத்துகிற ராசாவுக்கு நெருப்பு எடுத்துக்கொடுக்கிற மந்திரி. ஆனல் அப்படியான கணக்குப்பிள்ளைக்கும் பேரம்பலத்திற்கும் கொழுவி விட்டதே? எதையும் எப்படியும் செய்யலாம். பாபு ஏற்றுக்கொள்ளுவார். பண விசயத்தில் தலையிட்டால் கணக்குப்பிள்ளை என்ன, அவருடைய பெண்டாட்டி முன் வந்தாலும் எதிரி தான். இப்படித்தான் கணக்கரும் பேரம்பலமும் 'கொளுவி' வேலையின்ன்றும் விலக்கப்பட்டிருக்கிருர் கணக்கர்.

அன்று முதலாவதாக அக் கடிதம் எழுதும் படி என்னைப் பணித்த போது என் மனக்கடலில் இரண்டு விதமான எண்ண அலைகள் மோதின. ஒன்று, 'நான் செய்வது நியாயம் தானு?' இரண்டு, 'ஒரு வேளை அரிசிக்குள் மணலைக் கலப்பது உண்மையானுல் அப்படி எழுதுவது தவறில்லையே?' என்ருலும் பாபுவின் மனம் எதை அடிப்படையாக வைத்துச் செயல்படுகிறது என்பதை அறிந்த போது மனம் கிலேசமடையத்தான் செய்தது.

கள்ளம், கபடம் இல்லாமல் திரிந்த எனக்கு இப்படியான செயல் மூலம் 'வாழ்க்கையின் அனுபவம்' என்ற சாயத்தின் தடிப்பு ஏற்படுகின்றதா? இப்படியான செயல்களுக்கு நான் புதியவன். அன்றைய சூழ்நிலை அப்படி எழுதி விட்டேன்.

எதைச் செய்தாலும் புறத்தால் மறுக்கலாம், மறைக்கலாம். ஆனல் அகத்திற்குத் திரைபோட முடியுமா? ஏதோ ஒன்று என் மனதைக் குடைந்து கொண்டேயிருந்தது.

கால வெள்ளத்தில் நீந்தினேன். முதலாவது சுழியில் அகப்பட்டேன். தத்தளித்தேன். அமுங்கினேன். ஒருவாறு சமாளித்துவெளி வந்து மீண்டும் நீந்திக் கொண்டிருந்தேன். மீண்டும் சோதனை அலைகள், மோதின.

கால வெள்ளத்தின் இரண்டாவது சுழி.

பின்பும் அதே தொழிற்சாலை பற்றியதுதான். முதலாவது திட்டம் சரிவராததைக் கண்ட பாபு, அடுத்த கட்டத்தை அரம்பித்தார். அட, பாவி! இன்னும் எத்தனை திட்டங்களோ?

சோதனைஎன்னும் இருள் மெல்லக் கவிகிறது. அத் தொழிற்சாலையின் மனேசராகக் கடமை புரிபவர் ஒரு மாஜி இ. போ. ச. டிப்போ மனேசர். அப்பதவியினின்று அசௌக்கியத்தைக் காரணமாகக்காட்டி விலகியவர். அத் தொழிற்சாலையில் மனேசர் நல்ல நிர்வாகி. அவரைப்பற்றி ர் மொட்டைக் கடிதம். அவரின் நிர்வாகத் திறமையினல் அத் தொழிற்சாலை திறமையாகஇயங்குகிறது. அதைத் தடை செய்ய வேண்டுமென்பது தான் பாபுவின் அவா. இது பாபுவின் இராமாயணத்தில் இரண்டாவது படலம். 'இவர் சுகயீனம் காரணமாக வேலையினின்றும் விலகியவர். இப்போ(தொழிற்சாலையின் பெயரைக் காட்டி) வேருெருதொழிற்சாலையில் வேலைசெய்கிருர். ஆன காரணத்தினுல் இவர் உபகாரச் சம்பளம் (பென்சன்) பெறத் தகுதியற்றவர்' என அவர் பெறும் பென்சனை நிற்பாட்டுவதற்கும் எழுதினுர். இந்த இரண்டாவது முறையும் நான் அகப்பட்டு அவதிப்பட்டேன். மனதில் படிந்த வேதனை இருளின் தடிப்பு ஏறுகிறது. சமுதாய அமைப்பில் இப்படி ஒரு அம்சம் செயல்படுகிறது என்பதை என்னுல் உணர முடிகிறது. இப்போகொஞ்சம் அனுபவம் அடைந்தவனல்லவா?

முதலாளி வர்க்கம் என்ருல் இப்படித் தான். இப்படி இப்படித்தான் செயல்படுவார்கள் என்பது ஓரளவு பிடிபட்டது. 'நேர்மையாக உழைத்து ஒருவரும் பணக்காரராக முடியாது' என்ற உண்மை ஓரளவு எனக்குப் புரியுமாப் போல் தெரிந்தது. 'கடனும் தண்ணியுமாக' வாழ்க்கையின் அன்ருட நிலைமையினையே சமாளிக்க முடியாதவன், வியாபாரம் என்ற பெயரில் ஒரு மேசை, இரண்டு கதிரையுடன் தொடங்கினுல் போதும். சில வருடங்களில் பெரிய சீமானுகிவிடுகிருன். இதற்குள் நடக்கும் 'தில்லுமுல்லு'கள், 'தகிடு தத்தங்கள்', 'அநியாயங்கள்' எல்லாம் சேர்ந்து உருவாக்கிக் கண்ட மொத்தத்தின் முடிபுக்குரிய ஒரே சொல் 'எழும்பி விட்டான்' எப்படி எழும்பினுன், என்ன வழியைக் கையாண்டான். என்பது பகிரங்க இரகசியம். மனிதனுக்கு ஆசை இருக்கத்தான் வேண்டும். அது நியாயமும் கூட. ஆனல் பேராசை இருக்கக் கூடாது.

இரண்டாவது சுழியும் கடந்தது. இதிலும் 'பாபு' தோல்வி தான். என்னுடைய மனம் 'தளப்பமாகத்தான்' இருந்தது. அதையும் சமாளித்துக்கொண்டு சென்றேன்.

மூன்ருவது சுழி. என்னை இழுத்தது,

அன்று மாலை வேலை முடிந்து கடையை விட்டுப் போகும் போது, 'தம்பி, நான் வரும் வரைக்கும் வீட்டில் நில்லும்' என்ற கட்டளையுடன் தான் என்னை அனுப்பினுர். கடையை விட்டு வேலை முடிந்து போனுல், இரவில் அவர் மகளுக்கு, 'பாடம் சொல்லும்' உத்தியோகமும் எனக்கு உண்டு. அதனுல் தான் பாடம் சொல்லிக் கொடுத்து முடிந்தவுடன் தன்னைக் கண்டு போகும் படி கூறினுர். 'எதற்காகக் கூறினுர்' என்ற கேள்விஎன் மனதில்

(11-ம் பக்கம் பார்க்க)

**மற்றவர்கள் நன்கு வாழ்வதைப் பொறுக்காத ஒரு சமூகத்தின் பிரதிநிதி அவர். அவரின் சதுரங்கத்தில் பகடைக்காய்களாக இயங்கச் சிலர்.**

**பகடைக்காயொன்று, மானமும் இரக்கமுமுள்ள சமூகத்தின் பிரதிநிதியாக மாறும் போது, முதலாளி பேரம்பலம்—?**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்வேல் முருகனின் கருணை கடாட்சம்

## தமிழ்க் கடவுளான குமரன் பொதுக் கடவுளான விந்தை

### கதிர்காம உற்சவமும் வேல் விழாவும்

தமிழ்க் கடவுளான முருகன் தென்னிலங்கையில் குடிபுகுந்த வரலாறு பற்றிக் கூறும் பல கதைகள் உள. அக் கதைகளுள் எது உண்மையோ, எது பொய்யோ யாமறியோம். ஆனால் குமரனின் கருணையினை மட்டும் நாம் நன்கு அறிகிறோம்—அனுபவிக்கிறோம். அவன் கருணையை நாம் முற்றாக அறிவதென்பது முடியாது. எனினும் தேன் குடத்தின் ஓரத்திலே குந்திக் கொண்டிருக்கும் ஈயினை ஒப்ப நாமும் அவன் கருணைக் கடலிலே கடுகளவு அனுபவிக்கிறோம்.

தமிழர்களின் தனித் தெய்வமான கந்தன் இலங்கையிலுள்ள கதிர்காமத்தில் பொதுத் தெய்வமாக, எல்லோருக்கும் அருள்பாலிக்கிறான். புத்தனைப் பின்பற்றும் பௌத்தர்கள் கதிர்காமக் கந்தனைத் தங்களின் தெய்வமெனக் கொண்டாடுகின்றனர். முகம்மதியர் கதிர்காமத்தில் தங்களுக்கும் உரிமை உண்டென வாதாடுகின்றனர். இன்னும் பற்பல சமயத்தவர்களும் இங்கு உற்சவகாலங்களிலும் மற்றைய நாட்களிலும் கூடி வழிபாடு செய்கின்றனர்.

இதனால் கந்தன் தமிழர்களுக்கு மட்டும் தனியான தெய்வமாகவன்றி இந்நாட்டில் வாழும் சகல இன மக்களுக்கும் பொதுவான கடவுளாக நின்றிலங்குகின்றான்.

கந்தக் கடவுளின் வரலாறுகளைக் கூறும் புராணங்களும் இதிகாசங்களும், கர்ண பரம்பரைக் கதைகளும் அவனை பொதுமையாளனாகவே கூறுகின்றன.

#### குழந்தை வடிவேலன்

குழந்தைப் பருவத்துக் குறும்புகளால் சாதாரண குடும்பச் சூழலைச் சித்தரிக்கிறான். சாதாரண குழந்தை

**'பக்தன்'**

களிடத்தில் காணும் பிடிவாத குணங்களையுள்ள குழந்தையாக குமரவடிவேலன் சித்தரிக்கப்படுகிறான்.

தந்தைக்கும் மிஞ்சிய ஞானத்தைப் பெற்றவனைக விளங்கும் அறிவுக்கதிப வியை மணக்கச் செல்லும் காட்சி சந்தர்ப்பமளிக்கிறது. வேடனாய் — விருத்தனாய்ச் சென்று வள்ளியிடம் பண்ணும் லீலா விநோதங்கள் உலகு வாழ் மக்களின் உள்ளங்களுக்கு உவப்பளிப்பனவாகவுள்ளன.

அழகனாகத் திகழ்ந்ததுடன் அழகை இரசிக்கும் இரசிகனாகவும் கந்தன் விளங்கினான் என்பதை புராணங்களில் கந்தனைக் காட்டும் கதைகள் வர்ணிக்கின்றன. குறும்புத்தனம், கோபம், வீட்டை விட்டோடுதல், வீர விளையாட்டுகளில் நாட்டம் முதலிய இன்னோரன்ன குணங்களை கந்தனிடம் காணக்கூடியதாக விரும்பதனால், மனித சமுதாயத்துடன் இரண்டறக் கலந்து விட்ட கடவுளாகவே கந்தக் கடவுளை நாம் காண முடிகிறது.

#### கார்த்திகேய வடிவேலன்

அடியார்க்கு அடியானாகவும், ஊழியனாகவும், ஆண்டியாகவும், அரும் சேவகனாயும் குமரன் அடிக்கடி வேடம் புனைந்து நமக்கு வேடிக்கை காட்டுகிறான்.

தேவன் மகனாகப் பிறந்து, கானகத்தோடையில், கார்த்திகைப் பெண்களிடை வளர்ந்து, கோன்மகளையும், குறத்தி ஒருவளையும் மணந்து கொடுமைகளைச்சாடி நின்ற குமரவேள் உலகத்தில் எல்லோருக்கும் பொதுவானவனாக விருப்பதில் வியப்பில்லையல்லவா?

கதிர்காமப் பதியிலே வருடா வருடம் பல இலட்சம் பக்தர்கள் கூடி குமரக் கடவுளை வணங்குவதில் தவறு என்ன இருக்கிறது? கந்தன் வரலாற்றிலே காணப்படுவதுபோல் குமரனை தமிழர்கள் மட்டும் கொண்டாட அவர்களுக்குத் தனி உடைமை கிடையாதே! அவன் யாவருக்கும் பொதுவானவன். பொதுவான தெய்வத்தை ஒரு சாரார் மட்டும் தமதாக்கிக்கொள்ள முடியுமா?

#### கருணை கடவுளன்

கந்தனின் கருணை கரை கடந்தது; கட்டுப்பாடற்றது என்பதை விளக்கவே இன்னருளுகவும் கந்தனைக் காண்கிறோம். வேதத்தின் தத்துவமே உணர்ந்த ஞானபண்டிதன் கொடுமைகளைச் சாடும் வீரனாகவும் தோன்றுகிறான்.


சமரிலே வென்று வாகை சூடிய மன்னனுக்கு மணமாலை பரிசு கிடைப்பது போல் வேலன் போர்க்களம் புகுந்து திரும்பியதும் பூவை தெய்வயானையை மணக்கும் குலமகனாகத் திகழ்கிறான்.

உலகிற்கு சிருங்கார ரசத்தை அள்ளி வழங்க, வள்றும் அவனுடைய சேவையை தமிழர்கள் அபகரிக்க முடியவில்லை. தன்னை ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினர் மட்டும் உரிமையுடன் கொண்டாட அவன் சித்தம் இடம் கொடுக்கவில்லைப் போலும். ஆகவே அவன் பொதுவான இடத்தில் அமர்ந்துகொண்டு பக்தர்கள் அனைவரையும் பொதுவாகவே கருதுகிறான். தன் ஒப்பற்ற கருணைகடாட்சத்தை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கின்றான்.

கந்தனின் கருணைக்குக் கட்டுப்பாடு கிடையாது என்பதனால்தான் கந்தனை ஒவ்வொருவரும் தமதுடைமையாக்கிக் கொள்ளுகின்றனர். இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் அவன் பொதுவானவன் என்பதனாலேயே இலங்கையின் மேல் சூழ்ந்திருந்த இருள் இன்று அகலத் தொடங்கியிருக்கிறது. அவனை வணங்கும் அனைவருக்கும் அவன் அருள் என்றும் கிடைக்கும்.

### வேல் விழா

கதிர்காம உற்சவத்தைத் தொடர்ந்து கொழும்பு மாநகரம் விழாக்கோலம் பூண ஆரம்பித்துவிடும். மாணிக்க கங்கையில் புண்ணிய தீர்த்தமாடி கொழும்பு மார்க்கமாகத் தங்கள் இருப்பிடங்கள் திரும்பும் பக்தகோடிகளை கொழும்புக் கதிர்வேலன் காட்சி கொடுத்து கடைத்தேற வைக்கிறான். 10ம் திகதி முதல் 13ம் திகதி வரை வேல் விழா இம்மாதம் வெள்ளவத்தையிலுள்ள ஆலயத்தில் நடைபெறுகிறது. இது நாள் வரை இருந்த பல சில்லறைச் சிக்கல்கள் எல்லாம் தீர்ந்துவிட்ட படியினால் இம்முறை கதிர்வேலாயுதரின் உற்சவம் கரைகடந்த உற்சாகத்துடன் கொண்டாடப்படும் என்று பக்தர்கள் கருதுகிறார்கள்.



கொழும்பு மருதானையிலுள்ள கப்பித்தாவத்தையிலிருக்கும் கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபைக்குச் சொந்தமான மடம் இதுதான். ரூ. 40,000 வரை செலவு செய்து புதிதாகக் கட்டப்பட்டுள்ள இம் மடத்தில் தினசரி ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் தங்கி கதிர்காமம் செல்லுகின்றனர். யாத்திரிகர்கட்கு வேண்டிய உணவும் உறைவிடமும் மட்டும் அளிக்கப்படவில்லை. தினசரி கந்தபுராணம் முதலான பக்தி நூல்கள் வாசிக்கப்படுவதுடன், விசேட பூசைகளும் நடைபெறுகின்றன.

### கொழும்பில் கதிர்காம யாத்திரீகர்கள்

கொழும்பு கதிர்காம யாத்திரீகர்கள் தொண்டர்சபையினர், வருடா வருடம் செய்வது போன்று இம்முறையும் கொழும்பு — மாத்தறை ஊடாக கதிர்காமம் செல்லும் அடியார்கட்கு அன்னதானம் அளித்து தங்கும் வசதிகள் யாவும் ஒழுங்கு செய்துள்ளனர். தொண்டர் சபைக் குழுவின் ஒரு பகுதியினர் சபை உபதலைவர் திரு. ஆ. சின்னத்தம்பி தலைமையில் மாத்தறை மடாலயத்தில் தொண்டாற்றி வருகின்றனர்.

கொழும்பு மருதானையில் புதிதாக அமைக்கப்பட்ட மடாலயக் கட்டிடத்தில் சபைத் தலைவர் திரு. இரா. சபாநாயகம் தலைமையில் யாத்திரீகர்கட்கு சாந்தியளிக்கும் வண்ணம் தினமும் மாலை 6 மணி தொடக்கம் சமய விவகாரக் குழுக் காரியதரிசி திரு. வே. ச. சுப்பையா, வழக்கறிஞர் சபாபதிப் பிள்ளை ஆகியோரால் கந்தபுராண பாராயணம், கந்தரநுபூதி, முருகநாம பஜனை ஆகியன நடைபெற்று வருகின்றன.

## சுழி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்தான் செய்தது. ஒருவேளை, அவளுக்கும் எனக்குமிடையிலிருக்கும் 'அது' தெரிந்து விட்டதோ? சே! அது எப்படித் தெரிய முடியும். ஏன் அழைக்கிறார். என் மனதில் எழுந்தகேள்வி கேள்வியாகத்தான் இருந்தது.

பாடம் சொல்லி முடிந்தது. எனது அறைக்குப் போக ஆயத்தம் செய்தேன். மெதுவாக என்னை முன் வராந்தாப் பக்கம் அழைத்துச்சென்றார் பாபு. என்ஜினுடன் தொடர்பு படுத்தப்பட்ட ரெயில் பெட்டி போல் இழுபட்டுச் சென்றேன். அப்போது தான் நானாக இயங்கவில்லை. அவரால் இயக்கப்பட்டேன்,

சை! மீண்டும் அதே தொழிற்சாலை சம்பந்தப்பட்டதாகத்தான் பேச்சு எழுந்தது, அத் தொழிற்சாலையில் 'போர்மன்', வேலை செய்பவர் ஓர் இந்தியத் தொழிலாளி. மூன்று மாதமும் விசாவில் வந்து வேலை செய்கிறார், பல வருடங்களாக வேலை செய்கிறார். அவரை அங்கிருந்து விரட்டி, இந்தியாவிற்கு அனுப்பி விட்டால், தொழிற்சாலை இயங்காது, என ஒரு மட்டரகமான முடிபுக்கு பாபு வந்தார். அவளுடைய மூளை அந்த லைனுக்குத்தான் வேலை செய்தது.

அவர் முதலாளி தான், ஆனால் புகைப்பதோ பீடி. அவ்வளவு கஞ்சன். வாயில் பீடியை இரண்டு இழுவை இழுத்துக்கொண்டு ஆரம்பித்தார். 'முன் கடையில் (அப்படித் தான் அத் தொழிற்சாலையை அவர் அழைப்பது) வேலைசெய்யும் இந்தியனை கள்ளத் தோணி எனப்பொலிசுக்கு ஒரு கடிதம் எழுதிப்போடுவமா?'

என் மனதில் இதுவரை இருந்து வந்த கேள்விக் குறி, வில்லிருந்துவிடுபட்ட அம்பென 'விர்' என நிமிர்ந்து வியப்புக்குறியாக மாறியது.

"................................"

'என்ன பேசாமல், இருக்கிறாய்?'

................................

'என்ன யோசிக்கிறீர்?'

'எனக்கு அது விருப்பமில்லை, வேறு பாரையும் கொண்டுஎழுதுவியுங்கோ'

என்மனதிலிருந்த வியப்புக் குறி, குறுகிக் குறுகி முற்றுப்புள்ளியாகியது.

அவருடைய மனதில் வியப்புக்குறி எழுந்தான் செய்தது. முன்பு இருமுறை அவருடைய சொல்லைத் தட்டாமல் செய்தவன். இம்முறையும் செய்வான் என்று தப்புக்கணக்குப் போட்டுத்தான் என்னை அப்படிக்கேட்டார். முதல் முறை புதியவன் சொன்னால் எழுதுவான் என்ற மிதக்கில் சொல்லி எழுதிவித்தார். இரண்டாம் முறை ஒரு [illegible] யாக கீழ் இறங்கி நின்று, செய்வித்தார். இம்முறை நிர்ப்பந்திக்க முடியவில்லை. காரணம் உண்டு. இப்போது நான் எல்லாம் அறிந்தவனாகி விட்டேனே. அதனால் தான் சம்மதம் கேட்டார். கிடைக்கவில்லை, 'வேறொரு வரைக் கொண்டுசெய்விக்கிறேன்றால் உன்னைஎன் சொன்னாறேன், அப்ப விடுவம்' வெற்றிகரமாகப் பின் வாங்கி விட்டார். எவ்வளவு தாராளமனம். அத்துடன் விடயம் முடிந்தது,

நான் வீட்டை விட்டு வெளியேறினேன். என் மனதில் ஒரு தெளிவு. 'துணியும் மூன்று பிழை பொறுக்கும்' என்பார்கள். அதே, போல் மூன்றுவது தவறு செய்யமுன்பே நான் விலகிக்கொண்டேன். அந்த ஒன்றே எனக்குப் பூரண திருப்தி. மூன்றுவது 'சுழி' யால் என்னை வெல்ல முடியவில்லை.

[illegible]

[illegible] கள் தெளிந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆந்திர அரசின் திரைப்பட யோகம்

## தெலுங்குக் கலைஞர்களைக் கவர புதுப புதுத் திட்டங்கள்

**தமிழகத்துக்குத் திரைப்படத்துறையிலிருந்து வரும் மகத்துவத்தை அபகரிக்க ஆந்திர சர்க்கார் பெருமுயற்சி எடுத்து வருகிறது. கடனுதவிகளும், பரிசுத் திட்டங்களும் வெகுவாக வழங்கப்படுகின்றன.**

'தமிழகத் திரைப் படத் துறைக்கு இதுவரை காலம் இருந்து வந்த கிராக்கியை ஆந்திர (தெலுங்கு) அரசாங்கம் தனது பிரதேசத்துக்குக் கிரகித்துக் கொள்ளப் பெருமுயற்சி செய்ய ஆரம்பித்துள்ளது' என்ற ஒரு செய்தியை 13-9-64 வெளியான சுதந்திரன் கூறியிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

(இச்செய்தி விமர்சனம் சுதந்திரனைத் தவிர வேறு எந்தப் பத்திரிகையிலும்—தமிழ் நாடு பத்திரிகைகள் உட்பட — வெளியாகவில்லை.)

இத்தகவல் முற்றிலும் உண்மையானவையே என்பதை தமிழ் நாட்டு திரைப் படத்துறையில் இன்று எழுந்துள்ளபரபரப்பு நிரூபிக்கின்றது.

ஆந்திர அரசாங்கம் தெலுங்கு மொழியில் வெளியாகும் படங்களுக்கு தனியாகப் பரிசுகள் வழங்கும் திட்டத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடாத்தி வருகிறது. ஆந்திர மாகாணத்தில் நிறுவப்படும் படப்பிடிப்பகங்களுக்கு நிதி உதவி அளிக்கிறது. ஹைதராபாத் போன்றஇடங்களில் தெலுங்குத் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்படும் எம்மொழிப் படத்துக்கும் கடன் வழங்குகிறது. இக்கடன்கள் யாவும் நீண்ட காலத் தவணையில் திரும்பச் செலுத்தப்படலாம். அத்துடன் இவற்றுக்கு வட்டியும் கிடையாது.

சென்னையில் இப்பொழுதுள்ள மிகப் பெரிய படப்பிடிப்பகமான விஜயா—வாகினி ஸ்டுடியோ தெலுங்கு பிரமுகரான பி. நாகிரெட்டியினுடையது. மற்றும் பரணி ஸ்டுடியோ பானுமதிக்குச் சொந்தமானது. மெஜஸ்டிக் என்ற

### நமது சென்னை நிருபர்

பெயருடன் இருந்து இன்று சாரதா ஸ்டுடியோ வாகி ஏ. எல். சீனிவாசன் குத்தகைக்கு எடுத்துள்ள படப்பிடிப்பகமும், கோல்டன் ஸ்டுடியோ, வீனஸ், பொன்னலூரி பிரதர்ஸ் படப்பிடிப்பகம், பிரகாஷ் ஸ்டுடியோ, விக்ரம் ஸ்டுடியோ முதலியனவும் தெலுங்கு முதலாளிகளின் உடைமைகளாகும். பிரபல்யம் வாய்ந்த பல படத்தயாரிப்பாளர்கள் தெலுங்குக்காரர்களே.

இவர்களை வரையும், தமிழ்த் திரைப் படத்துறையில் உள்ள தெலுங்கு நடிக நடிகைகளையும் தமிழகத்திலிருந்து பிரித்து ஆந்திராவுக்குள் தொழில் நடாத்த அழைக்கவே ஆந்திர அரசு திட்டமிட்டு வேலை செய்கிறது என்பதை தமிழ்த் திரைப்படத்துறையிலுள்ள சகலரும் இன்று அறிந்து கொண்டனர்.

### வட்டியில்லா கடன்கள்

'இருவர் உள்ளம்', 'தாயில்லாப்பிள்ளை' முதலான வெற்றிப் படங்களைத் தயாரித்த டைரக்டர் பிரசாத்துக்கு ஹைதராபாத்தில் படப்பிடிப்பகம் நிறுவுதற்கு ஆந்திர அரசாங்கம் நெடுங் காலத் தவணையில் 5 லட்சம் ரூபாய்களை வட்டி எதுவுமின்றி வழங்கியிருக்கிறது. அத்துடன் சதர்ண் மூவீஸ் நிறுவனத்தினருக்கும் இரண்டரை இலட்ச ரூபாய் கடனுதவி அளித்துள்ளது.

### பரிசுகள்

கடந்த ஆண்டில் தெலுங்கில் தயாரான அன்னபூர்ணாவின் 'டாக்டர் சக்கரவர்த்தி' படத்துக்கு தங்க நந்தி பரிசளிக்கப்படுகிறது. அத்துடன் ரூபாய் 15 ஆயிரம் வரை ரொக்கப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. 'கீலி பொம்முலு' என்ற படத்துக்கு இரண்டாவது பரிசு கிடைத்திருக்கிறது.

'கீலு பொம்முலு' படத்தை உலகத்திரைப்பட விழாவுக்கு அனுப்புவதற்கு ஆந்திர அரசாங்கம் சிபார்சு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவச குறுக்கெழுத்துப் போட்டி

சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினர் அளிக்கும் திரைவிருந்துகளான 'லவகுசா' என்ற வர்ணப் படத்தையோ—அல்லது 'நீதிக்குப்பின் பாசம்' என்ற படத்தையோ இலவசமாகப் பார்ப்பதற்கு இப்போட்டி மூலம் திரைப்பட இரசிகர்களுக்கு ஓர் வாய்ப்பு ஏற்படுகிறது. இப்போட்டியில் கலந்துகொள்வதற்கு எதுவிதமான கட்டணமும் செலுத்தப்படவேண்டியதில்லை. சுதந்திரன் பத்திரிகை நிறுவனத்தினதும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினதும் ஊழியர்களையும் அவர்களுடைய நேரடி உறவினர்களையும் தவிர்ந்த ஏனையோர் இப்போட்டியில் தாராளமாகக் கலந்துகொள்ளலாம்.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப்போட்டியில் பங்குபற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்தினரே பரிசுகளை வழங்க ஒப்புதல் அளித்துள்ளனர்.

**விதிகள்:**

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்' களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு விடையுடனும், சினிமாஸ் லிமிட்டெட்டாரின் படங்களைத் திரையிடும் படமாளிகைகளில் படம் பார்த்த நுழைவுச்சீட்டின் அடிக்கட்டை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக்கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனோ சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

**பரிசுகள்**

முற்றிலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விடைக் கூப்பன்களிலிருந்து தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரால் பரிசுக்குரிய விடைகள் பொறுக்கப்படும். முதலாவது எடுக்கப்படும் விடைக்கு முதல்பரிசும், ஏனைய பரிசுகள் முறைப்படியும் வழங்கப்படும்.

**1 வது பரிசு—6 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**2 வது பரிசு—4 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

**3 வது பரிசு—3 மேல்வகுப்பு டிக்கட்டுகள்.**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள்—ஒவ்வொன்றும் 2 மேல்வகுப்பு டிக்கட்டுகள்விதம் வழங்கப்படும்.**

**முடிவுத் திகதி 20-8-65**

**29-8-65 சுதந்திரன் இதழில் முடிவுகள் வெளியாகும்.**

விடைக்கான கூப்பன் 13 ம் பக்கத்தில் உள்ளது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில் 'லவகுசா' 'நீதிக்குப்பின் பாசம்' இலவசப்போட்டி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## நட்சத்திர மண்டலத்தில் நாலுxஎட்டு மாதங்கள்

தமிழ்த் திரைப்பட முன்னணி நட்சத்திரங்களின்

- குணுதிசயங்கள்
- குடும்ப வாழ்க்கை
- குறும்புத்தனங்கள்
- பொழுது போக்குகள்


முதலியவற்றை அவர்களுடைய வரலாற்றுடன் சேர்த்து சுவைபட எழுதுகிறார்

**'சுழத்தரசன்'**

32 மாதங்கள் சினிமா நட்சத்திரங்களுடன் சேர்ந்து வாழ்ந்தவர்—'சுழத்தரசன்'.

சுவை மிகுந்த இக் கட்டுரைத் தொடரை

**விரைவில் எதிர்பாருங்கள்!**



மங்கையின் கையைப் பிடித்திழுத்துக் கொண்டோடும் இம் மறதி மன்னன் மருண்ட பார்வையில் என்னதான் பட்டுள்ளதோ தெரியவில்லை. 'பூஜைக்கு வந்த மலர்' படத்தில் மனோரமாவும் நாகேஷும் தோன்றும் சிரிப்பூட்டும்காட்சி இது

## கலாசோதி 'சானு'வுக்கு பாராட்டுகள்

இலங்கை வானொலி தமிழ்ப் பிரிவிலுள்ள நாடகப் பகுதிக்குப் பொறுப்பாளராக விருந்து, இத்துறை வளர்ச்சியடைய அரும்பாடுபட்டுழைத்த திரு. எஸ். சண்முகநாதன் ('சானு') அவர்களுக்கு குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் 'கலாசோதி' என்ற பட்டத்தை அளித்து கவுரவித்தனர். திரு. 'சானு' அவர்களுக்கு இப்பட்டம் வழங்கப்பட்டதை மட்டக்களப்புக் கலைஞர்கள் பாராட்டி மட்டக்களப்பிலே மாபெரும் விழா நடாத்தினார்கள்.

கொழும்பிலேயுள்ள வானொலி நடிகர்கள் திரு. சண்முகநாதன் அவர்களைப் பாராட்டு முகமாக 15ம் திகதி ஓர் விருந்துபசாரத்தை நடாத்த ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

## மாணவர்களுக்கு படத்தில் நடிக்கத் தடை

பள்ளி மாணவர்கள் திரைப் படங்களில் நடிப்பதை காஷ்மீர் அரசாங்கம் தடுத்திருக்கிறது. "பீர் ஹுஹி தில்லாயா ஹூன்" என்ற படப்பிடிப்பில் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டதைத் தொடர்ந்தே காஷ்மீர் அரசாங்கம் இத்தடையை விதித்திருக்கிறது.

காஷ்மீரில் வெளிப்புறக் காட்சிகளைப் படமாக்கிய போது சில்லறை நடிகர்கள் தேவைப்பட்டனர். அப்போது சில மாணவர்களிடம் தயாரிப்பாளர்கள் தங்கள் தேவையைக் கூறினார். உடனே மாணவ மாணவியர் படை தயாரிப்பாளர் முகாமை மொய்த்துவிட்டதாம்.

சில நாட்கள் சில பள்ளிக்கூடங்களில் தொடர்ந்து வகுப்புகள் நடத்த முடியாமற் போய்விட்டதாகக் கூறப்படுகிறது. காஷ்மீர அரசாங்கத்துக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் இவ்வுத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

## கலைப் பூஞ்சோலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவனிடம் சென்றவளை 'திருடி' என்ருள் மாமி

ஒரேயடியாக அடம் பிடித்துஅழுது கொண்டிருந்த குழந்தையை அவள் அரவணைத்து உறங்க வைத்து விடுகிருள். ஆனல் அவள் கண்களோ தூங்க மறுத்து விட்டன. குழந்தை அருகிலேயே புரண்டு புரண்டு படுத்துப்பார்த்தாள் கொஞ்சமும் கண்ணயர முடியவில்லை.

கணவனுடன் தனிக்குடித்தனம் நடத்திய காலத்தை எண்ணிப்பார்த்தாள். உடல் புல்லரித்தது. மெதுவாக எழுந்தாள். பூனைபோல்பதுங்கிப் போய் மாடிப்படி வழியாக அந்த அறையை அணுகினுள். பயமும் பதட்டமும் மேலிட்டதால் அவளுடைய கைகள் அந்த மேசைக்கு மேலிருந்த பூச்சாடி மேல் பட்டு விட்டன.

'தடார்' என்ற ஒலி இருளுடன் கலந்து பேரமைதியைக் கலைத்துக் கொண்டு எழுந்தது. 'திருடன்', 'திருடன்' என்ற கூக்குரலும் கூடவே எழுந்தது. திருட்டுப் பட்டம் சூட்டிய குரலே ஓடோடி வந்து அவளை நன்ருகத் தாக்கத்தொடங்கியது. கை ஒயுமட்டும் குரலுக்குடையவள், அவளுடலைப் பதம் பார்த்தாள். காலால் உதைத்து உருட்டினுள். மாடிப்படிக் கட்டுகளால் அவள் உருண்டாள்.

இந்தச்சந்தடி,படுக்கையில் புரண்டு கொண்டிருந்த அவளுடைய கணவனையும் எழுப்பிவிட்டது. மின் விளக்கை ஏற்றிக் கொண்டு ஓடோடி வந்து பார்த்தான். படிக்கட்டிலே உருண்டு பரிதாபகரமாகக்கிடந்தாள் அவன் மனைவி. பத்திரகாளி உருவுடன் படபடத்து நின்ருள் அவன் தாய்.


மாமிக்குத்தெரியாமல் தன் கணவனின் அறையை நெருங்கப்போன அந்த அபலைக்குக் கிடைத்த வெகுமானம், யார் நெஞ்சைத் தான் உருக்காது?

மேற்கொண்டுஎன்னவெல்லாம் நடைபெறுகின்றன



என்பதை ஸ்ரீ புரடக்ஷன்ஸ் தயாரித்து வரும் 'கொடி மலர்' முடிவடைந்தால் தான் அறிய முடியும். இன்றைய படப்பிடிப்பின் போக்கிலிருந்து மாமியின் கொடூரங்களை மையமாகக் கொண்டதாகக் கதை இருக்குமென எண்ண வேண்டியிருக்கிறது.

கணவனுக முத்துராமனும் மனைவியாக விஜயகுமாரியும் மாமியாக எம். வி. ராஜம்மாவும் தோன்றுகின்றனர். சாரதாப் படப்பிடிப்பகத்தில் வளரும் இப்படத்தின் கதை, வசனம், டைரக்ஷனை ஸ்ரீதர் கவனிக்கிருர்.



எழில் பூத்துக் குலுங்கும் சோலையில் ஏகாந்தமாக ஆடும் இம் மங்கை நல்லாளின் எழிலை அள்ளிப் பருக எவரையும் காணவில்லையே! சிலோன் என்டர்டெயின்மென்ட்ஸ் திரைகளில் விருந்தளிக்கும் ஏ. எல். எஸ். 'சாந்தி'யில் தேவிகா இப்படித் தோன்றுகிருர்.

## வானெலிக் கலைவிழா

இலங்கை வானெலி நிலையத்தினர் மட்டக்களப்பில் 29-7-65ல் பெரியோர்களுக்கான கலைவிழாவையும் 30-7-65ல்சிறுவர்களுக்கான கலைவிழாவையும் நகரமண்டபத்தில் நடாத்தி ஒலிப்பதிவு செய்தனர்.

மாஸ்டர் சிவலிங்கம் வில்லுப் பாட்டுக் குழு, திமிலை நளினி கலா மன்றம், கிழக்கிலங்கை இசைநடனக் கலைக் கோயில், தமிழ்க் கலா மன்றம், நடமாடி நாடக மன்றம், வின்சன்ற் மகளிர் மன்றம் முதலியன பங்குகொண்டன.

இரண்டாவது நாள் நடைபெற்ற சிறுவர் கலைவிழாவில் வின்சன்ற் மகளிர் கல்லூரி, அரசினர் கல்லூரி, அர்ச் சிசிலியா மகளிர் பாடசாலை, சிறுவர் கலைக் கழகம், அரசடிப் பாடசாலை, சிவானந்த வித்தியாலயம், ஆனைப்பந்தி பெண் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.


இருதின விழாக்களிலும் இலங்கை வானெலி தமிழ் நிகழ்ச்சி அதிகாரி திரு. கே. எஸ். நடராஜா, நாடகப் பகுதித் தலைவர் 'சானு', [illegible] [வானெலி அக்கா] ஜனட் கபூர், திரு. [illegible] ஆகியோர் கலந்து கொண்டனர்.

## நீர் வர்ண ஓவியக் காட்சி

அமெரிக்க ஓவியர்கள் பதினுன்கு பேரின் நீர் வர்ண ஓவியங்கள் கொழும்பு லயனல் வென்ற் காட்சிக் கூட்டத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. கடந்த 3-ம் திகதி மாலை இக் காட்சியை இலங்கை அரசாங்க நுண் கலைக் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஸ்டான்லி அபயசிங்கா திறந்து வைத்தார். 11-ம் திகதிவரை இக் காட்சி மாலை வேலைகளில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருக்கும்.



பூப்போன்ற மேனியளைப் பிடித்துக்கொண்டு கொடிய கத்தியையும் காட்டிப் பயமுறுத்தும் இந்த முரடன் யார் என்று தெரிகிறதா? அவன்தான் முரடன் முத்து. சினிமாஸ் திரைகளுக்கு வரும் 'முரடன் முத்து' படத்தில் சிவாஜிகணேசனும், தேவிகாவும்.



சினிமாஸ் லிமிட்டெட் தயாரித்துவரும் சிங்கள நகைச்சுவைச் சித்திரமான 'சுட்டன்டியோ' முடியுந்தறுவாயிலுள்ளது. சிவானந்தனின் டைரக்ஷனில் உருவாகும் இப்படத்தில் அந்தனி பெரேராவும், சந்தியாகுமாரியும் தோன்றும் ஒரு காட்சி.

# லவகுசா
# நீதிக்குப் பின் பாசம்
## இலவச குறுக்கெழுத்துப் போட்டி
## விடைக் 'கூப்பன்'

——இவ்விடத்தில் கத்தரிக்கவும்——

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ரா | 2 ம | ச் | 3 ச | ந் | தி | 4 ர | 5 ன் |
| 6 க | | ■ | | ■ | ■ | 7 | ணா |
| 8 வா | | ■ | 9 | ன | 10 | ■ | |
| ■ | பி | ■ | தே | ■ | 11 மி | 12 | கு |
| 13 வ | ஷே | ■ | | ■ | | ரு | |
| | | 14 | ■ | ■ | வா | மு | ல |
| 15 க | | | ன் | ■ | ■ | | |
| | ■ | 16 அ | ற் | | த | | ■ |

முழுப் பெயர்........................................

முகவரி........................................

........................................

........................................

லவகுசா அல்லது நீதிக்குப் பின் பாசம் திரையிடப்பட்டுள்ள, நீங்கள் படம் பார்க்க வசதியாக உள்ள.........

........................ தியேட்டரின் பெயர்

........................ ஊர்

........................ கையொப்பம்

........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்........................

## இடமிருந்து வலம்

1. லவ, குசன் இருவருக்கும் தந்தையாகியவருடைய பெயரைத் தாங்கியவரே 'நீதிக்குப்பின் பாசம்' படத்தின் கதாநாயகனுகத் தோன்றுகிருர்.

6. இராமருடைய மிகச் சிறந்த நண்பர்களுள் ஒருவரான குகன் உருமாறி, சிதைந்து நிற்கிருர்.

7. இராமனுடைய நல்ல—குறைந்து விட்டது.

8. தன் அருமை நண்பனைப் படம் பார்க்கச் செல்வதற்கு இப்படியும் ஒருவன் அழைப்பான்.

9. சீதைக்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.

11 மேலதிகமாக உள்ள பொருள் மாறி விட்டது.

15. இராமாயணத்தைத் தமிழில் பாடிய கவிச்சக்கரவர்த்தி இவர்.

16. 'லவ குசா' படத்தைப் பார்த்தவர்கள் இப்படிப் பலமுறை கூறிப் புகழ்ந்தார்கள். நீதிக்குப் பின் பாசத்தைப் பார்த்ததும் இப்படியே தான் கூறுவார்கள்.

## மேலிருந்து கீழ்

1. இராமனை இப்படியும் அழைப்பார்கள்.

2. லவகுசா வரலாறு இராமருடைய — வைபவத்துடன் தான் ஆரம்பமாகிறது.

3. 'நீதிக்குப் பின் பாச'த்தில் தோன்றும் நடிகை.

4, இராமன்—வம்சத்தைச்சேர்ந்தவன்.

5. இராமனின் தம்பி தலைகீழாக நிற்கிருர்.

10. இராமாயணத்தை முதலில் எழுதியவரும் லவகுசரை வளர்த்தவருமான இந்த குரு சிரேஷ்டர் தலைகீழாக நின்று தவம் புரிவதற்கான காரணம் புரியவில்லை.

12. 'நீதிக்குப் பின் பாசம்' படத்தின் இயக்குநர் இவர்.

13. சுப்பிரமணிய பாரதியாரை இத்தகையவர் என்று கூறுவார்கள்.

14. சீதையின் பரிதாபமான நிலையை எண்ணி, அவளைப் பலர் தலைகீழாகவுள்ள இந்தச்சொல்லால் வர்ணிப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்க் கட்சிகளை அழிக்க நினைப்பது சனநாயகமல்ல

## பாராளுமன்ற முறை பற்றி அறிஞர் அண்ணா பேச்சு

வெளி நாடுகளில் சனநாயகத்தின் அருமை பெருமைகளை உணர்ந்திருக்கும் அளவுக்கு இந்தநாட்டில் ஆளும் கட்சியினர் உணரவில்லை! இதற்குக் காரணம் இங்கே போராடாமல், இரத்தம் சிந்தாமல், புரட்சி செய்யாமல் சனநாயக முறை நமக்குக் கிடைத்திருப்பதுதான்! இதனால்தான் சனநாயகத்தின் அருமை பெருமைகளையும் உணர முடிவதில்லை!

கட்டிய வீட்டிற்கு பழுது சொல்லுவது இயற்கை! சுலபமும் கூட! அதைப் போல எத்தனையோ நாடுகளில் எத்தனையோ விதமான புரட்சிகளை செய்து இந்த முறையைப் பெற்றார்கள்! இதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்! பிரான்ஸ் நாட்டில் அமளிக்கும், கொந்தளிப்புக்கும், ரத்தப் புரட்சிக்கும் பிறகே இந்த சனநாயக முறை கிடைத்திருக்கிறது! நமக்கோ இந்தத் தொல்லைகள் எதுவும் ஏற்படவில்லை! எதுவும் ஏற்படாமலேயே இந்த சனநாயக முறை ஒப்படைக்கப் பட்டதால் இது ஏதோ பூர்வீகசொத்து என்று எண்ணி நடக்க ஆரம்பித்திருக்கிறார்கள்!

### எது சனநாயகம்?

வானவெளியில் நடப்பதை ஆச்சரியமாகக் கருதாமல்—விருத்தாசலத்திற்கு அருகில் ஒரு சாமியார் பல வருடங்கள் சாப்பிடாமல், குளிக்காமல் இருக்கிறார்—அவரைப் போய்ப் பார்த்தால் தரித்திரனும் கோடீசுவரனாவான் என்று கூறினால் அதை நம்பும் நாடு இது! இதனால் தான் சனநாயக முறையின் பெருமையையும் உணர முடியாமல் இருக்கிறோம்! இதைப் பார்க்கும் போது சனநாயக முறை வரக்கூடாத இடத்திற்கு வந்து விட்டதோ என்று அஞ்சுகிறேன்!

அருமையான பொருளை உணராதவர்கள் போல நடக்கிறார்கள், ஆளும் கட்சியினர்! இல்லாவிட்டால் சனநாயக முறையை ஏற்றுக்கொண்டு விட்டு, அதே மூச்சில் எதிர்க்கட்சிகளை ஒழித்துக் கட்டுவேன், அழிப்பதே எங்கள் வேலை என்று கூறத் துணிவார்களா?

பாராளுமன்ற முறையை ஏற்றுக்கொண்ட மற்ற நாடுகளில் ஆளும் கட்சிக்கு எதிராக பல எதிர்க்கட்சிகள் இருக்கின்றன! அந்தக் கட்சிகளை ஆளும் கட்சி சகித்துக் கொண்டுதான் இருக்கிறது! எதிர்க்கட்சிகளைப் பார்த்து அழிப்பேன், ஒழிப்பேன் என்று மேல் நாட்டிலுள்ள எந்த ஆதிக்கக் கட்சிகளும் மிரட்டுவதில்லை! இங்கே தான் எதிர்க்கட்சிகளை ஒழித்துவிட்டு மறு வேலை பார்ப்பேன்! எதிர்க்கட்சிகளை அழிக்கிற வரையில் எங்களுக்கு உறக்கமே இருக்காது' என்று முழக்குகிறார்கள்!

### முடியாட்சியா?

பாராளுமன்ற முறையே ஒருவருக்கு ஒருவர் போட்டியிட்டு யார் வெற்றி பெறுகிறார்களோ அவர்கள் தான் ஆட்சிக்கு வர வேண்டும் என்பது நியதியாகும்!

இங்குள்ள நிலைமையை நாம் பார்க்கும் போது முடியரசு காலத்தின் நிலைதான் எனக்கு நினைவுக்கு வருகிறது!

அரசனின் மூத்தபிள்ளை தான் பட்டத்திற்கு வர வேண்டும்! மற்றப் பிள்ளைகள் அரசனின் பிள்ளைகளாக இருந்தாலும் அந்தப் பிள்ளைகள் பக்கத்தில் இருக்க வேண்டியவர்களே தவிர பட்டத்திற்குரியவர்கள் அல்ல என்பது முடியரசின் முறையாகும்!

இந்த முடியரசு எண்ணம் கொண்ட ஆட்சி—ஆளும் கட்சியின் அடித்தளத்தில் இருப்பதால் மற்ற கட்சிகள் அத்தனையும் வெறும் கட்சிகளாகத்தான் இருக்க வேண்டும், தங்கள் கட்சி மட்டுமே ஆட்சிக்கு உரிய கட்சி என்று எண்ணுகிறார்கள்! இந்த மனப்பான்மை அடியோடு மாற வேண்டும்!



சொந்தக் கட்சியை கலைத்து விட்டு லாபக் கட்சியை தேடும் நிலை வெளி நாடுகளில் இல்லை! இங்கே அப்படிப்பட்ட கட்சிகள் இருப்பதை நீங்கள் பார்க்கிறீர்கள்!

### பிரச்சினையை மாற்றுவது ஏன்?

'அண்ணாதுரை அடிக்கடி பிரச்சினையை மாற்றி மாற்றிப் பேசுகிறானே—மொழிப் பிரச்சினையை விட்டு விட்டு, உணவுப் பிரச்சினையைப் பேசுகிறான்—உணவுப் பிரச்சினையை விட்டு விட்டு தேர்தல் பிரச்சினையைப் பேசுகிறான்—தேர்தல் பிரச்சினையை விட்டு விட்டு பொதுசனவாக்கு என்கிறான்' என்று ஆளும் கட்சிக்காரர்கள் எரிச்சல் கொள்ளுகிறார்கள்!

நான் மாறி மாறி பல பிரச்சினைகளைப் பற்றி பேசுவதற்குக் காரணம் எல்லா பிரச்சினைகளையும் பொது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்!

திராவிட முன்னேற்றக் கழகம் இதை அரசியல் வகுப்பு போலவே நடத்துகிறது! மக்களின் சிந்தனையைக் கிளறிக் கொண்டிருப்பது எங்கள் பணியாகும்! மற்றவர்கள் கட்சியின் அடிப்படையில் பேசுகிறார்கள்! தி.மு.கழகத்தைப் பொறுத்த வரையில் கட்டிடமில்லாத அரசியல் கல்லூரியாக மாற்ற வேண்டும் என்பது தான் என் எண்ணமாகும்! அது நல்ல பலனையும் கொடுத்துள்ளது!

நம்முடைய நிலையை நினைக்கும் போது எனக்கு ஒரு கதை தான் நினைவுக்கு வருகிறது!

### வேதாந்தி, வைத்தியர், சங்கீத வித்துவான்

ஒரு வேதாந்தி, ஒரு சங்கீத வித்துவான், வைத்தியர் இந்த மூவரும் ஒரு அரசனுடைய அரண்மனையில் விருந்தினராகத் தங்கி தாங்களே சமைத்துச் சாப்பிட [illegible] டார்கள்!

சாமான் வாங்கிவர வைத்தியர் சென்றார்! சமையல் வேலையைச் சங்கீத வித்துவான் மேற்கொண்டார்!

சாமான் வாங்கச் சென்ற வேதாந்தி நெய்க்கு தொன்னை ஆதாரமா? தொன்னைக்கு நெய் ஆதாரமா? என்ற ஆராய்ச்சியில் இறங்கி நெய்யைக் கொட்டி விட்டுஊரை விட்டே ஓடினார்!

காய்கறி வாங்கச் சென்ற வைத்தியர் கத்தரிக்காய் சூடு கறப்பான் வரும், முள்ளங்கி குளிர்ச்சி அது உதவாது என்று ஒரு கறிகாயும் வாங்காமல் திரும்பிவிட்டார்!

வீட்டிலே உலையை வைத்து விட்டு கடைக்குப் போனவர்களுக்காக காத்திருந்த சங்கீத வித்துவான் கொதிக்கும் உலையில் எழும்புகிற ஒருவித தாளத்திற்கு ஏற்றபடி பாடத் தொடங்கினார்! தாளம் தப்பவே ஆத்திரப்பட்டு கொதி உலையைத் தடியால் அடிக்கவே அதுவும் உடைந்தது!

இதைப் போலவே காங்கிரஸ் கட்சியின் கேடுகளை உணர்ந்தும் தேர்தல் நேரத்தில் யாருக்கு எந்தக் கட்சிக்கு வோட்டளிப்பது என்று தெரியாமல் மக்கள் குழப்பிக் கொள்கிறார்கள்! எந்தப் பயல் ஆண்டால் என்ன என்ற மனோபாவம் கூடாது! எந்தப் பயல் ஆளுகிறான் என்று கூட தெரியாத காட்டு ஆட்சிக்கா நாம் ஓட்டளிப்பது? பொது மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

### அவர்கள் வருவார்களா?

நண்பர்களே! காங்கிரஸ் கட்சியின் பாசிச பிடியிலிருந்து நாட்டை மீட்க வேண்டுமானால்எல்லா கட்சிகளும் ஒன்று சேர வேண்டும் என்று கூறினேன்! அந்த அடிப்படையில்தான் நாம் மற்ற கட்சிகளோடும் ஒத்துழைத்து வருகிறோம்!

அண்ணாதுரை பேசுகின்ற சோசலிசத்திற்கும், ராஜாஜி பேசுகின்ற தனி உடைமைக்கும் ஒத்துப் போகுமா என்று கேட்கிறார்கள்! அவர்களுக்கு நான் சொல்லுவேன், தொலைவில் இருந்தால் உனக்கு எப்படித் தெரியும், நீயும்தான் வந்து பாரேன்!

பக்தவத்சலம் சொல்லுகிறபடி தி. மு. கழகம் ஒழிந்து விட்டது என்றால்—ஒழிந்துவிடும் என்று மனதார நம்பினால் எதற்காக பொதுத் தேர்தலுக்காக ஊர் ஊராகச் சென்று பத்து இலட்சம், இருபது இலட்சம் என்று நிதி திரட்ட வேண்டும்! இது நம்பிக்கைத் துரோகம் அல்லவா?

எந்த அரசியல் வாதியானாலும் எடுத்துப் பேசுவது, குத்திப் பேசுவது, குறைகாட்டிப் பேசுவது, திட்டிப் பேசுவது தி. மு. கழகத்தைப் பற்றிதான்!

செய்கை சரியில்லை என்கிறார்கள், தலைமை சரியில்லை என்கிறார்கள்! சரியில்லாத தலைமைக்கே இவ்வளவு வளர்ச்சி என்றால்...சரி நீங்கள் வருகிறீர்களா என்றால் அந்த கட்சி எனக்கு ஒத்தது அல்ல என்கிறார்கள்!

விருந்துக்குஉன்னை அழைக்காத போது விழுந்த எச்சில் இலையைப்பற்றி எண்ணிப் பார்க்க உனக்கு ஏனோ இந்த ஆர்வம்!

### கட்சிகள்

சனநாயகத்தில் பல கட்சிகள் இருந்தேதீரும்! பல கட்சிகள் இருந்த போதிலும் பகையை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! பகையை வளர்த்துக் கொண்டு ஏசித் திரிந்து கொண்டிருந்தால் சனநாயக வாதிகள் சிரிக்கத்தான் செய்வார்கள்!

எந்தக் கட்சியிலும்அழுத்தமான கொள்கைப் பிடிப்பு இருந்தால் மற்ற கட்சிகளிடத்தில் பகைத்துக் கொள்ளாமல் பழக முடியும்! ஊரார் குழந்தைகளைக் கொஞ்சினால் நம் குழந்தைகளிடத்தில் பற்றுஇல்லை, பாசமில்லை என்பது பொருளல்ல!

பாராளுமன்ற முறை வெற்றி பெறுவதே பகைமையினால் அல்ல; ஒருவரோடு ஒருவர் மனம்விட்டு பழகுவதால்தான்! அவரவர் கொள்கைகளை கைவிடாமல் எல்லா கட்சிகளும் இப்படி பழகமுடியும்!

ஆனால் இந்த நாட்டில் இப்படிப்பட்ட நாகரிகம் படைத்த அரசியல் கட்சிகளை நாம் எப்படிப் பார்க்க முடியும்?

காமராசருக்கு இந்த அரசியல் நாகரீகத்தைப்பற்றி தெரியுமோ தெரியாதோ ஆனால் நம்மைத் தாக்கிப் பேசுவதை மட்டும் அவர் கைவிடுவதே இல்லை!

மாற்றுக்கட்சிக்காரரை தாறுமாறாகப் பேசி பகைத்துக் கொண்டால்தான் தங்கள் கட்சிக்காரர்கள் மாற்றுக் கட்சிக் கூட்டங்களுக்குச் செல்லமாட்டார்கள் என்று காமராசர் நினைக்கிறார் போலும்! கழகத்தின் பக்கம் காங்கிரஸ்காரர்கள் போய் விடுவார்களோ என்று அச்சப்படுகிறார் போலும்!

### யார் குற்றம்?

காமராஜர் பேசுகின்ற பேச்சுகளை பத்திரிகைகளில் படிக்கும்போது சிறுவயதில் நடந்த ஒரு நிகழ்ச்சிதான் என் நினைவுக்கு வருகிறது!

என்னுடன் படித்த சக மாணவனுக்கு பெண்பார்ப்பதற்காக நானும்கூட சென்றிருந்தேன்! வழியில் இன்னொரு நண்பன் தானும் வருவதாகக் கூறினான்! அவன் மாப்பிள்ளையைவிட அழகானவன்! உடனே மாப்பிள்ளையாகச் சென்ற மாணவனுக்கு பயம்வந்துவிட்டது! தன்னைவிட அழகான இந்த நண்பரை அழைத்துக் கொண்டு சென்றால் அந்தப் பெண் இவனைப் பார்த்து விட்டு தன்னை மணக்க மறுத்துவிட்டால் என்ன செய்வது என்று எண்ணினான்! நீ என்னிடம் வராதே என்று அவனிடம் சொல்லி, அவனை விடாதே என்று என்னிடமும் கூறினான்!

அதைப்போல தி. மு. கழகத்தின் கொள்கைகளை பின்பற்றிவிட்டால் என்ன செய்வது என்று காமராசர் பயப்படுகிறார்! தி. மு.கழகம் ஆட்சிக்கு வந்துவிட்டால் என்ன செய்வது என்று அச்சப்படுகிறார்!

இதனால்தான் நம்மை பாளையங்கோட்டையிலும், வேலூரிலும் அடைத்துவைக்கிறார்கள்? இதன் மூலம் நம்மை அடக்கிவிட முடியும் என்பது அசல் பைத்தியக்காரத்தனமாகும்!

(9-ம் பக்கம் பார்க்க)

## அழகு....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

அழகுக் குறிப்புகளைப்பற்றி அறிய முடிகிறது. குழந்தைகளுக்கு ஐம்படைத்தாலி என்ற அணியை அணிவித்தார்கள் என்பதை கலிங்கத்துப்பரணி, மணிமேகலை போன்ற இலக்கியங்களிலிருந்து உணரலாம். மகளிர் 'ஐம்பால்' கூந்தலைப்பற்றி பல இலக்கியங்களிலிருந்து உணரலாம்.

செம்பஞ்சுக் குழம்பால் கால்களை அழகுபடுத்திக் கொள்வதும், தோட்களில் தொய்யில் எழுதுவதும், நறுமண தைலங்களைத் தேய்த்துக் குளிப்பதும், மணம் வாய்ந்த நீராடற் பொடிகளைப் பயன்படுத்துவதும், தலைமயிரை நறுமணப்புகை முதலியன தடவி அழகுபடுத்துவதும், கண்களுக்கு மைதீட்டிக்கொள்வதும் தமிழகத்தில் மகளிர் மாட்டு இருந்து வந்த செயற்கை அழகுமுறைகளாகும். மேனாட்டார் தோலின் தோற்றத்தை அழகுபடுத்த திராட்சை மதுவிலும் பாலிலும் குளிப்பதுண்டு. விஞ்ஞான விந்தைகள் நிகழும் இக்காலத்தில் செயற்கை முறையில் பல அழகான காட்சிகள் நம்முன் திகழ்கின்றன. செற்கை அழகிலும் இன்பங் காணலாம்—ஆனால் இயற்கை அழகை அது எவ்வகையிலும் எட்டிப் பிடிக்க முடியாது.

'அழகுடைய பொருள்கள் என்றும் மகிழ்வைத் தரும்; அழகே உண்மை, உண்மையே அழகு. இதுவே உலகில் அறியவேண்டுவது' என்று கூறிப் போந்தார் கீட்ஸ், 'இயற்கைப் பொருள்கள் அனைத்திலும், அழகு மண்டிக்கிடக்கிறது. சிறு அணு முதல் கொண்டு பேருலகம் அனைத்தும் அழகாகவே காட்சியளிக்கின்றன. சிறியதும் ஆனால் பேரழகும் வாய்ந்தது மான 'டெய்சி' என்ற மலரையும் வைத்துக்கொண்டு கவிதை வரையலாம்—மகிழலாம். மலத்தைப்பொறுத்தவே அழகும் துய்க்கும்முறையும்' என்றார் உலக இயற்கைக் கவிஞர் வொர்ட்ஸ் வொர்த்.

—தமிழ்ச்செல்வி

## கல்வியே....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

மாணவிகளிடம் இடம் பெறும் அந்தரங்க உறவுகள் எல்லாவற்றிற்கும் காரணம் அந்தக் கூட்டுக்கல்விதவிர வேறொன்றும் இல்லை என்பதை நாம் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறியலாம்.

பக்குவமடையாத மாணவப் பருவத்தினருக்கு 'மாணவ ஆசிரிய' பதவிகளை இன்று அரசாங்கம் அளிக்க முன்வந்துள்ளது இதுவும் மென்மேலும் கேவலமான நடத்தைகள் பரவவே வழிவகுக்கும்.

நம் நாட்டைப்பொறுத்த வரையில் தனித்தனியே ஆண்களையும் பெண்களையும்படிக்க வைப்பதன் மூலம் தான் சிறந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கலாமே அன்றி கூட்டுக்கல்வியால் இது முடியாத காரியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதுமைகள் பாரீர் பாரினிலே- (50)

-அன்ரனி பெர்னுண்டோ, கிரிலப்பனே-

## நோயாளிகளைப் பற்றித் தகவல் தர ஒரு தனி நிலையம்

நோய்வாய்ப்படும்போது நாம் மருத்துவரிடம் போய் மருந்துவாங்கிக் குடித்துக் குணமடைகிறோம். நமது பெயர், நோயின் வகை, செய்யப்பட்ட சிகிச்சைகள், கொடுத்த மருந்துகள் முதலான விபரங்களை மருத்துஉர் ஓர் இடாப்பில் பதிந்து கொள்கிறுர்.

பல ஆண்டுகள் கழிந்தபின் நாம் மீண்டும் அதே மருத்துவரிடம் போவதாக வைத்துக்கொள்வோம். அப்போது, அவர் முன்பு முதிவைத்த விபரங்களைத் தேடியெடுத்துப் பார்த்தபின்பே நம்மைச் சோதித்து மருந்து தருகிறுர். பழைய விபரங்களைச் சுலபமாகக் கண்டு பிடிப்பதற்காகவே 'மறுமுறை வரும்போது கொண்டு வாருங்கள்' என்று அவற்றிற்குரிய பதிவு எண் அச்சிட்ட ஒரு துண்டை மருத்துவர் நமக்குத் தருகிறுர்.

தினமும் மருத்துவ நிலையங்களில் வந்து குவியும் நோயாளிகளின் தொகை இப்பொழுது பெருகிக் கொண்டே போகிறது. எனவே, குறிப்பிட்ட ஒருவரின் நோயைப்பற்றிய பழைய விபரங்களைத் தேடியெடுப்பதற்கு எவ்வளவோ காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்ப்பதற்கு நோயாளிக்குரிய பதிவு எண்ணை ஒரு கருவியில் சுழற்றுவதன் மூலம் வேண்டிய தகவல்களைத் தாமதமின்றி உடனுக்குடன் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரு புதிய முறை விரைவில் அமுலுக்கு வரலாமென அமெரிக்க அறிவர்கள் கருதுகின்றனர்.

இப்புதுமுறையை அமுல் செய்வதற்கு முதலில் எலெக்ட்ரோனிக் சாதனங்கள் மூலம் நோயாளிகள் பற்றிய தகவல்களைப் பதிவு செய்து வைக்கும் மத்திய நிலையமொன்று அமைக்கப்படும். முக்கிய மருத்துவ நிலையங்கள் எல்லாம் அங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளிகளைப் பற்றிய தகவல்களை இந்த மத்திய நிலையத்தில் பதிவுசெய்து வைக்கும். அங்கிருந்து தகவல் பெறும் கருவிகள் எல்லா மருத்துவ நிலையங்களிலும் வைக்கப் பட்டிருக்கும். தனிப்பட்ட மருந்துவர்களும், மருத்துவரின் அறிக்கைகளைப் பெறுவதில் அக்கறையுள்ள காப்புறுதி நிறுவனங்களைப் போன்ற ஏனைய பல நிறுவனங்களும் இந்தத் தகவல் பெறும் கருவிகளை வைத்துக் கொள்ளலாம்.

ஒரு மருத்துவரிடம் செல்லும் நோயாளி முன்பு வேருெரு மருத்துவரிடம் சிகிச்சை பெற்றிருந்தால், தனக்குரிய பதிவு எண்ணைப் புதிய மருத்துவரிடம் கொடுக்க வேண்டியதுதான். புதிய மருத்துவர் தகவல் பெறும் கருவியில் அந்த எண்ணைச் சுழற்றி நோயாளியைப் பற்றிய முழுவிபரங்களையும் கணப்பொழுதில் பெற்றுவிடுவார்.

ஒரு பெரிய வர்த்தக நிறுவனத்தில் வேலை செய்யும் ஓர் ஊழியரின் தேகநிலை பற்றிய அறிக்கை அந்த நிறுவனத்திற்குத் தேவைப்படுகிறதென வைத்துக் கொள்வோம். அவர்களும் குறிப்பிட்ட ஊழியருக்குரிய எண்ணைச் சுழற்றி தகவல் பெறும் கருவி மூலம் உடனே அதைப் பெற்றுக்கொள்ளலாம்.

காப்புறுதி அளிக்கும் நிறுவனங்கள் தம் வாடிக்கையாளரின் மருத்துவ அறிக்கைகளை இனி அலுமாரிகளில் அடுக்கிவைக்கத் தேவையில்லை. அவர்களும் வேண்டும்போது எண்களைச் சுழற்றி அதை எளிதில் பெறமுடியும் தானே. பலருக்கும் பல துறைகளிலும் பயன்படக்கூடிய இப்புதுமையான முறை அதிவிரைவில் வரத்தான் போகிறது என்கின்றனர் அமெரிக்க அறிவர்கள்.

## நன்றி

புதுமைகள் பாரீர் பாரினிலே என்ற தொடர் ஐம்பதாவது கட்டுரையுடன் முடிவடைந்துவிட்டது. இந்த ஐம்பது கட்டுரைகளையும் கவர்ச்சியாக வெளியிட்ட 'வளர்மதி'க்கும், அவற்றைப் படித்துச் சுவைத்த வாசகர்களுக்கும், பாராட்டி எழுதியவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன். மேலும், இக்கட்டுரைகளை எழுதுவதற்குத் துணையாகப் பல புத்தகங்களையும், இதழ்களையும் அனுப்பி உதவியதோடு தொடர்ந்தும் அனுப்பிக் கொண்டே இருக்கும் அமெரிக்கா, இத்தாலி, இந்தியா, கனடா, கானு, சீனு, சோவியத்ருஷியா, பிரான்ஸ், பிரித்தானியா முதலான நாடுகளின் தகவல் பகுதிகளுக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

அன்ரனி பெர்னுண்டோ.

# வளர்மதி வளர...!

வளர்மதியில் ஆராய்ச்சிப் படைப்புக்களும், புவியியல் சம்பந்தமான விடயங்களும் சேர்த்துக் கொண்டால் வெகு பிரமாதமாக இருக்கும்.

வழக்கமாக இடம்பெறும் அம்சங்களான தொடர் கதை, கட்டுரை, கவிதை, அறிவியல் விஞவிடைகள், புதுமைகள் பாரீர் பாரினிலே, சின்ன வயதில்......!, எனது கிராமம், விடுகதைகள், என்பனவும் இடம் பெறல் வேண்டும். அத்தோடு கிராமிய இலக்கியங்களும், சரித்திரப் பின்னணியைக் கொண்ட கதைகளும், நாடகங்களும் இடம் பெறுதல் வேண்டும்.

மேற்கூறிய விடயங்களைப் பெரும் பாலும் வளர்மதி உறுப்பினர்களிடமிருந்தே எதிர் பார்க்க வேண்டும்.

நல்லதரமானஎழுத்தாளர்களைக் கொண்டு மேற்கூறியவற்றை எழுதுதல் நன்றன்று' ஏனெனில், வளர்மதி இளம் எழுத்தாளர்களைத் தோற்றுவிக்க இம்முயற்சி சந்தர்ப்பமளிக்காது.

குறிப்பாக 'செங்கையாழியான்,' மாஸ்டர் சிவலிங்கம்' போன்ற பிரபல எழுத்தாளர்களின் படைப்புகளை அதிகமாக வெளியிடாது.... ......அத்தோடு 'பேனுநண்பகள்' என்ற புதிய பகுதியை உருவாக்கி வளர்மதி உறுப்பினர்களைத் தொடர்பு படுத்துவதும் நல்லதாக இருக்குமென எண்ணுகின்றேன்.

மதியரசு,
செட்டிநகர்.

# அதிசயம் கேளீர்!

### எண்ணெய் ஊற்றுகள்

ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் உள்ள கஸ்பியன் கடலையடுத்த பகுதிகளில் எண்ணெய் ஊற்றுகள் அனேகம் இருக்கின்றன. உஷ்ணமான காலங்களில் இவை ஆவியாகி தீப்பற்றிக் கொள்வதும் உண்டு. இவ்வூற்றுகளிலிருந்து தினமும் பத்தாயிரம் கலன் எண்ணெய் எடுக்கிருர்கள்.

### கல்லாக்கும் ஊற்று

இங்கிலாந்தில் 'யோர்க்ஷயர்' என்ற மாகாணத்தில் 'நரேஸ்பரோ' என்ற நகரம் உண்டு. அங்கு ஓர் கிணறு உண்டு அதன் மேலுள்ள குன்றிலிருந்து மழை போன்று நீர்த்துளிகள் அக்கிணற்றுள் விழுகின்றன. அக்கிணற்று நீரில் நனைக்கப்படும் பொருட்கள் கல்லாகி விடுகின்றனவாம். அற்புதமான இச்செயலை பார்க்கச் செல்பவர்கள் இலை, புல், தழை, பூண்டுகளை அதில் நனைத்துச் செல்கிருர்கள். அதில் துணிகளை நனைத்தாலும் அவை கல்லாகி விடுகின்றனவாம்.

### வெறி ஊற்று

இந்திய தேசத்தின் வடக்கே மத்திய மாகாணத்திலே கண்டுவா என்னும் நகரமுண்டு. அங்கே ஓர் கிணற்றிலிருந்து பால் போன்ற வெள்ளை நிறமான நீர் ஊறுகின்றது. அந்த நீர் சாராயத்தைப் போல குடிப்பவர்களுக்கு வெறியை உண்டு பண்ணுகின்றது.

தொகுத்தவர்:.

சி. சண்முகலிங்கம்,
திருகோணமலை.

# 'ஆறுகால் மடம்' பரிசுப் போட்டி

### போட்டி 1

விமர்சனப் போட்டி: 'ஆறுகால்மடம்' தொடர் கதையின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டி மதிப்பிடுதல். இதில் கதை, எழுத்து, நடை, கதாபாத்திரங்கள், சம்பவங்கள், வருணனைகள் முதலியவற்றின் தன்மைகளை விபரிக்கலாம்.

### போட்டி 2

'ஆறுகால் மடம்' தொடர் கதையில் உமக்குப் பிடித்த கதாபாத்திரம் எது? ஏன் அக்கதாபாத்திரம் மட்டும் உமக்குப் பிடித்தது?

உங்கள் கவனத்திற்கு:

- ★ வளர்மதி வாசகர்கள் அனைவரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.
- ★ இரு போட்டிகளிலும் ஒருவர் ஒரே பெயருடன் கலந்து கொள்ளலாம். ஆனுல், புல்ஸ்காப்' தாளின் இருபக்கங்களுக்கு மேல் எழுதக் கூடாது; தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதவேண்டும்.
- ★ ஒவ்வொரு போட்டிக்கும் மும்மூன்று புத்தகப் பரிசில்கள் உண்டு.
- ★ இப்போட்டிகள் பற்றி எத்தகைய கடிதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது. மாமாவின் தீர்ப்பே முடிவானது.
- ★ போட்டியிற் பங்கு பற்றுபவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி ஆகிய தகவல்களை தனியே ஒரு தாளில் எழுதி கட்டுரைகளுடன் இணைக்க வேண்டும்.
- ★ 31-8-65ம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கட்டுரைகள் பரிசிலனைக்கு எடுக்கப்பட மாட்டாது.
- ★ கீழேயுள்ள முகவரியைக் கத்தரித்து ஒட்டி அனுப்பும் கட்டுரைகள் மட்டுமே பரிசிலனைக்கு எடுக்கப்படும்.

'வளர்மதி மாமா'
மே/பா சுதந்திரன்
த. பெ. எண், 1183
கொழும்பு.

# யார் இந்த அன்ரனி பெர்னுண்டோ!



'புதுமைகள் பாரீர் பாரினிலே' என்ற தலைப்பில் கடந்த ஒரு வருட காலமாக பல சுவையான விடயங்களை எழுதி வந்த செல்வன் அன்ரனி பெர்னுண்டோவை அறிமுகப்படுத்தி வைக்க வேண்டியது எனது கடமையாகும்.

கொழும்பில்உள்ள வர்த்தக நிறுவனம் ஒன்றில் எழுதுவினைஞராகக் கடமையாற்றும் இளைஞர் ஸ்டிவன் அன்ரனி பெர்னுண்டோ சிறந்த அறிவியற் கட்டுரைகள் பலவற்றை ஈழத்துப் பத்திரிகைகளில் எழுதியுள்ளார். மொரட்டுவை அர்ச். செபஸ்தியார் கல்லூரி, கொழும்பு இந்து கல்லூரி, தேர்ஸ்டன் கல்லூரி ஆகியவற்றில் பயின்ற இவர் ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் எழுதும் ஆற்றலைப் பெற்றுள்ளார்.

சிங்கள இலக்கியத்தில் புகழ்பெற்ற நகைச்சுவை மன்னன் அந்தரேயின் நாடோடிக் கதைகளை முதல் முதலாகத் தமிழில் மொழி பெயர்த்த பெருமை இவருக்குண்டு. மொழி பெயர்ப்பு, அறிவியற் கட்டுரைகள், சமயக் கட்டுரைகள், குழந்தைகளுக்கான கதைகள் எழுதுவதே இவரின் பொழுது போக்காகும். நகைச் சுவைக் கட்டுரைப் போட்டிகளில் பங்கு கொண்டு பல பரிசில்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அறிவியல் ஆராச்சி பற்றிய நூல்களைக் கற்பதில் அதிக ஈடுபாடுள்ள இவர் டாக்டர் மு. வரதராசனின் நூல்களைக் கண்டால் எல்லாவற்றையும் மறந்து விடுவாராம். அந்தளவுதாரம் மு. வரதராசனின் நூல்களில் இவருக்கு ஈடுபாடுண்டு. ஆங்கில நகைச் சுவை எழுத்தாளரான மார்க்குவைனின் எழுத்துக்களிலும் இவருக்கு நிறைய ஈடுபாடுண்டு.

கொழும்பு மாவட்டத்தையே பிறப்பிடமாகக் கொண்ட செல்வன் அன்ரனி பெர்னுண்டோ மன்றங்கள் அமைத்து பொதுத் தொண்டு செய்வதிலும் யாருக்கும் சளைத்தவரல்ல. கிரிலப்பனை செந்தமிழ் வளர்ச்சி மன்றத்தை நிறுவி அதன் தலைவராக சிலகாலமும், செயலாளராக பலகாலமும் பணியாற்றியுள்ளார். இப்பொழுது இம் மன்றம் நடாத்தும் திருக்குறள் பாடசாலை ஆசிரியர் குழுவில் ஒருவராக இருக்கிருர்.

பாரினில் நடக்கும் புதுமைகளை சிறந்த முறையில் தொகுத்துத்தந்த செல்வன் பெர்னுண்டோ மிக ஆண்மையில் மற்றுமொரு புதிய தொடரைத் தொடங்கவிருக்கிருர்.

வளர்மதி மாமா

கல்வியே கருந்தனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்சாகமூட்டும் 2வது மாதம்!



## செல்லமஹால் மற்றும் 6 திரைகளில்!

காதல் நடிப்பிலே ஓர் புரட்சியை உண்டுபண்ணியுள்ள புதுமைச் சித்திரம்!

# பூஜைக்கு வந்த மலர்



ஜெமினி—சாவித்திரி—முத்துராமன்—மணிமாலா — நாகேஷ்—மனோரமா-பண்டரிபாய்-சகஸ்ரநாமம்
முதலியோர் நடித்தது

## வெகு விரைவில் வருகிறது!

ஜனாதிபதியின் பரிசு பெற்ற ஒப்பற்ற வர்ண ஓவியம்!

கல்யாண்குமார்—சரோஜாதேவி மற்றும் பலர் நடித்த

# சிற்பியின் செல்வன் (ஈஸ்ட்மன் வர்ணம்)

---

## இப்பொழுது வெற்றிகரமாகக் காண்பிக்கப்படுகிறது!

சென்ட்ரல் (மருதானை) ★ ஈரோஸ் (பாமன்கடை) ★ ராணி (யாழ்ப்பாணம்)

தான் உள்ளத்தால் வரித்தவன் ஒருவனே தனது கணவன் என்பதை உள்ளமுருக்கும் வகையில் உணர்த்தும் குருட்டுப் பெண்ணின் உணர்ச்சி மயமான காவியம்!



ஒரு பெண் ?



இரு கணவரா ?



இந்தக் கேள்விக்கு விடையளிக்கிறது!

# ஏ. எல். எஸ். சாந்தி

தேவிகா—எம். ஆர். ராதா—நாகையா—நாகேஷ்—மனோரமா

வியாழன் 12ம் திகதி முதல்: ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்டி (ஹட்டன்) ஆனந்தா (கம்பளை)

வெள்ளி 13ம் திகதி முதல்: லிபேர்டி (பதுளை)

---

## மக்கள் போற்றும் 2வது வாரம்!



அறங் காக்கும் போர்...!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (சும்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பதுளை) விஜிதா (அட்டன்) தீபொளி (நுவரெலியா)

கல்யாணி (நாவலப்பிட்டி) இலட்சுமி (இரத்தினபுரி) அயன் (மன்னார்)



பதரத் துடிக்கும் பருவம்...!

தேவர் பிலிம்ஸ் அளிக்கும்

# நீதிக்குப்பின்பாசம்



நீதியைத் துலக்கும் நேர்மை...!

இசையமைப்பு: கே. வி. மகாதேவன் ● டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்



இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org